153/1-76

பாரதியாரின் பாதையிலே..



ம.பொ.சிவஞானம்



0-1MSU:9
N74;2
106708

பூங்கொடி பதிப்பகம்

பாரதியாரின் பாதையிலே...

சிலம்புச்செல்வர்
ம.பொ.சிவஞானம்

பூங்கொடி பதிப்பகம்

34. வடகூர் செல்வ விநாயகர் கோயில் தெரு,
மயிலாப்பூர் : : சென்னை-600004

முதற் பதிப்பு 11-9-'74

விலை ரூபாய் ஐந்தரை

குரு அச்சகம், சென்னை-600005.

முன்னுரை

"பாரதியாரின் பாதையிலே" என்னும் நூல் என்னை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் "செங்கோல்" வார இதழிலே பல்வேறு சந்தர்ப்பங்களில் நான் எழுதி வந்த கட்டுரைகளின் தொகுப்பாகும்.

பல்வேறு கோணங்களிலிருந்து பாரதியின் பாடல்களை ஆராய்ந்து நான் கண்ட முடிவுகளை இத்தொகுப்பில் வெளியிட்டிருக்கிறேன். பாரதியின் புலமைத் திறனையும், புரட்சிகரமான கொள்கைகளையும் தமிழகத்தார் அறிந்து கொள்வதற்கு இந்நூல் பயன்படுமென்று நம்புகிறேன்.

'சிலப்பதிகாரத் திறனாய்வு' உள்ளிட்ட என்னுடைய நூல்கள் சிலவற்றை வெளியிட்டு, புதிய தமிழகம் படைக்க நான் ஆற்றிவரும் பணிகளுக்குத் துணைபுரிந்து வரும் "பூங்கொடி பதிப்பகத்" தாரே இந்நூலையும் வெளியிடுவது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. அப்பதிப்பகத்தின் உரிமையாளர் திரு. வே. சுப்பையா அவர்களுக்கும் என்னுடைய பாராட்டுக்கள்.

ம. பொ. சிவஞானம்

பொருளடக்கம்

—–O—–

1. தெய்வ வள்ளுவரும் தேசியக் கவி பாரதியும் 5

2. பாரதியாரிடமும் முரண்பாடா? 33

3. பாரதியாரும் பாரதிதாசரும் 42

4. பாரதியார் கண்ட மகாகவிகள் 48

5. காலத்தை வென்ற கவி 65

6. பாரதி படைத்த பாரதீயம் 73

7. பாரதியாரும் விநாயகரும் 79

8. நவராத்திரி பற்றி பாரதியின் விளக்கம் 97

9. ருஷ்யப் புரட்சியைப் பாடியது எழுச்சியாலா, இனந்தெரிந்தா? 104

10. பாரதியாரும் சிதம்பரனாரும் 112

11. பாரதி கண்ட புதிய பாரதம் 119

12. பாரதியின் பாட்டு பகைவனுக்கு வேட்டு 130

தெய்வ வள்ளுவரும் தேசியக் கவி பாரதியும்

மகாகவி பாரதியார், 'யான்'— 'எனது' என்னும் ஆணவங்களிலிருந்து விடுபட்ட ஆன்ம ஞானி. ஆயிரஞ் செய்யுள்கள் பாடிக் குவித்த அந்தப் பாவலர், தமக்கு முன் தோன்றிய புலவர்களின் கவிதைகளையும் காப்பியங்களையும் போற்றிப் புகழ்ந்தார். அவர்களுடைய புலமையின் தரத்தையும் திறத்தையும் மதிப்பிட்டுப் பார்த்து, அவற்றை வெளிப்படுத்தும் வகையிலே அவர்கள் மீது கவிதைகள் புனைந்தார். தன்னை ஒரு தனிச் சக்தியாக அவர் கருதியிருக்க நியாயமுண்டு. உண்மையிலே, தமிழ்மொழி தந்த கவிஞர் மரபிலே அவர் ஒரு தனிசக்திதான்! அப்படியிருந்தும், வள்ளலார் பாடியது போல, வாழையடி வாழையென வந்த கவிஞர் கூட்டத்திலே தாமும் ஒருவரென்றே அவர் தம்மைக் கருதினர். ஆம்; தம் தாய் மொழியான தமிழிடத்து அவர் கொண்டிருந்த பற்று அந்த உயர் பண்பாட்டினை அவருக்குத் தந்தது.

பாரதியார், தாயுமானவரைப் பற்றித் தனியாக ஒரு கவிதை புனைந்தார். வள்ளலாரைப் பெருமைப் படுத்த 'களக்கமறப் பொதுநடனம்' எனத் தொடங்கும் அருட்பாவினை அரசியல் பாவாக மாற்றி அமைத்தார்.

திருவள்ளுவர் மீது தனிப் பா எதுவும் அவர் இயற்றவில்லை. தம் கவிதைகள் சிலவற்றிலே திருவள்ளுவரின்

புலமையை திறம்பட எடுத்துக் காட்டியுள்ளார். அதுவும், நான்கே இடங்களில்தான். அந்த நான்கு இடங்களிலும் இதைவிடவும் சிறப்பாக இன்னொரு புலவர் வள்ளுவரைப் புகழ்ந்துரைக்க முடியாது என்ற அளவிலே இமயமலையின் சிகரத்திலேயே அவரை ஏற்றிவிடுகின்ருர்.

"செந்தமிழ் நாடு" என்னும் சிறப்புமிக்க பாடலிலே,

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ் நாடு"

என்று குறிப்பிட்டுள்ளார். உண்மைதானே! வாழையடி வாழையென ஆயிரமாயிரம் புலவர்களைத் தமிழ்மொழி பெற்றிருப்பினும் நம் தாய்மொழிக்கு உலகப் புகழினைத் தேடித் தந்த பெருமை வள்ளுவருக்குத்தானே உரிமை. உயர் ஆரிய மொழியையும் சேர்த்து இந்திய மொழிகளில் பிறந்த இலக்கியங்களிலேயே தமிழ் மொழியில் திருவள்ளுவர் படைத்த திருக்குறள்தானே உலக மொழிகளில் எல்லாம் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. 'உலகப் புகழ்' என்னும் பொருளிலேயே "வான் புகழ்" என்னும் வாசகத்தைப் பயன்படுத்தியுள்ளார் பாரதியார்.

பாரதியார் தரும் புகழுரையிலே மிகைப்பாடு எதுவும் கிடையாது. வள்ளுவரின் புகழைக் குறைத்தும் மதிப்பிடவில்லை; கூட்டியும் புகழ்ந்திடவில்லை. பாரதியார் காலத்திற்குப் பின்னும் வள்ளுவர் புகழ் உலக அரங்கிலே வளர்ந்திருக்கக் காண்கிருேம். ஆம்; உலகத் தமிழ் மாநாடு என்னும் பெயரிலே இரு பெரும் மாநாடுகள் பாரதி மறைந்த பின்னர்தானே நடைபெற்றன! தமிழகத்தில் உள்ள முப்பெரும் பல்கலைக்கழகங்களுக்கு மும்மூன்று இலட்ச ரூபாய்கள் தந்து, திருக்குறள் ஆராய்ச்சி நடத்தத் திட்டமிட்டது பாரதியார் மறைந்த அரை நூற்றுண்டுக்குப் பின்னர்தானே! இப்படி, வள்ளுவர் புகழ் வளருந்தன்மையுடையது—

அதன் வளர்ச்சிக்கு ஒரு எல்லையே கிடையாது என்பதனை உணர்ந்த தீர்க்கதரிசி போல "வான் புகழ்" என்னும் வாசகத்தைப் பயன்படுத்தினர் பாரதியார்.

"தமிழ்" என்னுந் தலைப்புடைய பாடல், 'யாமறிந்த புலவரிலே... வள்ளுவர்போல்... பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை' என்று உறுதியான குரலில் கூறுகின்றார். அடுத்து, "உண்மை" என்று சத்தியமும் செய்கின்றார். "உண்மை" என்பதற்கு மற்றொரு பெயர் "சத்தியம்" என்பதுதானே! அதற்கு மேலும் "வெறும் புகழ்ச்சி இல்லை" என்று விளக்கம் தருகின்றார். ஆம்; வள்ளுவரின் புகழை உயர்த்திக் கூறிட தமிழிலேதான் வார்த்தை ஏது? சிந்தையும் மொழியும் செல்லா நிலையிலன்றோ வள்ளுவரின் புலமையும் புகழும் வளர்ந்து நிற்கின்றன. இதனை உணர்ந்தவே "உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை"—என்கிறார் பாரதியார்.

பாரதியார், வள்ளுவரை சாமான்ய மானிடராகவன்றி, தெய்வப் பிறவியாகவே கருதினர். தமிழ்த் தெய்வமே வள்ளுவன் உருவில் அவதரித்ததாக ஆவேசக் கவி பாரதி நம்பினர். இதனை, 'தெய்வ வள்ளுவன் வான்மறை செய்ததும்' என்னும் வாசகத்திலே வெளிப்படுத்தியுள்ளார். வான் புகழ் கொண்ட திருக்குறளை "வேதம்" என்றும் சொல்லுவர் புலவோர். இன்னுஞ் சிலர் "உத்தர வேதம்" என்றும் உரைப்பர். "பொதுமறை" "தமிழ் மறை" என்போரும் உண்டு. இவ்வளவையும் நினைவில் கொண்டவராகி, திருக்குறள் நூலை "வான் மறை" என்று புகழுகின்றார் பாரதியார். இது அவர் தந்துள்ள புதுப் பெயராகும்.

திருக்குறள் "கடவுள் வாழ்த்தி" லே மரணமிலாப் பெருவாழ்வு வாழ்வதற்கான வழியைக் கூறியுள்ளார் வள்ளுவர்— என்கின்றார் வள்ளற் பெருமான். இந்தக் கருத்து

வள்ளுவருக்குப் பின்புள்ள இரண்டாயிரம் ஆண்டுகாலத்திலே வள்ளலாரைத் தவிர வேறு புலவர் எவரும் கூருததாகும். வள்ளலாரின் இந்தக் கருத்தை, "தமிழ்ச் சாதி" என்னும் தமது பாடலிலே வலியுறுத்தி, அதற்கு விளக்கமும் தந்துள்ளார் பாரதியார்.

"திருக்குறளுறுதியும் தெளிவும் பொருளின்
ஆழமும் விரிவும் அழகும் கருதியும்,
முன்புநான் தமிழ்ச் சாதியை "அமரத்தன்மை வாய்ந்தது"
என்று உறுதிகொண்டிருந்தேன்.

"திருக்குறள் உறுதி" என்பதன் பொருள் மரணமிலாப் பெருவாழ்வு தரும் முடிவு என்பதாம். திருக்குறள் நூலைப் பெற்ற தமிழ்ச் சாதி "அமரத்தன்மை வாய்ந்தது" என்பது, பாரதியாரின் நம்பிக்கை. ஆம்: தனித்தனி நபர்கள் மட்டுமல்லாமல் கோடிக்கணக்கான மக்களைக் கொண்ட தமிழ்ச் சாதி முழுவதுமே மரணத்தை வென்ற தெய்வச் சாதியாக வாழ முடியும் என்பது பாரதியாரின் நம்பிக்கை.

திருவள்ளுவருக்கு 'வாசுகி' என்ற பெயருடைய மனைவி இருந்ததாக ஒரு கதை உண்டு. இந்தக் கதையை நம்பினர் பாரதியார். வாசுகி பற்றி வள்ளுவர் பாடியதாக ஒரு செய்யுளும் உண்டு அது வருமாறு :

அடிசிற் கினியாளே ! அன்புடையாளே !
படிசொற் கடவாத பாவாய் —அடிவருடி
முன்தூங்கி பின் எழூஉம்
பேதையே போதியோ
என்தூங்கும் என்கண் இரா.

இந்தப் பாடலிலே, தம்முடைய மனைவியான வாசுகி அம்மையார் உறங்கியதைத் தாம் பார்த்ததே இல்லை என்று

சொல்லுகின்றார் வள்ளுவர். ஏனெனில், வள்ளுவருக்கு உணவளித்து உடல் பிடித்து உபசரித்துவிட்டு, அவர் உறங்கியதைக் கண்ட பின்னர் அம்மையார் உறங்கச் செல்வாராம். திரும்பவும் வள்ளுவர் விழித்தெழுவதற்கு முன்னே வாசுகி அம்மையார் எழுந்துவிடுவாராம். அதனால், வாசுகியார் உறங்குவதனை வள்ளுவர் பார்த்ததே இல்லையாம் !

வாசுகி அம்மையாரிடம் ஆயிரமாயிரம் அருங்குணங்களைக் கண்டிருப்பார் வள்ளுவர். அவற்றிலே அம்மையாரைப் புகழ்வதற்கு அவர் தேர்ந்தெடுத்த பெருங்குணம், கணவர் உறங்கியபின் உறங்கி, அவர் விழிப்பதற்கு முன்பு அம்மையார் விழித்தெழுந்ததாகும்.

இந்தக் கதையை அப்படியே நம்பி, வள்ளுவருக்கு வாய்த்த வாசுகியாரைப் புகழ்கின்றார் பாரதியார். தம் 'சுய சரிதை' யிலே,

வசிட்டருக்கும் இராமருக்கும் பின்னொரு
வள்ளுவர்க்குமுன் வாய்த்திட்ட மாதர்போல்
பசித்தொ ராயிரம் ஆண்டு தவஞ்செய்து
பார்க் கினும்பெறல் சால அரிதுகாண்

என்று பாடுகின்றார் பாரதியார். கற்பு நெறிக்கு மண்ணக மாந்தர்க்குச் சான்றாக விளங்கும் விண்ணகத்து அருந்ததியோடும், இலக்குமியின் அவதாரமெனக் கருதப்படும் மிதிலைச் செல்வியாம் சீதையோடும் தமிழ்ச் சாதி பெற்றெடுத்த வாசுகியாரை ஒப்பிட்டுப் பாடுகின்றார் பாரதியார். என்னே, அவரது இன உணர்ச்சி !

வாசுகியாரைப் போன்ற பெருங்குணங்கள் படைத்த பெண்ணொருத்தியை மனைவியாகப் பெறுவதற்கு ஆயிர

மாண்டுகள் பசித்திருந்து தவம் செய்தாலும் கிடைத்தற்கு அரிதாம்!

வள்ளுவர்க்கு வாய்த்த வான் புகழுக்கு அவர் தம் இல்லக் கிழத்தி வாசுகியார்தான் காரணமென்று சொல்லாமல் சொல்லுகின்றார் பாரதியார். வசிட்டருக்குப் புகழ், அவர் மனைவி அருந்ததியாலே! இராமனுக்குப் புகழ், அவனுக்கு வாய்த்த பத்தினியாம் சீதா பிராட்டியாலே! இவை நாடறிந்த செய்திகளாகும்.

இந்த அருந்ததியோடும் சீதையோடும் வாசுகியாரை ஒப்பிட்டுப் புகழ்வதால் வள்ளுவர்க்கு வாய்த்த வான் புகழுக்கு வாசுகியே காரணம் என்று எண்ணலாந்தானே!

திருவள்ளுவரின் புலமையையும் திருக்குறளின் பெருமையையும் புகழ்ந்து அசரீரி, நாமகள், இறையனார் உட்பட சுமார் ஐம்பதுக்கு மேற்பட்ட புலவர்கள் கவிதைகள் புனைந்து மதிப்புரை தந்துள்ளனர். அந்தக் கவிதைகளின் தொகுப்பு 'திருவள்ளுவ மாலை' எனப் பெயர் பெற்றுள்ளது. அந்த மாலை பாடிய புலவர்களுக்குப் பின் வேறு எந்தப் புலவரும் சுப்பிரமணிய பாரதியாரைப் போல வள்ளுவரையும் அவர் தந்த திருக்குறளையும் புகழ்ந்து பாடியதில்லை. பாரதியார் தந்துள்ள புகழுரைகள் 'திருவள்ளுவ மாலை' யோடு சேர்த்திடுமளவுக்குச் சிறப்புடையனவாகும்.

மகாகவி பாரதியார், தம் கவிதைகளிலே பல்வேறிடங்களில், வள்ளுவர் யாத்தளித்த குறட்பாக்களின் கருத்துக்களை எதிரொலித் திருக்கிறார்.

"பெயக்கண்டும் நஞ்சுண்டு அமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்"

என்றார் வள்ளுவர். இதே கருத்தை, இன்னும் கொஞ்சம் எளிய நடையிலே, பாமரனும் புரிந்து கொள்ளும் பாணியிலே,

நச்சைவாயி லேகொணர்ந்து நண்ப ரூட்டு போதினும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே !

என்று பாடியுள்ளார் பாரதியார்.

வள்ளுவர், ''மக்கட்பேறு'' என்பதாக ஒரு அதிகாரம் பாடி, அதிலே குழந்தை யின்பம் பற்றிக் கூறியுள்ளார்.

''மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்று அவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு''

என்பது குறட்பா. இதற்கு விரிவுரையாக—விளக்க வுரை யாக, ''கண்ணம்மா என் குழந்தை'' என்ற பாட்டைப் பாடி யுள்ளார் பாரதியார்.

''அள்ளி அணைத்திடவே —என் முன்னே
ஆடி வருந் தேனே !''
''ஆடித்திரிதல் கண்டால் —உன்னைப்போய்
ஆவி தழுவு தடீ !''
''உச்சிதனை முகந்தால் —கருவம்
ஓங்கி வளரு தடீ !''
''கன்னத்தில் முத்தமிட்டால் —உள்ளந்தான்
கள்வெறி கொள்ளுத டீ !''
''உன்னைத் தழுவிடிலோ —கண்ணம்மா !
உன்மத்த மாகு தடீ !''

''மக்கள் மெய் தீண்டல் உடற்கு இன்பம்'' என்ற குறட்பாவின் முதல் வரிக்கு—முழு வரிக்கும் அல்ல; முக்கால் வரிக்கு மட்டுமே—பொருள் கூறியுள்ளார். அடுத்துள்ள, ''மற்று அவர் சொற்கேட்டல் இன்பம் செவிக்கு'' என்னும் வரிக்கும்,

"குழலினிது யாழினிது என்ப தம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்"

என்ற குறட்பாவுக்கும் விளக்கம் தருங்கால்,

"சொல்லு மழலையிலே —கண்ணம்மா !
துன்பங்கள் தீர்த்திடுவாய் ;
"முல்லைச் சிரிப்பாலே —எனது
மூர்க்கந் தவிர்த்திடு வாய் !"
"இன்பக்கதைகளெல்லாம் —உன்னைப்போல்
ஏடுகள் சொல்வ துண்டோ ?"

என்று, தம் இதயத்திலே இன்ப உணர்ச்சி பொங்கப் பாடியுள்ளார் பாரதியார்.

மனித வாழ்க்கைக்குத் தேவைப்படும் செல்வங்கள் பலப் பல. அவற்றுள் தலையாயது அறிவுடைய மக்கள் என்கின்றார் வள்ளுவர். இதனை,

"பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த
மக்கட்பேறு அல்ல பிற"

என்ற குறட்பாவால் அறிகின்றோம். இதே கருத்தினை

"மார்பில் அணிவதற்கே —உன்னைப்போல்
வைர மணிக ளுண்டோ ?
"சீர்பெற்று வாழ்வதற்கே —உன்னைப்போல்
செல்வம் பிறிது முண்டோ ?"

என்ற வரிகளிலே பாரதியார் வெளிப்படுத்தியுள்ளார்.

திருவள்ளுவர் யாத்தளித்த குறட்பாக்களிலே,

"ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்"

என்ற குறட்பா, உலகறிந்ததாகும். இந்தக் குறட்பாவின் கருத்தினை,

"மெச்சி உனை ஊரார் புகழ்ந்தால்
மேனி சிலிர்க்கு தடீ!"

என்னும் வரிகளிலே எதிரொலித்திருக்கிறார் பாரதியார்.

பாரதியார் 'சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே' என்றார். இதற்கேற்ப, முன்னோர் சொற்களிலும் அவருக்கு மோகமிருந்தது.

"முன்னோர் மொழி பொருளேயன்றி அவர்சொல்லும்
பொன்னேபோற் போற்றுவம்"

என்பது நன்னூற் சூத்திரம். இதன் பொருள், "முன்னோர் நூற்களின்—பாக்களின் கருத்துக்களையே யன்றி, அவர்தம் சொற்களையும் பின்னோர் எடுத்தாளலாம்" என்பதாம்.

இந்த இலக்கண விதிக்கேற்ப, தம்முடைய முன்னோரான வள்ளுவர் கருத்துக்களை பாரதியார் எடுத்தாண்டதற்கு சில சான்றுகளை மேலே காட்டினோம். அதுபோல, வள்ளுவர் குறட்பாக்களின் சொற்களையும் பாரதியார் கையாண்டுள்ள இடங்களில் இரண்டொன்றைக் காட்டுவோம்.

அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு

என்பது குறட்பா. இதிலுள்ள இறுதி வாசகத்தை எடுத்தாண்டு,

'பொருளிலார்கிலே இவ்வுல' கென்ற நம்

புலவர் தம்மொழி பொய்மொழி யன்று காண்''

என்ற வரிகளை, ''சுய சரிதை'' யிலே படைத்துள்ளார் பாரதியார்.

''அறத்தான் வருவதே இன்பம்'' என்பது ஒரு குறட் பாவின் முதன் மொழி. இதனை,

''அறமொன் றேதரும் மெய்யின்பம் என்றநல்

அறிஞர் தம்மை அனுதினம் போற்றுவேன்''

என்ற வரிகளிலே, அப்படியே எழுதியிருக்கின்றார் வள்ளு வரின் வாரிசான பாரதியார்.

வள்ளுவன் கூறிய இக் கருத்தினைத் தம்முடையதாகக் கொண்டு மானிட சாதிக்குப் போதிக்குங்கால்,

''அறமொன்றே தரும் மெய்யின்பம் ஆதலால்

அறனை யேதுணை யென்று கொண்டுய்திரால் !''

என்கின்றார் பாரதியார்.

மானம் பெரிது !

மானம் உயிரினும் பெரிது. இது, பண்டைத் தமிழர் கடைப்பிடித்த பண்பாடு மாகும். வள்ளுவர், ''மானம்'' என்பதாக ஒரு அதிகாரமே பாடியுள்ளார்.

''இளிவரின் வாழாத மானம் உடையார்

ஒளிதொழுது ஏத்தும் உலகு.''

என்பது குறட்பா.

இதிலே "மானத்திற்குக் கேடு வந்த விடத்து, உயிர் வாழ விரும்பாமல் மரணத்தை மனமுவந்து ஏற்றவர்களுடைய ஒளிமிக்க புகழை உலகம் போற்றி வணங்கும்'' என்கிருர் வள்ளுவர்.

மற்றும், இந்த "மானம்'' என்னும் பண்புக்கு மனித இனத்திலே வாழ்ந்த ஒருவரை சான்று காட்டாமல், மான் குலத்தைச் சான்று காட்டி, மனித இனத்துக்கு அறிவுரை கூறினர் வள்ளுவர்.

"மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னர்
உயிர்நீப்பர் மானம் வரின்''

கவரிமான் தன் உடலிலுள்ள மயிர்களிலே ஒரு மயிர் உதிர்ந்துவிட்டால், அதனை இழுக்கென்று கருதி இறந்து விடுமாம். அது போல, உத்தமரானவர் மானத்திற்கு இழுக்கு நேர்ந்தால் மறுகணமே—மனம் விரும்பி—மரணத்தைத்தழுவி விடுவார்களாம். இந்த அருமையான இரு குறட்பாக்களின் உயர்ந்த கருத்துக்களை, அன்னியனுக்கு அடிமைப்பட்டு, மானமிழந்து, மதியிழந்து வாழ்ந்த பாரத சாதிக்கு எடுத்துக் காட்டுவார்போல,

"மானம் சிறிதென் றெண்ணி வாழ்வு பெரிதென் றெண்ணும்
ஈனர்க் குலகந் தனில்— கிளியே! இருக்க நிலைமை
யுண்டோ ?'' — மானம்
துறந்தறம்பின் மறந்தும் உயிர் கொண்டு வாழ்வது
சுகமென்று மதிப்பாரோ ?''

என்கிருர் பாரதியார்.

பாரதியார் படைத்த நவீன ஆத்திசூடியிலும் வள்ளுவர் குறட்பாக்களின் கருத்துக்கள் எதிரொலிக்கக் காண்கின்ருேம்.

"உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளுக" என்பது வள்ளுவர் தந்த போதனை. அதே கருத்தை வள்ளுவர் தந்த வாசகத்தைச் சுருக்கி, "எண்ணுவது உயர்வு" என்று கூறியுள்ளார்.

"கற்க கசடுஅறக் கற்பவை, கற்றபின்
நிற்க அதற்குத் தக"

என்பது குறட்பா.

"கற்றபின் நிற்க அதற்குத் தக" என்ற வாசகத்தைத் தமதாக்கிக் கொண்டு, "கற்றது ஒழுகு" என்கின்றார் பாரதியார்.

இப்படி, மகாகவி பாரதியார் தம் கவிதைகளிலே இன்னும் எத்தனை எத்தனையோ இடங்களிலே திருவள்ளுவரின் குறட்பாக்களிலுள்ள கருத்துக்களையும், சொற்களையும் வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் எடுத்தாண்டு, தம்முடைய முன்னோனைப் பெருமைப்படுத்தியுள்ளார்.

இனி, பாரதியார் தம்முடைய உரைநடை இலக்கியங்களிலே திருவள்ளுவரையும், அவர் தந்த குறட்பாக்களையும் எடுத்தாண்டுள்ள இடங்களையும் பார்ப்போம்.

மகாகவி பாரதியார், தம்முடைய கட்டுரைகள்—கதைகள் ஆகியவற்றிலே 19 குறட்பாக்களை முழுசாகக் கையாண்டுள்ளார். மற்றும் 4 குறட்பாக்களிலிருந்து சிறந்த சொற்றொடர்களை மட்டும் எடுத்தாண்டுள்ளார். திருக்குறள் ஆசிரியருடைய பெயரை மட்டும் பல இடங்களிலே, தனியாக எடுத்தாண்டுள்ளார். இவ்வளவு அதிகமாகக் குறட்பாக்களையும், அப்பாக்களின் சொற்றொடர்களையும், அவற்றைப் படைத்த ஆசிரியர் பெயரையும் கையாண்ட கவிஞர் வேறு யாருமில்லை.

தனிப் பெருமை

திருவள்ளுவருக்குப் பின்புள்ள இரண்டாயிரம் ஆண்டு காலத்திலே—வாழையடி வாழையெனத் தோன்றிய புலவர் பெருமக்களிலே—சிலர் இங்கொன்றும் அங்கொன்றுமாகத்தான் வள்ளுவரின் குறட்பாக்களையும், பாக்களின் சொற்றொடர்களையும் கையாண்டிருக்கக் காண்கின்றோம். சங்க இலக்கியங்கள் முழுவதையும் படித்துப் பார்த்தால், புறநானூறு ஒன்றில்தான்—அங்கும், "அறம் பாடிற்றே" என்ற சொல்லில்தான் திருக்குறள் நினைப்பூட்டப்படுவதாகப் புலவர்கள் கூறுகின்றனர். இதிலேயும் புலவர்களிடையே கருத்து வேற்றுமையிருந்து வருகின்றது.

சங்க காலத்துக்குப் பின்னர், சிலப்பதிகாரம்—மணிமேகலை ஆகிய காப்பியங்களிலே இங்குமங்குமாக இரண்டொரு இடங்களில் குறட்பாக்களின் சொற்றொடர்கள் கையாளப்பட்டுள்ளன. பிற நூல்களில் இதுவும் இல்லை என்ற நிலைதான்.

புகழ்மிக்க உரையாசிரியர்களிலே சிலர், தங்கள் உரைகளிலே குறட்பாக்களை உவமையாக எடுத்தாண்டுள்ளனர்.

இவர்களை எல்லாம் மிஞ்சிவிடும் வகையில் நம் தேசியக் கவி சுப்பிரமணிய பாரதியார், தம் இலக்கியங்களிலே எண்ணற்ற இடங்களில் வள்ளுவரின் குறட்பாக்களையும், அப்பாக்களின் சொற்றொடர்களையும், கருத்துக்களையும், வள்ளுவர் பெயரையும் பயன்படுத்தியுள்ளார். இந்த வகையிலும் அவர் தனிச் சிறப்புடன் விளங்குகின்றார்.

வள்ளுவர்—இளங்கோ—கம்பர் ஆகிய முப்பெரும் புலவர்களைப் பல்வேறிடங்களிலே வரிசைப்படுத்தியும், தனித் தனியாகவும் புகழ்ந்துள்ளார் என்றாலும், அந்த மூவரிலேயும் வள்ளுவருக்கே அதிக முக்கியத்துவம் தந்துள்ளார்.

ஔவை பற்றி....

பாரதியாரின் எழுத்தோவியங்களை ஆராய்ந்து பார்த்தால், பண்டைப் புலவர்களிலே திருவள்ளுவரை விடவும் அதிகமாக அவர் பெருமைப்படுத்தி இருப்பது ஔவைப் பெருமாட்டியாரைத்தான். இதற்குச் சமாதானமாக அவர் கூறியிருப்பது வருமாறு :

"........திருவள்ளுவர் முதலிய பெரும் புலவராலேயே தம் மனைவரிலும் மிகச் சிறந்தவராகக் கருதப்பட்ட ஔவைப் பிராட்டியையே மிகவும் விசேஷமாக எடுத்துச் சொல்லக்கூடும்.

"தமிழ் நாட்டின் மற்றச் செல்வங்களை யெல்லாம் இழந்துவிடப் பிரியமா? ஔவையின், நூல்களை இழந்து விடப் பிரியமா?" என்று நம்மிடம் யாரேனும் கேட்பார்களாயின், "மற்றச் செல்வங்களை யெல்லாம் பறிகொடுக்க நேர்ந்தாலும் பெரிதில்லை. அவற்றைத் தமிழ் நாடு மீட்டும் சமைத்துக் கொள்ள வல்லது. ஔவைப் பிராட்டியின் நூல்களை இழக்க நாம் ஒருபோதும் சம்மதப்படமாட்டோம், அது மீட்டும் சமைத்துக் கொள்ள முடியாத தனிப் பெருஞ் செல்வம்' என்று நாம் மறுமொழி உரைக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்."

(பாரதி கட்டுரை; பக். 246)

என்று கூறியுள்ளார் பாரதியார். ஆம்; ஆண்பாற் புலவர்களிலே வள்ளுவர் தந்த குறட்பாக்களைப் பாரதியார் பயன்படுத்தியுள்ள அளவு அவருக்கு முன் தோன்றிய பெரும் புலவர் எவரும் பயன்படுத்தியதில்லை என்று மீண்டுமொருமுறை கூறுகின்றேன்.

பொன் மொழிகள்

பாரதியார், வள்ளுவர் குறட்பாக்களின் பொன்மொழிகளைக் கையாண்டுள்ள பகுதிகள் வருமாறு :

"சொந்த வசனங்களில் உயிர் கலந்து தியானம் செய்வதே பயன்படும். நாஸ்திகர்கூட, இஷ்ட தெய்வம் இல்லாவிட்டாலும் வெறுமே தியானம் செய்வது நன்று. **"உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்"** என்பது குறள்."

(பாரதி கட்டுரை; பக்கம் 40)

"நல்ல உணவு தேடி உண்ண வேண்டும். சுத்தமாகவும் ருசியாகவும் வயிறு நிறைய உணவு கொள்ளவேண்டும் **"மிகினும் குறையினும் நோய் செய்யும்"**.

(பாரதி தமிழ்; பக்கம் 92)

"பணமில்லாதவன் பிணம்" என்று பழமொழி சொல்கின்றது. இதன் கருத்தைத்தான் திருவள்ளுவர் வேறொரு வகையிலே **"பொருளிலார்க் கிவ்வுலக மில்லை"**. என்று சொல்லியிருக்கிறார்.

"இந்த உலகத்தில் உள்ள எல்லாத் துன்பங்களைக் காட்டிலும் வறுமைத் துன்பங் கொடியது. இவ்வுலகத்தில் எல்லாச் சிறுமைகளைக் காட்டிலும் ஏழ்மையே அதிகச் சிறுமையானது. **"இன்மையின் இன்னாததில்...."** என்று முன்னோர் சொல்லியிருக்கிறார்கள்."

(பாரதி கட்டுரை; பக்கம் 628)

பாரதி, குறட்பாக்களின் சொற்றொடர்களையன்றி, குறள் முழுவதையுமே பயன்படுத்தியுள்ள உரைநடைப் பகுதிகள் வருமாறு:

"புஸ்தகத்துக்கும், வாய்ப் பேச்சுக்கும், செய்கைக்கும் இடையே லட்சம் யோசனை தூரமாக நடப்பவர்களுக்கு த்ருஷ்டாந்தம் காட்டப் புகுமிடத்தே, நமது நாட்டில் இங்கிலீஷ் பள்ளிக்கூடங்களில் தேறிவரும் மனிதரைப் போல் இத்தனை பெரிய த்ருஷ்டாந்தம் வேறு எங்கும் கிடைப்பது அரிது.

"கனவிலும் இன்னாது மன்னோ வினைவேறு
சொல்வே றுடையார் தொடர்பு"

என்று வள்ளுவர் பாடியிருக்கிறார்.

"இதன் பொருள்:—வாய்ப் பேச்சு ஒரு மாதிரியாகவும், செய்கை வேறொரு மாதிரியாகவும் உடையோரின் உறவு கனவிலும் கொள்ளுதல் தீது என்பதேயாம்".
(பாரதி கட்டுரை; பக்கம் 520)

அரசியல் பேச்சாளர்கள் நாகரீகமின்றிப் பேசுவது—மாற்றார் மனம் புண்படும்படி வசை பாடுவது பாரதியார் காலத்திலும் வழக்கிலிருந்தது போலும்! அதனால், அத்தகைய காவா நாவினரைக் கண்டிப்பதுடன் தமது கண்டனத்துக்கு திருக்குறளையும் சான்றாகக் கூறுகின்றார். அது வருமாறு:

"தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு"

என்றார் திருவள்ளுவர். ஆதலால், ராஜ்ய தந்திரிகளாகவும், ராஜ ரீக உபன்யாசகர்களாகவும் இருந்து தேசத்துக்கு நன்மை செய்ய விரும்புவோர், சொற்களை உபயோகப்படுத்தும் விஷயத்தில் மிகவும் ஜாக்கிரதை செலுத்த வேண்டும்".

"இன்சொல் இனிதீன்றல் காண்பான்
எவன்கொலாவன்சொல் வழங்குவது

என்ற குறளின்படி, 'இனிய சொற்கள் சொல்வதினின்றும் நன்மைகள் விளைவது கண்டும் மானிடர் ஒருவருக்கொருவர் கொடுஞ் சொற்கள் வழங்குவது மடைமை' என்பது உலகத்தில் சாதாரண அனுபவமுடையவர்களுக்கெல்லாம்

தெரியும். அங்ஙனம் தெரிந்தும், கொடுஞ் சொற்களும் கோபச் செயல்களும் நீங்கியவர்களை உலகத்திற் தேடிப் பார்த்தாலும் காண்பது அரிதாக இருக்கிறது''.

(பாரதி கட்டுரை ; பக்கம் 46)

கற்க கசடற!

பிறவி ஜனநாயக வாதியான பாரதியார், மக்கள் எல்லோரும் கல்வி அறிவுடையவர்களாக விளங்கவேண்டுமென்று விரும்பினர். இந்த விருப்பத்தை வெளியிடுமிடத்தும், வள்ளுவர் குறட்பாக்களைச் சான்று காட்ட அவர் தவறவில்லை. இதோ, சான்றுகள் :

''ஒரு நாட்டில் உள்ள எல்லாவிதமான குறைகளுக்கும் புத்திக்குறைவே ஆதாரம். இது படிப்புக் குறைவினல் உண்டாவது. இந்தக் குறையை நீக்குவதில் நாம் ஒவ்வொருவரும் முயற்சி செய்தல் மிகவும் அவஸரம்.''

''கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தார்.

(பாரதி கட்டுரை ; பக். 233)

''அழகுடையவன் அழகில்லாதவர்களைத் தாழ்வாக நினைக்கிருன். கல்வி யுடையோர் கல்லாத மக்களிடம் வைத்திருக்கும் இகழ்ச்சியோ சொல்லுந்தரமன்று. ''விலங்கொடு மக்களனையர் இலங்குநூல் கற்ருரோ டேனையவர்.'' அதாவது, மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் எத்தனை பேதமிருக்கிறது, அத்தனை பேதம் கற்ருருக்கும் கல்லாதாருக்குமிடையே உளது.''

(பக். 634.)

வள்ளுவர் சோஷலிஸ்டு

பாரதியார், உலகில் சோஷலிச சகாப்தம் தோன்றிக் கொண்டிருந்த காலத்திலே வாழ்ந்தவர். வள்ளுவரோ,

தனியுடைமைச் சமுதாயத்திலே, முடியரசின் குடிமகனுக வாழ்ந்தவர். அப்படி யிருந்தும், தம்முடைய சோஷலிசக் கொள்கைக்கு—தனிவுடைமை எதிர்ப்புப் பிரசாரத்திற்கு—வள்ளுவர் குறட்பாக்களையும் பயன்படுத்திக் கொண்டுள்ளார் பாரதியார். ஏழைகளைப் பார்த்து பணக்காரர்கள் கீழ் வருமாறு சொல்ல வேண்டுமாம்!

''இன்றும் வருவது கொல்லோ நெருநலுங் கொன்றது போலும் நிரப்பு'' என்று திருவள்ளுவர் சொல்லியது போல, (அதாவது, 'நேற்று முழுதும் நம்மைக் கொலை செய்வது போலவே வருத்திக்கொண்டிருந்த வறுமை இன்றைக்கு வந்துவிடுமோ' என்று) பரிதபித்து ஏங்கும் நிலையில் நீங்கள் உயிர் வாழ்க்கை நடத்தி வருகிறீர்கள். உங்களை இந்த உணவு நிச்சயமில்லாத நிலையில் வைத்திருக்கும் பாவத்தை இனிச் சுமந்து கொண்டிருப்பதில் எங்களுக்குச் சம்மதமில்லை. எனவே, உங்களில் ஆண் பெண் குழந்தை எவருக்கும் என்றைக்கும் ஆகார விஷயமாக பயமில்லாதபடி செய்துவிட வேண்டும் என்று நாங்கள் தீர்மானித்திருக்கிறோம்.''

(பாரதி கட்டுரை, பக். 650—51.)

ஏழை மக்களைச் சுரண்டிக் கொழுக்கும் கூட்டத்திற்கு எதிராகப் புரட்சி தோன்றும் என்று எச்சரிப்பதற்கும் திருக்குறளையே பயன்படுத்துகின்றார் பாரதியார். அது வருமாறு:

"செல்வம் சேர்ந்த பிறகு அதன் உரத்தால் பிறருக்குத் தீங்கு செய்வாரும் விரைவிலே கெடுவர். "அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீரன்றே, செல்வத்தைத் தேய்க்கும் படை'' என்று திருவள்ளுவரும் சொன்னார். துன்பப் பட்டார் அது பொறுக்காமல் அழும் கண்ணீரானது, அந்தத் துன்பமுண்டாக்கியவனுடைய ஐசுவரியத்தை அழித்தெறியும் ஆயுதமாகும்.''

('பாரதி தமிழ்', பக். 202.)

"அறிவினல் எட்டிய உண்மைகளை மனிதர் ஒழுக்கத்திலே நடத்திக் காட்டுதல் பெருங் கஷ்டமாக முடிந்திருக்கிறது.

"இதே உண்மையை உலகநீதி விஷயத்தில் ஏற்கும்படி, திருவள்ளுவர்,

"சொல்லுதல் யார்க்கும் எளிய ; அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்''

என்ற குறளால் உணர்த்துகிருர்.

"இதன் பொருள்— "வாயினல் ஒரு தர்மத்தை எடுத்துச் சொல்லுதல் யாவர்க்கும் சுலபமாக ஏற்பட்டிருக்கிறது. ஆனல், அந்தச் சொல்லின்படி நடத்தல் மிகவும் துர்லபம்.''

பாரதியார், தன்னுடைய உரைநடை இலக்கியங்களிலே திருவள்ளுவர் பற்றித் தெரிவித்துள்ள கருத்துக்கள் வருமாறு:

"காளிதாசன் செய்த சாகுந்தல நாடகம், ஹிந்தி பாஷையிலே துளஸிதாஸர் செய்திருக்கும் ராமாயணம், கம்ப ராமாயணம், சிலப்பதிகாரம், திருக்குறள், ஆண்டாள் திருமொழி— இவையனைத்துக்கும் பொதுப் பெயராவது ஆர்ய ஸம்பத்து என்பது.''

(பாரதி கட்டுரை ; பக். 73—74)

"புருஷார்த்தங்கள், அதாவது மானிட ஜென்மம் எடுத்ததினின்றும் ஒருவன் அடையக்கூடிய மிக உயர்ந்த பயன்களாகிய அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கில் வீடு என்று சொல்லப்படும் முக்தி வாக்குக்கும் மனத்துக்கும் எட்டாதாகையால், அதனை விரித்துக் கூற முயலாமல், அதற்குச் சாதனமாகிய தெய்வ பக்தியை

மாத்திரம் முதல் அத்தியாயத்தில் கூறி நிறுத்திவிட்டு, மற்ற மூன்று புருஷார்த்தங்களையும் விளக்கி, திருவள்ளுவ நாயனர் 'முப்பால்' (மூன்று பகுதிகளுடையது) என்ற பெயருடைய திருக்குறள் செய்தருளினர். ஆயிரத்து முன்னூற்று முப்பது சிறிய குறட்பாக்களில் நாயனர் அறம், பொருள், இன்பம் என்ற முப்பாலையும் அடக்கிப் பாடியது மிகவும் அபூர்வமான செய்கை என்று கருதப்பட்டது."

(பாரதி கட்டுரை ; பக். 249.)

"கம்பன், இளங்கோ, **திருவள்ளுவர்** முதலிய மகா கவிகளுக்கு ஞாபகச் சிலைகளும் வருஷோத்சவங்களும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

"திருவள்ளுவர் மயிலாப்பூரிலே பிறந்தவர். அங்கே திருவள்ளுவர் கோயில் இப்போது இருக்கிறது. ஜன்ம தினம் நிச்சயமாகத் தெரியவில்லை. ஒரு வேளை அந்தக் கோயிற் பூசாரிக்குத் தெரியக்கூடும்.

"மயிலாப்பூரில் திருவள்ளுவர் கோயிலைச் செம்மையாகக் கட்ட வேண்டும். இப்போது மிகவும் ஏழை நிலைமையில் இருக்கிறது."

(பக். 402—403)

"பகவன் என்ற பிராமணனுக்கும் ஆதி என்ற பறைச்சிக்கும் ஔவை, **திருவள்ளுவர்**, கபிலர், பரணர், உப்பை, உறுவை, வள்ளி என்ற குழந்தைகள் பிறந்து உபயகுலத்துக்கும் நீங்காக் கீர்த்தி ஏற்படுத்தியதை இக்காலத்திலும் பறையர் மறந்து போகவில்லை." (பக். 564)

காதல் பாதையிலே !

பாரதியார், காதல் விஷயத்திலும் வள்ளுவர் குறட்பாக்களைச் சான்ருகக் கொண்டார். தாம் படைத்த 'சந்திரிகை

யின் கதை'யிலே, கோபாலய்யங்கார்—விசாலாட்சி இருவ ரின் காதற் பார்வையை வருணிக்குங்கால், கீழ்வருமாறு கூறுகின்ருர் :

"அவளுடைய விழிகளை கோபாலய்யங்கார் நோக்கி ஞர். அவள் எதிர் நோக்களித்தாள். 'கண்ணெடு கண் ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள் என்ன பயனுமில' என்ருர் திருவள்ளுவ நாயனர்.

"கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனும்
ஒண்டொடி கண்ணே யுள"

என்று திருவள்ளுவர் பாடியிருக்கிருர்.

"காண்டல், கேட்டல், உண்டல், மோப்பு, தீண்டுதல் எனும் ஐவகை இந்திரியங்களையும் ஒருங்கே இன்புறுத்தும் இயல்பு ஒளி பொருந்திய வளையலணிந்த இப்பெண்ணி டத்தே தானுள்ளது" என்பது அக்குறளின் பொருள். இத்துடன் உயிருக்கும் மனத்துக்கும் ஆத்மாவுக்கும் சேர இன்பமளிப்பதனல் காதலின்பம் இவ்வுலக இன்பங்க ளனைத்திலும் தலைப்பட்டதாயிற்று."

திருவள்ளுவர் பிரம்மாவின் அவதாரம் என்பது புலவர் பெருமக்களிலே சிலருடைய நம்பிக்கை. இது பாரதி யாருக்கும் உடன்பாடே.

உணலினும் உண்டதற லினிது காமம்
புணர்தலின் ஊடல் இனிது

என்றன்ருே சாட்சாத் பிரம்மதேவனுடைய அம்ச பூதரும், மகா கவியுமாகிய திருவள்ளுவ தேவர் அருளியிருக்கிருர்."
("சந்திரிகையின் கதை"யில்.)

ஜப்பானியக் கவிதையின் சிறப்புத்தன்மை சுருங்கச் சொல்லி விளங்கவைத்தலாகும்,' என்கிறார், ஜப்பானியப் புலவர் நோகுச்சி. "எங்கள் திருக்குறளும் அப்படித்தான்" என்று பெருமிதத்தோடு கூறுகின்றார் பாரதியார். இதோ, படியுங்கள்:

"சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் ஜப்பானியக் கவிதையின் விசேஷத் தன்மை' யென்று நோகுச்சிப் புலவர் சொல்லுவதுடன் ஆங்கிலேயரின் கவிதை இதற்கு நேர் மாறாக நிற்கிறதென்றும் சொல்லுகிறார். நமக்குள்ளே திருக்குறள் இருக்கிறது. "கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறள்.

"கிழக்குத் திசையின் கவிதையிலே இவ்விதமான ரஸம் அதிகந்தான். தமிழ்நாட்டில் முற்காலத்தில் இது மிகவும் மதிப்பெய்தி நின்றது. ஆனாலும், ஒரேயடியாக கவிதை சுருங்கியே போய்விட்டால் நல்லதன்று. ஜப்பானிலே கூட எல்லாக் கவியும் "ஹொகூஷி" பாட்டன்று.

"நோகுச்சி' சொல்வதிலே அருமையான உண்மை இருக்கிறது. 'எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும், அப் பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு"

(பாரதி கட்டுரை ; பக். 406)

பாரதியார் காலத்தில் தமிழகத்தில் எழுச்சி கொண்ட சமுதாய சீர்திருத்த இயக்கத்திடம் பாரதியாருக்குப் பற்றிருந்தது. ஆனால், அதனை நடத்தியோர், தேச விடுதலைக்கு விரோதிகளாகவும் தாய்மொழியான தமிழிடத்துப் பற்றற்ற பரங்கிமொழிப் பக்தர்களாகவும் இருந்தனர். இது பற்றி, திருக்குறளைச் சான்று காட்டி பாரதியார் தெரிவித்துள்ள கருத்து வருமாறு:

"தமிழ் நாட்டு மக்களே! ஆரம்ப முதல் சமீப காலம் வரை ஆசாரத் திருத்தத் தலைவர்கள் பெரும்பாலும்

தேசாபிமானம், ஸ்வபாஷாபிமானம், ஆர்ய நாகரீகத்தில் அனுதாபம் இம் மூன்றும் இல்லாதவர்களாக இருந்து வந்த படியால் பொதுஜனங்கள் இவர்களுடைய வார்த்தையைக் கவனிக்க இடமில்லாமல் போய்விட்டது. எனினும், அவர்களுடைய கொள்கைகளிற் பல மிகவும் உத்தமமான கொள்கைகள் என்பதில் ஐயமில்லை.

"எப்பொருள் யார் யார் வாய்க்கேட்டாலும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு"

(பக். 555.)

நம்முடைய மகாகவி, 1909-ல் "ஜன்மபூமி" என்னும் பெயரில் தம் கவிதைகளின்—இரண்டாவது தொகுப்பு நூலை வெளியிட்டபோது, அதன் முன்னுரையில் கூறியிருப்பதாவது:

"மறுபடியும் தாயின் பாத மலர்க்குச் சில புதிய மலர்கள் கொணர்ந்திருக்கிறேன். இவை மாதாவின் திருவுள்ளத்திற்கு மகிழ்ச்சியளிக்குமென்றே நினைக்கிறேன். 'குழலினிது யாழினிது என்ப தம் மக்கள் மழலைச் சொல் கேளாதவர்' என்பது வேதமாதலின்"

இதிலே செந்தண்மையுடைய அந்தணரான பாரதியார் ஒரு குறட்பாவை மட்டுமே எடுத்துக் காட்டி, அதனை, வேதத்தோடு ஒப்பிட்டிருப்பது— இல்லை, மன்னியுங்கள்— வேதமாகவே கூறியிருப்பது மகிழத்தக்கதாகும்.

பாரதியார், இல்வாழ்க்கையை வெறுக்கும் காஷாயத் துறவினை விரும்பாதவர்; வெறுத்தவர் என்றும் சொல்லலாம். அவர், திருக்குறளைச் சான்று காட்டி இதனை வலியுறுத்துகின்றார்.

"குடும்ப வாழ்க்கையே மற்றெல்லா வாழ்க்கைகளிலும் சிறந்தது. இதனால் அன்றோ திருவள்ளுவரும்,

இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவருக்கும்
நல்லாற்றின் நின்ற துணை

என்றார்.

சங்கப் புலவரான நக்கீரர் பெருமான் ஞானியர்களுக்கு இலக்கணம் கூறுகையில்,

"யாவதும் கற்றோர் அறியா அறிவினர்; கற்றோர்க்குத்
தாழ்வரம்பு ஆகிய தலைமையர்"

என, திருமுருகாற்றுப் படையில் பாடியுள்ளார். அது போல மாகாகவியான வள்ளுவர், தமக்குப் பின் தோன்றிய மகாகவியான பாரதியாரும் தம்முடைய கருத்துக்களைச் சான்றுகாட்டும் பேரறிஞராக விளங்குகின்றார்.

கல்வியின் பெருமையையும் கல்லாமையின் சிறுமையையும் மக்களுக்கு நினைப்பூட்டப்புகுந்த பாரதியார், வள்ளுவர் குறட்பாக்களையே சான்று காட்டுகின்றார்:

"கண்ணுடையர் என்பவர் கற்றோர்; முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்"

என்று வள்ளுவர் சொல்லியபடி, படித்தவன் படியாதவனை வெறுமே குருடனாக்கி நடத்துகின்றான்."

[பாரதி கட்டுரை; பக். 636]

"திருவள்ளுவர் சொன்னார்:

"விலங்கொடு மக்க ளனையர் இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்"

படியாதவனுக்கும் படித்தவனுக்கும் தாரதம்பியம் எத்தனை என்றால், மிருகத்துக்கும் மனிதனுக்கும் உள்ள தத்தனை.,,

[பாரதி தமிழ்; பக். 198]

"நான்முகனே தான்மறைந்து வள்ளுவனாக வந்து அவதரித்தான்" என்பது வைதிகப் புலவர் ஒருவரின் வாக்கு. சீர்திருத்தவாதியான பாரதியாரும், அதனை அப்படியே ஏற்றுக் கொள்கின்றார். இதோ:

"செயற்கரிய செய்வார் பெரியர்: சிறியர்
செயற்கரிய செய்கலா தார்"

என்று தாம் வள்ளுவர் மரபில் பிறந்தாலும் நமது முன்னோரால் பிரம்ம தேவனுடைய அவதாரம் என்று போற்றப்பட்ட திருவள்ளுவ நாயனார் சொல்லுகின்றார்."

[பாரதி கட்டுரை; பக். 559]

"நூல் பல கல்' என்றாள் ஔவை. அதனையே தேசியக் கவி பாரதியாரும் வள்ளுவர் குறட்பாவையும் சான்று காட்டி வலியுறுத்துகின்றார்'

"மத விஷயங்கள்' என்பவை பாரமார்த்திக உண்மைகளாய்— அதாவது ஐம்புலன்களுக்கு எட்டாத, சுத்த அறிவினால் காணுதற்குரிய தெய்விக உண்மைகள். இவை ஞானம், பக்தி, யோகம் என்னும் வழிகளிலே கிடைப்பன. இவற்றை நமது முன்னோர் பெரிய பாடுபட்டுத் தேடித் தம்முடைய நூல்களிலே திரட்டி வைத்திருக்கிறார்கள். இந்தச் செல்வத்தை நாம் திறமையுடன் கையாண்டு, உலகத்தாருக்கெல்லாம் வாரிக் கொடுத்து, இவ்வுலகத்தின் துன்பங்களையும், சிறுமைகளையும், அறியாமைகளையும் மாற்றி இதனை மேன்மைப்படுத்த வேண்டும்.

"தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்"

என்று திருவள்ளுவர் சொல்லியபடி,

— 'தராசு'

பாரதியார், 'காளிதாசர்'' என்னும் புனை பெயரிலே பத்திரிகைகளில் கட்டுரைகள் எழுதி வந்தார். ஒரு கட்டுரையிலே, இராமராயர் என்பவரும் காளிதாசரும் உரையாடுவதாகக் கூறுமிடத்து, மொத்தமாக நான்கு குறட்பாக்களைச் சான்று காட்டுகின்றார். இதோ:

''அப்போது ராமராயர் என்னை நோக்கி, ''காளிதாசரே, உம்முடைய தீர்ப்பென்ன? தராசின் தீர்ப்பைச் சொல்லும்'' என்று கேட்டார்.

''அதற்கு நான்,

நன்றி மறப்பது நன்றன்று; — நன்றல்ல
தன்றே மறப்பது நன்று.

எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு

தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்,
தோன்றலின்தோன்றாமை நன்று.

வேண்டிய வேண்டியாங் கெய்தலான், செய்தவம்
ஈண்டு முயலப் படும்.

என்ற நாலு குறளையும் சொன்னேன்.''

— 'தராசு'

தமிழரைப் பார்த்து, ''திறமான புலமை எனில் பிற நாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும்'' என்று பாடினார் பாரதியார். அதற்கிணங்க, பிரெஞ்சு நாட்டு வித்துவான் போல் ரிஷா என்பார், திருவள்ளுவர் உள்ளிட்ட உலக ஞானியர் பலருடைய பொன்மொழிகளை 'ஆரிய' என்னும் பத்திரிகையில் பிரெஞ்சில் மொழி பெயர்த்துப் பிரசுரித்தார். அது கண்டு பூரிப்படைந்த பாரதியார், பிரெஞ்சில் வித்துவான் தொகுத்த பொன்மொழி

களைத் தமிழிலே மொழி பெயர்த்துத் தமது பத்திரிகையில் பிரசுரித்தார். அதிலே, வள்ளுவர் பற்றியது வருமாறு :

"திருவள்ளுவர் :—

யாகாவா ராயினும் நாகாக்க
"சொல்லிற் பயனுடைய சொல்லுக''

[பாரதி கட்டுரை; பக். 389.]

பாரதியார் தோன்று முன்னர் வள்ளுவரையும் அவருடைய:குறள் நூலையும் புலவர்கள் மட்டுமே அறிந்திருந்தனர். புலமை பெருத எளிய மக்கள் அறிந்திருக்கவில்லை. பாரதியார் தோன்றி, அவர் சாதாரண மக்கள் மத்தியிலே நடமாடி, தேசவிடுதலை இயக்கத்திலே கலந்து, வள்ளுவர் சிறப்பை வாயாரப் புகழ்ந்து பாடினார். "யாமறிந்த புலவரிலே....வள்ளுவர்போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை'' என்றும், "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு'' என்றும் பாடினார். இந்த வரிகள் படித்தறியாத பாமரன் செவியிலும் விழுந்தது. தமிழிலே புலமை பெருத தேச விடுதலை வீரர்களின் மனங்களையும் தொட்டன.

விடுதலைப் போராட்டம் வீறுகொண்டெழுந்த நேரத்திலே சிறைச்சாலையில் அடைப்பட்டிருந்த தேசபக்தர்கள் இரவு நேரங்களிலே தனித் தனி அறைகளில் அடைக்கப் பட்டுள்ள நிலையில் பாரதியாரின் தேசியப் பாடல்களைப் பாடுவார்கள். அப்போது அவர்களை அறியாமலே அவர்களுடைய வாய் வள்ளுவன் புகழ்பாடும் வரிகளை முழக்கும். அப்படி முழக்கியவர்களிலே பலர் வள்ளுவரைப் பற்றி அறியவும், அவரது குறட்பாக்களை படிக்கவும் முயன்றதுண்டு. அப்படி முயன்றவர்களிலே சிலர் பெரும் புலமை பெற்றதும் உண்டு.

பாரதியாரை முன்னேடியாகக் கொண்டு கவிமணி தேசிக விநாயகனும் திருவள்ளுவரின்— அவர் இயற்றிய திருக்குறளின் புகழ் பாடியுள்ளார்.

நாஞ்சில் கவிமணி, பத்துச் செய்யுட்கள் கொண்ட ஒரு தனிப் பாடலிலே திருவள்ளுவர் பெருமையையும், ஐந்து செய்யுட்கள் கொண்ட ஒரு பாடலில் திருக்குறளின் பெருமையையும் புகழ்ந்து பாடியுள்ளார். இவையன்றி, தாம் இயற்றியுள்ள வேறு பாடல்களிலும் வாய்ப்பு நேர்ந்த இடங்களில் எல்லாம் வள்ளுவரின் பெருமையை வாயாரப் புகழ்ந்துள்ளார்.

'இலக்கியப் பஞ்சகம்' என்னும் பாடலில்,

> ''வள்ளுவர் தந்த திருமறையைத்—தமிழ்
> மாதின் இனிய உயிர்நிலையை
> உள்ளம் தெளிவுறப் போற்றுவமே—என்றும்
> உத்தமராகி ஒழு குவமே''

என்றும், ''தாலாட்டு''ப் பாடலில்,

> ''பூவில் அயனும், இந்தப் பூமீது வள்ளுவர்தம்
> பாவின் நயமுணரப் பாலகனாய் வந்தானோ!''

என்றும் பாடியுள்ளார்.

பாரதியாரின் வாரிசாக வாழ்ந்த தேசியக் கவிஞர் நாமக்கல் இராமலிங்கம் பிள்ளையவர்களும், பாரதியாரைப் பின்பற்றி, வள்ளுவரின் புகழை வாயார வாழ்த்தியுள்ளார்.

ஆறு செய்யுட்கள் கொண்ட ஒரு தனிப் பாடலே பாடியுள்ளார்.

இப்படி, இடைவிட்டுப் போன வள்ளுவர் சகாப்தத்தைத் திரும்பவும் தொடங்கி வைத்த பெருமை மகாகவி சுப்பிரமணிய பாரதியாருக்கே உரிமை.

வாழ்க, வள்ளுவர் புகழ்!

வாழ்க, பராதியார் புகழ்!

பாரதியாரிடமும் முரண்பாடா?

தேசியக் கவி சுப்பிரமணிய பாரதியார் மிகச் சிறந்த லட்சியவாதியாக வாழ்ந்தார்; லட்சியத்திற்காகவே உயிர் கொடுத்தார். அவர், அறிஞர்; கவிஞர்; ஞானி; தியாகி! ஆனல், அவரிடமும் கொள்கை முரண்பாட்டைக் காண்கின்ருேம். ஆம்; கவிதையிலே வலியுறுத்திய ஒரு கொள்கையை உரைநடைக் கட்டுரையிலே மறுத்து எழுதுகின்ருர். லட்சிய வீரரான அவரிடம் இந்த முரண்பாடு எப்படி ஏற்பட்டது?

பாரதியார், 'சுதேசமித்திரன்' நாளிதழிலே தொழில் புரிந்தார். 'நமக்குத் தொழில் கவிதை' என்று அவர் கூறியிருப்பினும், ஊதியந்தரும் உத்தியோகக் கடமைக்காக அவர் கவிதை எழுதவில்லை—எழுதியதாக அவரது வரலாறு கூறவில்லை. ஆனல், ஊதியந்தரும் உத்தியோகத்திற்காக அவர் 'சுதேச மித்திரனி'ல் கட்டுரை எழுதினர்—இது வரலாறு.

கவிதை எழுதியது, தன் உள்மனம் தூண்டியதால்! கட்டுரை எழுதியது, உத்தியோகக் கடமையால்! இதனல், கவிதைகளிலே காணப்படும் கருத்துக்கும் கட்டுரைகளிலே காணப்படும் கருத்துக்கும் சிலவிடங்களில் முரண்பாடு இருக்கக் காண்கின்ருேம். அந்த முரண்பாடுகள் பலவாயினும், சான்றுக்கு இரண்டை மட்டும் இங்கு காட்டுவோம்.

பாரதியார், தமிழிடத்துப் பற்றுடையவர். அதனால், 'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்' என்று பாடினார். 'தமிழன்' என்ற இனவுணர்வுடையவர்; அதனால், 'தமிழச் சாதி' என்னுந் தலைப்பிட்டு தனிப் பாடலே பாடினார். இப்படிப் பாடிய முதற் புலவன் பாரதிதான்! 'தமிழ் நாடு' என்று சொல்லக் கேட்டாலே, அவருக்கு ஒரு தனிப் பெருமை. அதனால், 'செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத், தேன்வந்து பாயுது காதினிலே' என்று பாடினார்.

சுதந்தர பாரதம், மொழிவாரி அரசுகளைக் கொண்ட சமஷ்டி நாடாக விளங்க வேண்டுமென்பது பாரதியின் கொள்கை. இதனை, 'தாயின் மணிக்கொடி பாரீர்!' என்னும் பாடலிலே விளக்குகின்றார்.

நாடு விடுதலை பெற்றுவிட்டது. சுதந்திர இந்தியா தனக்கென ஒரு தனிக்கொடி கண்டு, அதனை ஓங்கி வளர்ந்ததோர் கம்பத்திலே வானளாவப் பறக்கவிட, அது சுதந்திரக் காற்றால் ஆடிப் பறக்கிறது.

அந்தக் கொடியின் கீழே, கொடிக் கம்பத்தைச் சுற்றிலும் செந்தமிழ் நாட்டுப் பொருநர் சேரன்றன் வீரர் (கேரளர்); சிந்தை துணிந்த தெலுங்கர் (ஆந்திரர்); கன்னடர்; போரில் காலனும் அஞ்சக் கலக்கும் மராட்டர்; இந்துஸ்தானியர்; பஞ்சநதத்து (பஞ்சநதி பாயும் பாஞ்சாலத்து)ப் பிறந்தோர்; வங்கத்தினோர் ஆகியோரெல்லாம்—ஒவ்வொரு மொழியினரும் ஒவ்வொரு அணியாக — நின்று, தாய் நாட்டைக் காக்க உறுதி மேற்கொள்கின்றனர்.

இது, பாரதியார் தமது கவிதை யொன்றிலே கற்பித்துக் காட்டும் மொழிவாரி நாடுகளைக் கொண்ட சுதந்தர இந்தியா!

ஆனால், 'சுதேச மித்திரனி'ல் எழுதிய உரைநடைக் குறிப்பொன்றிலே இதனை மறுத்துரைக்கிறார். 1917ல் குண்டூரில் கூடிய ஆந்திர மகாசபையிலே, ஆந்திர் மாநிலக் கோரிக்கையை வலியுறுத்தும் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. அதுபற்றி, 26—5—1917ல் சு. மியில் பாரதியார் எழுதிய குறிப்பின் ஒரு பகுதி வருமாறு:

"என்னுடைய அபிப்பிராயத்தில் 'மேற்படி கொள்கை நியாயமென்றே தோன்றுகிறது. ஆனாலும், இந்த ஸமயத்தில் ஆந்திரரைத் தனிப் பிரிவாக ருஜுப்படுத்துவதைக் காட்டிலும், ஆஸேது ஹிமாசலபர்யந்தம் உள்ள ஹிந்துக்களெல்லாம் ஒன்று என்ற மூலமந்திரத்தை நிலைநாட்டுவதே அவசியமென்று என் புத்திக்குத் தோன்றுகிறது. ஹிந்துக்களெல்லாம் ஒரே கூட்டம். வேதத்தை நம்புவோரெல்லாம் ஸஹோதரர். பாரத பூமியின் மக்களெல்லாம் ஒரே தாய் வயிற்றுக் குழந்தைகள். நமக்குள் மதபேதம் ஜாதிபேதம் குலபேதம் பாஷா பேதம் ஒன்றுமே கிடையாது. இந்தக் கொள்கைதான் இந்தக் காலத்துக்கு யுக்தமானது. ஹிந்து மதத்தை உண்மையாக நம்புவோரெல்லாம் ஒரே ஆத்மா, ஒரே உயிர், ஒரே உடம்பு, ஒரே ரத்தம், ஒரேகுடர், ஒன்று.

"ஹிந்து தர்மத்தை நிலைநிறுத்தினால் ஆந்திரர், கன்னடர், மராட்டியர், ஹிந்துஸ்தானிகள், குஜராத்திகள், வங்காளிகள், தமிழர், மலையாளர் எல்லோருக்கும் நல்ல காலம் பிறக்கும்."

[பாரதி தமிழ்; பக். 272—274.]

"தாயின் மணிக்கொடி பாரீர்" என்ற பாடலிலே, மொழிவாரி இன அடிப்படையில் இந்திய சமுதாயத்தை (இந்து சமுதாயத்தை அல்ல) ஒன்றுபடுத்தி, சமயச் சார்பற்ற சமஷ்டி இந்தியாவைக் கற்பனை செய்து காட்டுகின்றார். இதற்கு மாறாக, சு.மியில் எழுதிய குறிப்பிலே மொழிவழி இன வேறுபாடுகளைப் புறக்கணித்து, இந்து

மதத்தவரை ஒற்றைச் சமுதாயமாக்கி, அந்த இந்துக்களுக்கே உரிய நாடாக இந்தியாவைப் படைக்கிறார்.

இது ஒரு முரண்பாடு!

கவிஞர் பாரதியார், 'காந்தி பஞ்சகம்' என்ற தமது கவிதைத்தொகுப்பிலே, காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கத்தை மன நிறைவோடு வரவேற்கின்றார்.

பெருங்கொலை வழியாம் போர்வழி இகழ்ந்தாய்;
அதனிலுந் திறன்பெரி துடைத்தாம்
அருங்கலை வாணர் மெய்த்தொண்டர் தங்கள்
அறவழி யென்றுநீ அறிந்தாய்;
நெருங்கிய பயன்சேர் 'ஒத்துழையாமை'
நெறியினால் இந்தியா விற்கு
வருங்கதி கண்டு பகைத்தொழில் மறந்து
வையகம் வாழ்கநல் லறத்தே !

இந்தக் கவிதையிலே "ஒத்துழையாமை"க் கொள்கையை வரவேற்கின்றார். அதனை, 'அறவழி' என்கின்றார்; பெருங்கொலை வழிப்பட்ட போர் முறையினும் திறன்பெரி துடைத்தென்றும் பாராட்டுகின்றார். நெருங்கிய பயன்சேர்— அதாவது, விரைவில் பயன்தரக்கூடியதென்றும் மதிப்பிடுகின்றார். இதனால், இந்தியாவேயன்றி, வையகமே வாழ்வு பெறுமென்றும் கூறுகின்றார்.

காந்தி பஞ்சகத்தில் மற்றொரு கவிதையிலே, ஒத்துழையாமைத் தத்துவத்தைத் தந்ததற்காக, 'பாரத தேசந் தன்னை வாழ்விக்க வந்த காந்தி' என்கின்றார். 'முடிவிலாக் கீர்த்திபெற்றாய்; புவிக்குளே முதன்மை யுற்றாய்' என்றும் துதி பாடுகின்றார்.

ஒத்துழையாமைத் தத்துவத்தையே யன்றி, அதன் வழிப்பட்ட பகிஷ்காரம்—மறியல் ஆகிய போர் முறைகளையும் வரவேற்பார் போல,

"கெடுத லின்றிநந் தாய்த்திரு நாட்டின்
கிளர்ச்சி தன்னை வளர்ச்சிசெய் கின்றான்
'சுடுதலும் குளிரும் உயிர்க்கில்லை
சோர்வு வீழ்ச்சிகள் தொண்டருக்கில்லை
எடுமினோ அறப்போரினை' என்றான்
எங்கோ மேதகம் ஏந்திய காந்தி!"

என்றும் பாடினார். இன்னும்,

"மாந்த ரெல்லோரும் சோர்வை
அச்சத்தை மறந்து விட்டார்
காந்திசொற் கேட்டார், காண்பார்
விடுதலை கணத்தி னுள்ளே"

என்றார். இப்படி, இன்னும் பல பாடல்களில் காந்தியடிகளின் தலைமையை வாழ்த்தி, அவரது ஒத்துழையாமைக் கொள்கையை வரவேற்று, பகிஷ்காரப் போர்முறை பலன் தரும் என்று சோதிடம் கூறினார்.

இதே பாரதியார் துணையாசிரியராக இருந்த 'சுதேசமித்திரன்' ஆசிரியர் ஒத்துழையாமையை எதிர்த்தார். அதனால் பயன் விளையாது என்றும் மித்திரனில் எழுதினார். அவரது எதிர்ப்புக்கு எதிர்ப்புகாட்டி காந்தியவாதிகளை எதிர்த்தும் 'மித்திரன்' ஆசிரியரின் காந்திய எதிர்ப்பை ஆதரித்தும் பாரதியார் எழுதிய குறிப்பில் ஒரு பகுதி வருமாறு:

"ஒத்துழையாமை விஷயத்தில் உம்முடைய முடிவான கொள்கை யாது? சுதேசமித்திரன் பத்திரிகை ஒத்துழையாமைக் கொள்கையில்...... அபிமானமில்லாதது போல் காணப்படுகிறதே? அப்படியிருக்க, நெடுங்காலத்து தேசாபிமானியாகிய நீர் இந்த ஸமயத்தில் அந்தப் பத்திரிகையில் வேலைசெய்ய அமர்ந்தது நியாயமா?" என்று கேட்கிறார்கள்.

"ஒத்துழையாமையைத் தவிர தேச விடுதலைக்குச் சரித்திர பூர்வாங்கமான வேறு வழிகள் இருக்கின்றன. இந்த ஒத்துழையாமை முறையையே மிகவும் உக்ரமாகவும், 'தீர்வை மறுத்தல்' முதலிய அதன் இறுதிப்படிகளை உடனே உட்படுத்தியும், அனுஷ்டித்தால், ஒருவேளை அன்ய ராஜாங்கத்தை ஸ்தம்பிக்கச் செய்வதாகிய பயன் அதனால் விளையக்கூடும்.

"எனினும் இப்போது காண்பிக்கப்பட்டிருப்பதாகிய முதற்படியின் முறைகளால் அந்தப் பயனெய்துவது ஸாத்தியமில்லை. தேசாபிமானிகள் மாத்திரமே சட்ட ஸபை ஸ்தானங்களை பஹிஷ்காரம் செய்ய மற்ற வகுப்பினர் அந்த ஸ்தானங்களை யெல்லாம் பிடித்துக் கொள்வதினின்றும் இந்தியாவில் ஆங்கில ஆட்சியை ஸ்தம்பிக்கச் செய்தல் அரிதென்று தோன்றுகிறது. இங்ஙனமே வக்கீல்கள் தம் உத்தியோகங்களையும், பிள்ளைகள் படிப்பையும் விடும்படி செய்தல் இப்போது நம்மால் முற்றிலும் ஸாதிக்க முடியாத விஷயமாகத் தோன்றுவதுடன், அதனால் குறிப்பிட்ட பயனெய்தி விடுமென்று தீர்மானிக்கவும் இடமில்லை.

"என்னுடைய சொந்த அபிப்பிராயப்படி, நல்ல தேசியக் கொள்கைகளை மேன்மேலும் தெளிவாகவும், உறுதியாகவும், ஜனங்களுக்குள்ளே ப்ரசாரம் புரிவதும் ராஜரீகச் சதுரங்க விளையாட்டில், ஸமாதானமாகவே, எதிரி கலங்கும்படியானதோர் ஆட்டமாடி, ஸரியான ஸமயத்தில் ஸ்வராஜ்யத்தைக் கட்டியெடுத்துக்கொள்ள முயற்சி புரிவதுமே—

சரித்திர ஸம்மதமான உபாயங்களாகும்....ஏனைய முறைகள் நாட்டைக் குழப்பத்திலே கொண்டு சேர்க்கவும் கூடும். ராஜ வீதியிருக்கையிலே சந்து, பொந்துகளின் வழியாக ஏன் செல்லவேண்டும்?”

(பாரதி தமிழ்; பக். 313—315)

அறிஞன் வேறு; கவிஞன் வேறு. பாரதியார், அறிஞராகவும் இருந்தார்; கவிஞராகவும் இருந்தார். அவர், ‘சுதேசமித்திரன்’ துணையாசிரியராக இருந்தது, அறிஞராகத்தான்; கவிஞராக அல்ல! ‘மித்திரனி’லே அவர் கவிதைகள் எழுதவில்லை; கட்டுரைகளே எழுதினார்! பாரதியாரை மித்திரன் துணையாசிரியராகப் பார்க்காமல் கவிஞராகப் பார்ப்போம்!

பாரதியாரும் பாரதிதாசரும்

நாம் வாழும் இந்த இருபதாம் நூற்றூண்டிலே எண்ணற்ற கவிஞர்கள் வாழ்ந்து, தங்கள் தாய் மொழியான தமிழுக்குப் புதுவாழ்வு தந்தனர். அவர்களிலே இருவர் 'புரட்சிக் கவிஞர்' என்னும் சிறப்புப் பெயருக்கும் உரியவராயினர். அந்த இருவருமே "புதுவை வாசிகள்" ஆயினர். ஒருவர், புதுவையிலே அடைக்கலம் புகுந்தார். அவர் பெயர், சி. சுப்பிரமணிய பாரதியார். பின்னெருவர் புதுவையிலேயே பிறந்து—வளர்ந்து—வாழ்ந்து அந்தப் புதுவை மண்ணிலேயே மறைந்தார். அவர் பெயர், கனக சுப்பு ரத்தினம். பின்னவர் முன்னவரைத் தம் நண்பராகவும் குருவாகவும் முன்னேடியாகவும் கொண்டு அவருக்குத் தம்மை அடிமைப்படுத்திக் கொண்டார். அதனுல் "கனக சுப்புரத்தினம்" எனத் தம் பெற்றேர் இட்ட பெயரை மறைத்துவிடும் வகையில் "பாரதிதாசன்" என, தமக்குத் தாமே சிறப்புப் பெயர் வைத்துக் கொண்டார். ஆம்; இது புனை பெயர் அன்று; சிறப்புப் பெயர்!

பாரதியார் புதுவையில் வாழ்ந்த காலத்திலே அவரோடு நெருங்கிப் பழகும் வாய்ப்புப் பெற்றுர் பாரதிதாசனுர். அவர்கள் சந்தித்த ஆரம்ப காலத்திலே இருவருமே தெய்வபக்தியும் தேசபக்தியுங் உடையவர்களாயிருந்தனர். நாளடைவிலே சீடரான பாரதிதாசனுர், தெய்வ நம்பிக்கை யற்றவரானுர். ஆயினும், அவர் நம்பாத தெய்வம் அவரு

டைய இதயத்தில் குடியிருந்து அவரைப் புரட்சிக் கவிஞர் ஆக்கியது.

ஆரம்ப நாட்களிலே பாரதிதாசனார் பராசக்தியைப் பாடினார். ஆம்; தம் குருவான பாரதியாரைப் பின்பற்றி!

> எங்கெங்குக் காணினும் சக்தியடா!—தம்பி
> ஏழுகடல் அவள் வண்ணமடா—அங்குத்
> தங்கும் வெளியினில் கோடியண்டம்—அந்தத்
> தாயின் கைப்பந்தென ஓடுமடா!

பாரதிதாசனார் பராசக்தியைப் பாடிய இந்த வரிகளிலே பாரதி பாடிய பராசக்திப் பாடல்களின் எடுப்பையும் துடிப்பையும் பார்க்கின்றோம். பாரதி தாசன் இன்னுமின்னும் தெய்வப் பாடல்களைப் பாடியிருந்தாரானால், அவை எவ்வளவு மிடுக்கோடும் எடுப்போடும் இருந்திருக்குமென்பதற்கு மேலே எடுத்துக் காட்டிய சில வரிகளே சான்று.

பாரதியார், தேச பக்திக்கே—ஏகாதிபத்திய எதிர்ப்புக்கே முதன்மை தந்தார். பாரதி தாசனார், அதனை இரண்டாந்தரமாகக்கூட ஏற்கத் தவறி விட்டார்.

பாரதத்திலே மூட நம்பிக்கைகள் மலிந்திருக்கும் வரை, நிலைத்திருக்கும் வரை, சாதி—சமய வருண வேற்றுமைகளும் ஏற்றத் தாழ்வுகளும் இருக்கும் வரை ஆங்கில ஏகாதிபத்தியம் வெளியேறாது; அதனை வெளியேற்றவும் இந்தியர்களால் இயலாது என்று கருதினார் தேசியக் கவி பாரதியாரின் வழித்தோன்றலான பாரதி தாசனார்.

இந்தக் கருத்து பாரதியாரின் கவனத்தில் படாததன்று. ஆனால், இதனை அவர் ஏற்க மறுத்தார்.

சாதி வேற்றுமையை—சமயப் பகைமையை—மூட நம்பிக்கையை அடியோடு அகற்றி பாரத மக்கள் ஒருமைப்பாடுடைய ஒரே சமுதாயத்தினராக வாழ வேண்டுமென்பதில் பாரதிதாசனும் பாரதியாரும் ஒன்றுபட்ட கருத்தினராகவே இருந்தனர். அந்த வகையிலே பார்ப்பன சாதியில் பிறந்த பாரதியார், பாரதிதாசனுரை விடவும் தீவிர வாதியாக இருந்தார் என்றும் சொல்லலாம்.

"மடாதிபதிகளும், ஸந்நிதானங்களும் தமது தொந்தி வளர்வதை ஞானம் வளர்வதாகக் கொண்டு ஆனந்தமடைந்து வருகின்றனர். ஹிந்து ஜனங்கள்! ஹிந்து ஜனங்கள்! நமது இரத்தம், நமது சதை, நமது எலும்பு, நமது உயிர்—ஹிந்துஸ்தானத்து ஜனங்கள்—ஏனென்று கேட்போரில்லாமல் பசிப் பிணியால் மாய்ந்து போகின்றனர்".

[பாரதி நூல்கள்—கட்டுரைகள்; பக். 479.]

இது, வறுமையாலும் அறியாமையாலும் வருந்தும் மக்களுக்குத் தொண்டு செய்யாமல் மடாலயங்களுக்குள்ளே மறைந்து வாழும் மடாதிபதிகள் மீது பாரதியார் பொழிந்த வசைமாரி!

"நமக்கு மண்ணுழுது நெல்லறுத்துக் கொடுக்கிற பறை ஜாதியாரை நாம் நேரே நடத்த வேண்டாமா? அது சரிதான். இனிமேல் பறையன் கை நீட்டாமல் இருப்பதற்கு வழி தேடிக்கொள்ளுங்கள்."

[பாரதி நூல்கள்—கட்டுரைகள்; பக். 561-562]

இது, அந்தணர்களுக்கு அமரகவி பாரதி விடுத்த எச்சரிக்கை!

இப்படி, எத்தனை எத்தனையோ புரட்சிகரமான கருத்துக்களை வாரி வாரி வழங்கியிருக்கிறார் பாரதியார். முன்

எப்போதே பிறந்து — வளர்ந்து—நிலைத்துவிட்ட சாதி வேற்றுமைகளும், உயர்வு தாழ்வுகளுந்தான் அன்னிய ஆதிக்கத்திற்கு நம்மை அடிமைப்படுத்தி விட்டன என்ற பாரதிதாசனாரின் கருத்து பாரதியாருக்கும் உடன்பாடே !

"முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்". நாம் பள்ளர் பறையருக்குச் செய்ததை எல்லாம், நமக்கு அன்னிய நாடுகளில் பிறர் செய்கிறார்கள். நமது சிருங்ககிரி சங்கராச்சாரியாரும், வானமாமலை ஜீயர் ஸ்வாமிகளும் நெட்டால் திரான்ஸ்வால் தேசங்களுக்குப் போவார்களானால், ஊருக்கு வெளியே சேரிகளில் வாசம் செய்ய வேண்டும். சாதாரண மனிதர்கள் நடக்கும் ரஸ்தாக்களில் நடக்கக்கூடாது. பிரத்யேகமாக விலகி நடக்க வேண்டும்.",

['ஆறில் ஒரு பங்கு' கட்டுரையில்]

அந்தண பாரதியார் தமது வருணத்தைச் சார்ந்த ஆச்சாரியார் இருவரைத் தாக்கி எழுதியுள்ள இந்த வாசகம் சமுதாயத் துறையில் அவர் கொண்டிருந்த புரட்சிகரமான கொள்கைகளுக்குச் சான்றாகும்.

"இப்போது, நம்மெல்லோரையுமே உலகத்தார் மற்றெல்லா நாட்டினரைக் காட்டிலும் இழிந்த நீசர்களாகக் கருதுகின்றார்கள். நம்முள் ஒரு வகுப்பினரை நாம் தீண்டாத வகுப்பினரென்று விலக்கினோம்; இப்போது, வேத மார்க்கஸ்தர் மகம்மதியர் என்ற இரு பகுதி கொண்ட நமது ஹிந்து ஜாதி முழுதையுமே உலகம் தீண்டாத ஜாதி என்று கருதுகிறது. உலகத்தில் எல்லா ஜாதியாரிலும் வகுப்புகள் உண்டு. ஆனால் தீராத பிரிவுகள் ஏற்பட்டு ஜாதியைத் துர்லபப்படுத்தி விடுமானால், அதிலிருந்து நம்மைக் குறைவாக நடத்துதல் அன்னியர்களுக்கு எளிதாகிறது. 'ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்."

['ஆறிலொரு பங்கு' கட்டுரையில்]

இந்த எடுத்துக்காட்டு அன்னிய ஆதிக்கத்தை எதிர்க்கும் அதே நேரத்திலே உள்நாட்டில் நிலேத்துவிட்ட சாதி—வருண ஆதிக்கங்களேயும் எதிர்த்தேயாக வேண்டும் என்பதில் பாரதியாருக்கிருந்த உறுதியைக் காட்டுகின்றது.

பாரதியார் இவ்வளவு தெளிவாக எழுதியிருந்தும் தமிழ் நாட்டின் அரசியல் சூழ்நிலே காரணமாக அரசியல் விடுதலேப்போருக்கு அன்னியராகவே வாழ்ந்தார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனுர்.

"சஞ்சீவி பருவதத்தின் சாரல்" என்னும் கவிதையிலே இந்திய விடுதலேப் போர் பற்றி தாம் கொண்டிருந்த கருத்தை பாவேந்தர் வெளியிட்டுள்ளார்.

'ஓ! என் சகோதரரே!
ஒன்றுக்கும் அஞ்சாதீர்?
நாவலந் தீவு
நம்மைவிட்டுப் போகாது.
வாழ்கின்ருர் முப்பத்து
முக்கோடி மக்கள் என்ருல்
சூழ்கின்ற பேதமும்
அந்தத் தொகையிருக்கும்;
ஆகையால் எல்லாரும்
அங்கே தனித்தனிதான்
ஏகமன தாகிஅவர்
நம்மை எதிர்ப்பதெங்கே?
சாதிப் பிரிவு
சமயப் பிரிவுகளும்,
நீதிப் பிழைகள்
நியமப் பிழைகளும்,

மூடப் பழக்கங்கள்
எல்லாம் முயற்சி செய்தே
ஓடச்செய்தால் நமையும்
ஓடச்செய்வோர் என்பேன்'

இந்த வரிகளிலே உள்நாட்டிலுள்ள சாதி மதக் கொடுமைகள் அகலாதவரை ஆங்கிலேயர் ஆதிக்கம் அகலாது என்பதிலே தமக்கிருந்த உறுதியை வெளிப்படுத்தியுள்ளார் பாரதிதாசனார். இதற்கு நேர்மாருக,

"நம்முடைய சமூக வாழ்வில் அநீதிகள் இருக்கும் வரை நமக்கு ஸ்வராஜ்யம் சித்தியாகாதென்ற கொள்கையை நான் அங்கீகரிக்கவில்லை."

[பாரதி தமிழ்; பக். 431]

என்று அழுத்தந்திருத்தமாக அறிவிக்கின்றார் பாரதியார். காந்தியடிகளும், இதே கருத்தினைக் கொண்டிருந்தார் என்பதினை,

"காந்தியடிகள் எப்பொழுதும் சீர்திருத்த வாதியேயாவார். அரசியல் சீர்திருத்தமின்றி சமூக சீர்திருத்தம் நடைபெற முடியாதென்று கண்டதாலேயே அவர் அரசியலில் இறங்க வேண்டியதாயிற்று. இப்பொழுது அரசியலில் அடிமைத்தனம் நீங்கிவிடுகிறபடியால், இனிமேல் அவர் தம்முடைய வாழ்வின் குறிக்கோளாக எண்ணியுள்ள சமூக சீர்திருத்தத்திலே தமது முழு நேரத்தையும் கவனத்தையும் ஈடுபடுத்துவார்."

('அரிசன்' 17-8-48)

என்பதாக, காந்தியடிகளின் மெய்த்தொண்டரான திருமதி. சுசீலா நய்யார் நாடு விடுதலை பெற்ற நாளிலே கூறியுள்ளார்.

கவிஞன் பாரதியும், காந்தியடிகளும் கொண்ட கருத்தே சரியானதென்பதைக் காலம் காட்டிவிட்டது. ஆயினும் சுதந்திரம் பெற்ற இந்தியாவிலே அமைதியில்லை, சாதிச் சண்டைகளும், சமயச் சண்டைகளும், இனச் சண்டைகளும் அன்றாடக் காட்சிகளாகிவிட்டன. போதாக் குறைக்கு வர்க்கப் போராட்டம் வேறு உருவாகி வருகின்றது. இந்த நிலை சமூக விடுதலையின்றியே அரசியல் விடுதலையை அடைய முடியும் என்று கருதிய பாரதியாரும் காந்தியடிகளும் அறியாததன்று.

"வினை விதைத்தவன் வினையறுப்பான்". நம்மவர்க்குள் பரஸ்பர அநீதியுள்ளவரை தேசத்தில் சமாதானம் இராது. நாம் பல வகைகளிலே துன்பப்பட நேரிடும்."

[பாரதி தமிழ்; பக். 31]

என்பதாக மிகுந்த தீர்க்கதரிசனத்துடன் நாடு விடுதலை பெறுவதற்கு முன்பே பாரதியார் எச்சரிக்கை செய்துள்ளார்.

முதலில் சமூக சீர்திருத்தமா? அல்லது அரசியல் விடுதலையா? —என்ற வினவுக்கு விடை காண்பதிலே பாரதியாருக்கும் பாரதிதாசனுக்கும் கருத்து வேற்றுமை காணப்படினும், "சமூக சீர்திருத்தத் தொண்டு தள்ளிப் போடக்கூடியதன்று" என்ற கருத்தையே இந்த இரு பெரும் புரட்சிக் கவிஞர்களும் கொண்டிருந்தனர்.

மகாகவி பாரதியார் அரசியல் விடுதலைக்கேயன்றி, பொருளாதார விடுதலைக்கும், சமூக விடுதலைக்கும் முரசொலித்தார். "ஆணோடு பெண் சமம்' என்று பிரகடனம் செய்தார். "முப்பது கோடி ஜனங்களின் சங்கம் முழுமைக்கும் பொது உடைமை" என்று பாடினார். விடுதலை என்பது, பறையருக்கும் தீயருக்கும் புலையருக்கும் பரவருக்கும் குறவருக்கும் மறவருக்கும் கிடைப்பதாக

இருக்கவேண்டும்—என்றார் பாரதியார். ஆம்; "விடுதலை" என்பது பாரத மண்ணுக்குமட்டுமல்ல; அந்த மண்ணில் வாழும் கோடானு கோடி மக்களுக்குந்தான். இதுவே பாரதியாரின் கொள்கை.

பாரதியாரின் அரசியல் விடுதலைக் கொள்கைக்கு தம்மை வாரிசாகச் செய்துகொள்ள பாரதிதாசன் தவறி விட்டார். ஆயினும், சமூக சீர்திருத்தக்கொள்கைக்கு அவர் ஒருவரே வாரிசாகத் திகழ்ந்தார்.

இன்னும் அந்த இடத்திலே அவர் ஒருவராகவே இருந்து வருகிறார்.

பாரதியார் கண்ட மகாகவிகள்

மகாகவி கம்பர் உலக மகாகவிகள் மத்தியிலே சக்கர வர்த்தியாக விளங்கி வருகின்றார். சைவ வைணவப் புலவர் களேயன்றி, இஸ்லாமிய — கிறித்துவப்புலவர்களிலேயும் பலர் கம்பர் புகழ் பரப்பப்பாடுபட்டுள்ளனர். அதனுல், பாரதி தோன்றுவதற்கு முன்பே தமிழுலகில் கம்ப ராமாய ணம் ஒளி வீசித்திகழ்ந்தது. ஆயினும், தேசியக்கவி பாரதி யார், கம்பரைப் புதிய கோணத்திலிருந்து பார்த்தார். அது வரை வேறெந்தப்புலவரும் கம்பரை உலக கவியாக வரு ணித்ததில்லே. வைணவக் கவியாகவோ, தமிழ்க்கவியாக வோதான் வருணித்தனர். பாரதியார்தான்,

''யாமறிந்த புலவரிலே
கம்பரைப் போல் ...
பூமிதனில் யாங்கணுமே
பிறந்த தில்லே;
உண்மை வெறும்
புகழ்ச்சி யில்லே''

என்று பாடினர். ''கம்பர் பாடிய மாகாப்பியம், வைணவர் களுக்கு மட்டுமோ, இந்துக்களுக்கு மட்டுமோ அல்லாமல், இந்தியாவிலுள்ள மக்கள் அனைவருக்குமுரிய பொதுச் சொத்து'' என்று கூறினர். ஆம்; ''கம்ப ராமாயணம் ஆர்ய ஸம்பத்து'' என்ருர் பாரதியார். வட மொழியில்

ராமாயணம் படைத்த வால்மீகியும் இந்தியில் ராமாயணம் தந்த துளசிதாசரும் பிறந்த வடபுலத்துக்கும் கம்ப ராமாயணத்தை உரிமையாக்கினர். இது, கம்ப ராமாயணத்திற்கு வேறெந்தப் புலவரும் தராத மதிப்புரையாகும். பாரதி தேசியக்கவியானதால், கம்பரை அகில இந்தியாவிலும் உலவவிட ஆசைப்பட்டார்.

தமிழ் நாட்டில் பிறந்ததால் கம்பருக்குப் புகழா? கம்பரைப் பெற்றதால் தமிழ் நாட்டுக்குப் புகழா?—என்ற வினவுக்கு விடையளிப்பவர் போல,

"கல்வி சிறந்த தமிழ்நாடு புகழ்
கம்பன் பிறந்த தமிழ்நாடு"

என்று பாடி, "கம்பன் பிறந்ததால்தான் தமிழ் நாட்டுக்குப் பெருமை" என்று அழுத்தமாகக் கூறுகின்றார்.

கம்பரை "மானிடன்" என்றார் பாரதி. தன் "சுயசரிதை"யினுள், "கம்பனென்றொரு மானிடன் வாழ்ந்ததும்" என்று கூறியுள்ளார். இதன் பொருள், "கலைமகளே கம்பன் என்ற பெயரில் மானிடர் மத்தியில் வாழ்ந்தாள்" என்பதாகும். ஆம்; கம்பர், பிறப்பால் மானிடர்; ஆனால், புலமையால் கலைமகளின் அவதாரம். மானிடச் சிப்பியிலே அவதரித்த மகாத்மா! இதோ, பாரதியார் கூறுகின்றார், கேளுங்கள்:

"கம்பனைப் போன்ற கவிஞர்கள் இக்காலத்தில் யார் இருக்கிறார்கள்? தமிழர்களாகிய நமக்குள்ளே ஆண்மை போய் விட்டது; வீரியம் போய்விட்டது; நமக்குத் தேசம் கிடையாது; ராஜ்யம் கிடையாது; சுயாதீனம் கிடையாது. இந்த நிலையில், "சரஸ்வதி" இந்நாட்டிலே அவதரிப்பாளா?"

இதில், "கம்பனைப்போல் ஒரு மகாகவி மானிட வடிவில் வாராத காலம் சரஸ்வதியின் அருள் பெறாத காலம்" என்கிறார் பாரதியார். உண்மைதானே!

கம்பர் புனைந்த கவிதைகளிலே ஒவ்வொன்றும் தெய்வீகமானது என்பது பாரதியார் கருத்து. 'யான்' என்ற தமது வேதாந்தப் பாடலிலே தெய்வத்தின் கூற்றாக, "கம்பன் இசைத்த கவியெலாம் நான்" என்று பாடுகின்றார்.

கம்பர் தாம் படைத்த மாகாப்பியத்திலே பரம்பொருள் தத்துவத்தை ஆங்காங்கே சுட்டிக் காட்டி, அதனை ஒரு சாத்திரக் களஞ்சியமாக்கியுள்ளார். இந்த உண்மையை உணர்ந்த பாரதியார்,

"எல்லையொன் றின்மை
எனும்பொருள் அதனைக்
கம்பன் குறிகளாற்
காட்டிட முயலும்
முயற்சியைக் கருதியும்,
முன்புநான் தமிழச்
சாதியை அமரத்தன்மை
வாய்ந்தது என்று
உறுதிகொண் டிருந்தேன்.
ஒருபதி னாயிரம்
சனிவாய்ப் பட்டும்
தமிழச் சாதிதான்
உள்ளுடை வின்றி
உழைத்திடு நெறிகளைக்
கண்டு எனது உள்ளம்
கலங்கிடா திருந்தேன்"

என்று பாடுகின்றார். "எல்லையொன்றின்மை எனும் பொருள் அதனை, குறிகளாற் காட்டிட முயலும்" கைத்திறனைக் கம்ப ராமாயணத்திலே காண்கின்றார் பாரதியார். அதனாற்றான், "கம்பன் இசைத்த கவியெலாம் நான்" என்று பரம்பொருள் கூற்றாகப் பாடுகின்றார்.

இந்த உண்மையை இன்னும் தெளிவாகப் புலப்படுத்துகின்றார். இதோ :

"எல்லாம் ஈசன் செயல்; எல்லாம் அவனுடைய ரூபம். கம்ப ராமாயணத்தில் ஹிரண்யனுக்கு ப்ரஹ்லாதாழ்வான் உபதேசித்தருளியபடி, அவன்

"சாணிலும் உளன்; மற் றுங்கோர்
அணுவினை சத கூறிட்ட
கோணிலும் உளன்; மாமேருக்
குன்றிலும் உளன்; இந்நின்ற
தூணிலும் உளன்; யான் சொன்ன
சொல்லிலும் உளன்"

(பாரதி நூல்கள்: கட்டுரை பக். 166)

இதனை, பரம்பொருளை இரணியன் கண்களுக்குக் காட்டிய கவிதையாகக் கருதுகின்றார் பாரதியார்.

மிகச் சிறந்த கவிதைக்கு மகாநதியைச் சான்று காட்டினார் கம்பர். இராம—லட்சுமணர், கோதாவரி நதியைக் கண்ட காட்சியைக் கூறுமிடத்து,

"புவியினுக்கு அணியாய் ஆன்ற
பொருள்தந்து புலத்திற்றாகி
அவியகத் துறைகள் தாங்கி
ஐந்திணை நெறியளாவி

சவியுறத் தெளிந்து தண்ணென்
றொழுக்கமுந் தழுவிச் சான்றோர்
கவிஎனக் கிடந்த கோதா
வரியினை வீரர் கண்டார்.''

என்று வருணிக்கின்றார். இந்தக் கவிதையின் கருத்தை ஏற்றுக்கொள்வதோடு, மேற்கொண்டு விளக்கமுந் தருகின்றார் பாரதியார்.

''நமது கவிதையிலே ஆனந்தம் குறையத் தொடங்கிற்று, ருசி குறைந்தது. கரடுமுரடான கல்லும் கள்ளி முள்ளும் போன்ற பாதை நமது கவிகளுக்கு நல்ல பாதையாகத் தோன்றலாயிற்று. கவிராயர் கண்என்பதை 'சக்கு' என்று சொல்லத் தொடங்கினர்; ரஸம் குறைந்தது; சக்கை அதிகப்பட்டது. உண்மை குறைந்தது; பின்னல் திறமைகள் அதிப்பட்டன.

''கவியுறத் தெளிந்து
தண்ணென் றொழுக்கமும்
தழுவிச் சான்றோர்
கவியெனக் கிடந்த
கோதா வரியினை
வீரர் கண்டார்''

என்று கம்பன் பாடியிருக்கிறான்.

''சவி'' என்பது ஒளி; இது வடச்சொல்; கம்பன் காலத்தில் அதிக வழக்கிலிருந்தது போலும். ''ஒளி பொருந்தும்படி தெளிவு கொண்டதாகி, தண்ணென்ற (குளிர்ந்த) நடையுடையதாகி, மேலோர் கவிதையைப் போலக் கிடந்த கோதாவரி நதி'' என்று கம்பன் வருணனை செய்கிறான். எனவே, கவிதைகளில் ஒளி, தெளிவு,

குளிர்ந்த நடை மூன்றும் இருக்க வேண்டுமென்பது கம்ப னுடைய மதமாகும். இதுவே நியாயமான கொள்கை."
(பாரதி நூல்கள் - கட்டுரை; பக். 75-76)

கவிதைக்குக் கம்பன் சொன்ன இலக்கணத்தை உரை நடைக்கும் பொருத்திக் காட்டுகின்ருர் பாரதியார். இதோ:

"வசனநடை, கம்பர் கவிதைக்குச் சொல்லியது போலவே, தெளிவு, ஒளி, தண்மை, ஒழுக்கம் இவை நான்குமுடையதாயிருக்க வேண்டும். இவற்றுள், ஒழுக்க மானது தட்டுத் தடையில்லாமல் நேரே பாய்ந்து செல்லும் தன்மை. நமது தற்கால வசன நடையில் சரியான ஒட்ட மில்லை. தள்ளாட்டம் அதிகமாகக் காணப்படுகிறது. உள் ளத்திலே தமிழ்ச் சக்தியை நிலைநிறுத்திக்கொண்டால், கை நேரான தமிழ் நடை எழுதும்."

பாரதியார் வாழ்ந்த காலத்தில் இந்தியாவைப் போலவே பிரிட்டிஷாருக்கு அடிமைப்பட்டிருந்த சின்னஞ் சிறு நாடான அயர்லாந்தும் சுதந்திரத்திற்காகப் போரா டிக் கொண்டிருந்தது. அப்போது, லாயிட் ஜார்ஜ் என்ற பிரபல இராசதந்திரி பிரிட்டிஷ் பேரரசின் பிரதமராக இருந்தார். அவர், "ஐயர்லாந்திற்குச் சுதந்திரம் கொடுக்க முடியாது" என்று வீம்பு பேசினர். அவரது ஆணவத் திற்கு கம்பன் கண்ட இராவணனைச் சான்று காட்டி எச் சரித்தார் பாரதியார்.

"ஐர்லாந்தை இறுகப் பிடித்துக் கொண்டிருக்கும் கைப்பிடியை நெகிழவிடப் போவதில்லை" யென்று மிஸ்டர், லாயட் ஜார்ஜ் சொல்லுகிருர். இங்கு,

"மீ தெழும் மொக்குளன்ன
யாக்கையை விடுவ தல்லால்
ஸீதையை விடுவ துண்டோ,
இருபது திண்தோள்
உண்டா(க)?"

("நீர் மீதெழும் குமிழி போன்ற இந்த சரீரத்தை விட்டாலும் விடுவேனே யல்லாமல், என் உறுதியான தோள் இருபதுமிருக்கையிலே, நான் ஸீதையை விடுவேனென்று நினைக்கவுஞ் செய்யலாமோ?'') என்று இராவணன் சொல்லியதாகக் கம்பன் எழுதியிருக்கிற வரிகள் எனக்கு ஞாபகத்துக்கு வருகின்றன. ராவணனுடைய கதி மிஸ்டர் லாய்ட் ஜ்யார்ஜுக்கும் வரக்கூடாதென்று நான் மனப்பூர்வமாகக் கடவுளை வேண்டுகிறேன்.''

"கர்ணனோடு கொடை போச்சு; கம்பனோடு கவிதை போச்சு'' என்பது பழமொழி. இதனை, தமது கவிதையொன்றிலே மிகத் திறம்பட எடுத்தாளுகின்றார் பாரதியார்.

கன்னனொடு கொடைபோயிற்றுயர் கம்ப
நாடனுடன் கவிதை போயிற்று;
உன்னரிய புகழ்ப் பார்த்தனொடு வீரமகன்றது
எனவுரைப்பர் ஆன்றோர்.
என்னகநின் றகலாதோன் அருட்சுப்ப ராம
என்னும் இணையிலாவிற்
பன்னனொடு சுவைமிகுந்த பண்வளனு மகன்ற
எனப் பகரலாமே.

இது, இசை மேதை சுப்பராம தீட்சிதர் காலமான போது பாடிய இறங்கற் பா.

"கம்பனோடு கவிதை போய் விட்டது'' என்ற பழமொழியினை, தமது கட்டுரை யொன்றிலேயும் உறுதிப் படுத்துகின்றார் பாரதியார்.

"தமிழ் நாட்டை எடுத்துக் கொள்வோம். இங்கே கம்பனைப் போன்ற கவிஞர்கள் இக்காலத்தில் யார் இருக்கின்றார்கள்? கம்பனைப் போன்ற கவிஞர் அடிக்கடி தோன்

றுவதில்லை யென்பதைச் சிலர் ஆக்ஷேபமாகக் கொண்டு வரலாம். கம்பனுடைய பெருமையிலே நூற்றில் ஒரு பங்கு கொண்டோர் யாவர் இருக்கிறார்கள்? பாண்டித்தியம் உடையோர்களும் பாண்டித்தியம் இருப்பதாக நினைத்துக் கொள்வோர்களும் கவிகள் கூறத் தொடங்கிவிடுகிறார்கள். கவித் திறமை இருப்பதற்கு பாண்டித்தியம் ஒருவாறு அவசியமென்றாலும்; பாண்டித்தியம் இருப்போர்களுக்கெல்லாம் கவிதா சக்தி இருப்பதில்லை யென்பதை நம்மவர்கள் மறந்து விட்டார்கள். இலக்கண வித்துவான்கள்கூடத் தாம் கவிபாடாமல் இருந்தால் அது மதிப்புக் குறைவென்று நினைத்துக் கொள்கிறார்கள். இங்ஙனமாக, உண்மையான கவிதை இந்நாட்டிலே மறைந்து போய் விட்டது.''

[பாரதி தமிழ்; பக். 35]

ஆங்கிலேயர் நாடகப் பேராசிரியரான ஷேக்ஸ்பியரைப் பெற்றதற்காகப் பெருமைப்படுகிறார்கள். அப்படி, தமிழர் பேசிக்கொள்ள, ஷேக்ஸ்பியர் போல ஒரு மகாகவி தமிழகத்தில் தோன்றியதுண்டா?—என்ற வினவுக்கு விடையளிப்பவர்போல கற்பனைச் சான்று காட்டுகின்றார் பாரதியார்.

''நாங்கள் இந்தியா தேசத்து ராஜ்யாதிகாரத்தை இழக்க ஒருப்பட்டாலும் ஒருப்படுவோமேயன்றி ஷேக்ஸ்பியரை இழக்க ஒரு நாளும் ஒருப்படமாட்டோம்'' என்று 'மெக்காலே' என்னும் ஆங்கிலேயர் சொல்லுகிறார். இந்த மாதிரியாகப் பெருமைப்படுத்தி நம்மவர் கம்பனைச் சொல்லலாம்...''

[பாரதி நூல்கள் கட்டுரை.]

மகாகவி கம்பரொடு தெலுங்கு மகாகவி போத்தனாவை ஒப்பிடுகிறார் பாரதியார். ஆம்; முதனூலை மிஞ்சும் வகையில் வழிநூல் செய்வதிலே மட்டும்! அது வருமாறு:

"தெலுங்குப் பாஷையில் மிகச்சிறந்த காவியமாக ஸ்ரீ பாகவதத்தை எழுதினர் 'போத்தன்ன' என்ற மகாகவி.

"இவருடைய பாகவதம் நம்முடைய இராமாயணத்தைப் போல ஸம்ஸ்கிருத நூலைத்தழுவி எழுதப்பட்ட வழி நூல் ஆயினும் படிப்பவருக்கு முதனூலத்தனை பெருமை தோன்றும்படி அமைந்திருக்கிறது. நாம் கம்பராமாயணத்தைக் கொண்டாடுவது போலவே, தெலுங்கர் 'போத்தன்ன'வின் பாகவதத்தைக் கொண்டாடுகிறார்கள்."

[பாரதி கட்டுரை ; 'கவி'.]

பாரதியார், மகாகவி கம்பருக்குத் தமிழ் நாட்டில் நினைவுச் சின்னம் எழுப்பாததை நினைந்து, அவரது நினைவு நாளைக்கூட கொண்டாடாத நிலை குறித்து வருந்தினர். அது பற்றி தேசியக்கவி வெளியிட்டுள்ள கருத்துக்கள் வருமாறு:

"தமிழ் நாட்டில் இப்போது 'புதிய உயிர்' தோன்றியிருப்பதால், கம்பன், இளங்கோ, திருவள்ளுவர் முதலிய மகாகவிகளுக்கு ஞாபகச் சிலைகளும் வருஷோத்ஸவங்களும் ஏற்பாடு செய்யவேண்டும்.

"திருவெழுந்தூரிலும் கரூரிலும் ஞாபகச் சின்னம் ஏற்படுத்த வேண்டும்.

[பாரதி நூல்கள்—கட்டுரை; பக். 402-403]

"கம்ப நாடர் மாயவரத்திற்கு ஸமீபத்திலுள்ள திருவெழுந்தூரில் பிறந்தவர். அந்த ஊரிலே அவருக்கு ஞாபகச் சின்னம் ஏற்படுத்த வேண்டுமென்று சில வருஷங்களின் முன்பு ஒருவர் முயற்சி செய்தார். ஊக்கமில்லாமையால் அம்முயற்சி நிறைவேறவில்லை. கம்பனுடைய ஜன்ம திதி நிச்சயமாகத் தெரியவில்லை.

['பாரதி தமிழ்' பக். 121.]

தமிழ்மொழியின் அருமை பெருமைகளை அறியாமல் அதனைக் குறைத்துப் பேசும் பரங்கி மொழி பக்தர்கள் பாரதியார் காலத்திலும் இருந்தார்கள். அவர்களுக்குப் பதிலளிக்கும் பாவனையில், வாலிபனுக்கும் புலவனுக்கும் நடக்கும் உரையாடலாகத் தமது "இந்தியா" வார இதழில் பாரதியார் ஒரு கட்டுரை எழுதினர். அதிலே, கம்ப ராமாயணத்தின் சிறப்பு பற்றிய பகுதி வருமாறு :

புலவன் : தமிழர்கள் நேர்மையாய் இருந்த காலத்தில் திருத்தக்க தேவர், இளங்கோ, கம்பர் முதலிய எண்ணிறந்த தமிழ்ப் புலவர் இருந்து அருமையான தெய்வீகப் பாடல்களை பாடியிருக்கிறார்கள்.

வாலிபன் : சும்மா ஸ்தோத்திரம் பண்ணுதேயும் ; கம்பன், டம்பன் எல்லாம் நானும் கொஞ்சம் பார்த்திருக்கிறேன்.

புலவன் : அப்பா, தயைசெய்து உளருதே. காலேஜுகளிலே கம்ப ராமாயணம் சொல்லித் தரப்படும் மாதிரியிலே உனக்கும் உன்போன்றோர்க்கும் தமிழ்ப் புலவர்களிடம் வெறுப்பு ஏற்படுதல் சகஜமேயாம். எனினும், போப் முதலிய ஆங்கிலேய வித்துவான்கள் கூடப் பண்டைத் தமிழ்ப் புலவர்களின் தமிழ்க் கருத்துக்களையும் பெருமைகளையும் கண்டு மிகுந்த வியப்படைகிறார்கள்.

கம்ப ராமாயணத்திலே ஸீதை தனியாக அசோக வனத்திலே இருக்கும்போது ராமபிரான் அவ்வப்போது செய்த செய்கைகளையும் விளையாட்டுகளையும் நினைந்து நினைந்து வருந்திக் கொண்டிருப்பதாகச் சில பாடல்கள் சொல்லப்படுகின்றன. அதிலே ஒரு பாட்டை உனக்கு எடுத்துச் சொல்லிப் பொருள் கூறுகின்றேன். அது ஸ்ரீராமன் பட்டாபிஷேகம் பெறும்படி கட்டளை இடப்பட்ட காலத்திலேயும், 'ராஜ்யத்தைவிட்டு வனாந்தரம் செல்'

என்று கட்டளையிடப்பட்டபோதும் ஒரே மாதிரி மன முடையவனாக முகம் மலர்ந்திருந்த வியப்பை ஸீதை நினைத்துப் பார்த்துக் கொள்வதாகக் கூறப்படுகிறது. அப்பாட்டைக் கேள் :—

"மெய்த் திருப்பத
 மேவென்ற காலையும்
இத்திருத் துறந்
 தேகென்ற போதிலும்
சித்திரத்தி னலர்ந்த
 செந் தாமரை
ஒத்தி ருக்கும்
 முகத்தினை யுன்னுவாள்"

பார்த்தாயா ? இதிலே என்ன ஓசை நயமும், சொல் நயமும், பொருள் இன்பமும் மலிந்து கிடக்கின்றன. இதை உனக்கு திருஷ்டாந்தமாகச் சொன்னேன். இவ்வாறு கம்ப ராமாயணத்திலே ஆயிரக்கணக்கான பாட்டுக்கள் செறிந்து கிடக்கின்றன.

ரெயில்வே தந்தி மோட்டார் வண்டி 'முதலிய' விஷயங்களைப் பற்றிக் கேள்விப்பட்டிராததனால் கம்பன் தெய்விகமான கவியென்பது பொய்யாய் விடுமா ?"

[பாரதி புதையல்—பகுதி; பக். 69-70]

'பாட்டுக் கொருவர்' எனப் பாராட்டப் பெறும் பாரதியார், கப்பலோட்டிய தமிழர் இரண்டு ஆயுள் சிறைத் தண்டனை பெற்றுப் பாளையங்கோட்டைச் சிறையில் அடைப்பட்டிருந்தபோது அவரைப் பார்க்கச் சென்றார். சிறையில் சிதம்பரனாரின் திருமுகத்தைப் பார்த்தபோது, அவருக்குக் கம்ப ராமாயணப் பாடலொன்று நினைவுக்கு வந்ததாம். அதனை அவரே சொல்லக் கேட்போம் :

"பாளையங்கோட்டை ஜெயிலுக்குப் போய்ச் சேர்ந்தேன். அங்குள்ள அதிகாரிகளின் அனுமதியின் பேரில் உள்ளே சென்று ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை, ஸ்ரீ சுப்பிரமணிய சிவன் இருவரையும் கண்டு பேசினேன். ஸ்ரீ சிதம்பரம் பிள்ளையை முன்பு நான் தூத்துக்குடியிலே அவருடைய அரியபிரசங்கங்களை ஆயிரக்கணக்கான ஜனங்கள் கேட்டுப் புகழ்ச்சி கூறிக் கொண்டிருந்த காலத்தில் பார்த்தபோது அவருடைய முகம் எவ்வளவு பிரசன்னமாகவும் தேஜஸுடனும் விளங்கியதோ அந்த மாதிரியிலே இப்பொழுதும் இருக்கக்கண்டேன். உடனே எனக்கு,

"மெய்தி ருப்பத
மேவென்ற போதினும்
இத்திறத் துறந்தே
ஏகென்ற காலையும்
சித்திரத் தினலர்ந்த
செந் தாமரை
யொத்திருக்கு
முகத்தினை யுன்னுவாள்"

என்ற கம்ப ராமாயணப் பாட்டு ஞாபகத்திற்கு வந்தது."

[பாரதி புதையல்—2; பக். 156-57]

பாரதியார், கம்ப நாடரை மாகாப்பியம் பாடிய மகா கவியாக மட்டுமல்லாமல், ஐம்புலன்களையும் வென்ற அறவோராகவும் ஆன்ம ஞானியாகவும் கருதினர். ஆம்; கம்பன், மானிடன் தான். ஆனல், மானிட வடிவில் நடமாடிய மகாசக்தி. இது, கம்பரைப் பற்றி பாரதியாரின் கொள்கை.

பாரதியார், தாம் புனைந்தருளிய கவிதைகளிலே இளங்கோவடிகள் பற்றியும், சிலப்பதிகாரம் பற்றியும் நான்கு இடங்களிலும்; தம்முடைய உரைநடைக் கட்டுரைகளிலே மூன்றிடங்களிலும் குறிப்பு தந்துள்ளார். ஆம்: இளங்கோ பற்றியும் சிலம்பு பற்றியும் தம் எழுத்தோவியங்களிலே இங்குமங்குமாக ஒரு சிலஇடங்களில்தான் குறிப்பிட்டுள்ளாரென்றாலும், இளங்கோவுக்குப் பின்னுள்ள இரண்டாயிரமாண்டு காலத்திலே, வேறு எந்தக் கவிஞரும் அந்த மகாகவிக்கும் அவரது காப்பியத்திற்கும் தராத பெருமையினை தேசியக் கவி பாரதியார் தந்துள்ளார் என்பது நினைவில் கொள்ளத் தக்கதாகும்.

பாரதியாருக்கு முன் தோன்றிய புலவர்கள்—ஏன், பாரதியார் காலத்துப் புலவர்கள்கூட, சிலப்பதிகாரத்தை சமண சமயக் காப்பியமாகவே கருதினர். அதனால், சமயக் காழ்ப்புடையோர், அந்த மாகாப்பியத்தைப் புறக்கணித்தனர். சமயக் காழ்ப்பற்ற புலவர்களும், அதனை, தமிழினத்தின் தனிவுடமையாகவே கருதினர்.

பாரதியார், தேசியவாதி! 'தேசபக்தி' என்ற புதிய மதம் தோன்றிய காலத்தில் வாழ்ந்தவர். ஆதலால், இளங்கோவடிகளை உலக மகாகவிகளில் ஒருவராக—ஏன், அவர்களெல்லோரையும்விட சிறந்தவராக வருணித்தார். அவர் தந்த மாகாப்பியத்தை, பாரதப் பெருநாடு முழுவதற்குமுரிய தேசியச் சொத்தாகக் கருதினர். அப்படிக் கருதுமாறு பாரத மக்களுக்கும் அறிவுரை கூறினர்.

"காளிதாசன் செய்த சாகுந்தல நாடகம், ஹிந்தி பாஷையிலே துளஸிதாஸர் செய்திருக்கும் ராமாயணம், கம்ப ராமாயணம், சிலப்பதிகாரம், திருக்குறள், ஆண்டாள் திருமொழி—இவையனைத்துக்கும் பெயர் ஆர்ய ஸம்பத்து.

பாரதியார், "ஆர்ய சம்பத்து" என்றது "தேசியச் சொத்து" என்ற பொருளில்தான்.

இராமாயணமும் காளிதாசரின் சாகுந்தலமும் தேசியச் சொத்துக்களாகிவிட்டன. ஆனால் சிலப்பதிகாரம் இன்னமும் "தமிழகம்" என்னும் பெட்டிக்குள்ளேதான் அடைப்பட்டிருக்கிறது.

'தமிழ்' என்ற கவிதையிலே, "யாமறிந்த புலவரிலே... இளங்கோவைப்போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்த தில்லை" என்று பாடினார் பாரதியார். "இது உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை" என்றும் சத்தியஞ் செய்கிறார்.

இளங்கோவடிகள் தந்த சிலம்பு வடமொழியின் வழி நூலன்று; தமிழில் தோன்றிய முதல் நூல்; தலை நூல்! காப்பியத் தலைவியான கண்ணகியும் தலைவனான கோவலனும் இளங்கோவின் கற்பனையில் பிறந்தவர்களல்ல; தமிழகத்தின் வரலாற்று நாயகி நாயகராவர். காப்பியத்திலே, 'தமிழர்' என்ற இனவுணர்ச்சி ஒளிவிடுகிறது. அதனால், தமிழ் இனத்திற்கு அழியாத வாழ்வு—அமரவாழ்வு தரும் பெருமை சிலம்புக்கு உண்டு. இதனை உணர்ந்தவர்போல "தமிழச் சாதி" என்னும் பாடலிலே,

"சிலப்பதி காரச்
செய்யுளைக் கருதியும்,

....

முன்புநான் தமிழ்ச்
சாதியை "அமரத்
தன்மை வாய்ந்தது" என்று
உறுதிகொண் டிருந்தேன்."

என்று கூறுகின்றார் பாரதியார்.

பாரதியார் சிலப்பதிகாரத்தை ஒரு பத்தினியின் கதையாக மட்டும் அல்லாமல், மாபெரும் வீராங்கனை நிகழ்த்திய

அரசியல் புரட்சி பற்றிய காப்பியமாகவும் கருதினார். இதனை,

—"நெஞ்சை
அள்ளும் சிலப்பதி
காரமென் றோர்—மணி
ஆரம் படைத்த
தமிழ் நாடு"

என்ற வரிகளால் அறிகின்றோம். பாரதியாரின் நெஞ்சை யள்ளியது "வழக்குரை காதை"யாகத்தான் இருக்க முடியும்.

சிலப்பதிகார வழக்குரை காதையை நினைவில் கொண்டு மகா பாரதத்தைப் படித்த பாரதியார், கொடுங் கோலரான துரியோதனுதியரை எதிர்த்த பாஞ்சாலியை வடநாட்டுக் கண்ணகியாகவே கண்டார். அதனால், அரசவையில் நின்று பாஞ்சாலி சூளுரைத்த பகுதியை "பாஞ்சாலி சபதம்" என்ற பெயரால் குறுங்காப்பியமாக்கினார்.

மாபாரதத்திலே, நாடகக்காரர்கள் "சூது — துகிலுரிதல்", என்றும், பாகவதர்கள் 'திரௌபதி மான சம்ரட்சணம்" என்றும், வில்லிபுத்தூரார், "சூதுபோர்ச் சருக்கம்" என்றும் பெயரிட்ட பகுதிக்கு, "பாஞ்சாலி சபதம்" என்று பெயரிட பாரதியாரைத் தூண்டியது இளங்கோவின் சிலம்பிலுள்ள வழக்குரை காதைதான்!

பாரதியார், நெஞ்சையள்ளும் புரட்சிக் காப்பியம் படைத்த தமிழ் நாட்டிலே, மாணவர்கள் 'ஹோமரை'யும் 'ஷெல்லி'யையும் 'மில்டனை'யும் படித்து, அதன் விளைவாக, தங்கள் அன்னை மொழியான கன்னித் தமிழை மறந்து

அன்னிய மொழிபால் மோகங் கொண்டலைவதனைக் கண்டு வேதனையுற்றார். அந்த வேதனையால்,

"சேரன் தம்பி
  சிலம்பை இசைத்ததும்
அன்ன யாவும்
  அறிந்திலர் பாரதர்
ஆங்கிலம் பயில்
  பள்ளியுள் போகுநர்;
என்ன கூறிமற்
  றெங்கன் உணர்த்துவேன்
இங்கிவர்க் கென
  துள்ளம் எரிவதே!"

என்று பாடினார்.

பாரதியார், இளங்கோவுக்கு சிலையெடுக்கவில்லையே. அந்த மகாகவிக்கு ஆண்டுதோறும் விழா நடக்கவில்லையே யென்று வருந்தினார்.

"எதனை விரும்புகின்றோமோ, அது தோன்றுகிறது, எதை ஆதரிக்கின்றோமோ அது வளர்ச்சி பெறுகிறது. பேணாத பண்டம் அழிந்து போகும். பழக்கத்தில் இல்லாத திறமை இழந்துவிடப்படும்.

"அறிவுடையோரையும் லோகோபகாரிகளையும் வீரரையும் கொண்டாடாத தேசத்தில் அறிவும் லோகோபகாரமும் வீரமும் மங்கிப் போகும்.

"தமிழ் நாட்டில் இப்போது புதிய உயிர் தோன்றியிருப்பதால், நாம் இவ்விஷயத்தில் தமோகுணம் செலுத்தாமல், கம்பன், இளங்கோ, திருவள்ளுவர் முதலிய மகா

கவிகளுக்கு ஞாபகச் சிலைகளும் வருஷோத்ஸவங்களும் ஏற்பாடு செய்ய வேண்டும்.''

''ஐந்து மகா 'காவியங்களிலே சிறந்ததாய் 'சிலப்பதிகாரம்' செய்த இளங்கோ முனிவர் வஞ்சி நகரத்தில் பிறந்தவர். இந்த வஞ்சி நகரம் இப்போது திருச்சினுப்பள்ளிக்கு அருகேயுள்ள கரூர் என்று பண்டித மு. ராகவய்யங்கார் தீர்மானம் செய்கிறார். இந்த ஆசிரியரது ஜன்ம தினத்தையும் நிச்சயமாகச் சொல்வதற்கில்லை.''

[பாரதி நூல்கள்—கட்டுரை; பக். 403]

சிலப்பதிகாரம், ஒரு சமயச் சார்பற்ற—அனைத்துச் சமயத்தவர்க்கும் பொதுவான — தேசியக் காப்பியம். அதனால், தமிழர் என்ற இனவுணர்வு மறைந்து, சமயவுணர்வு ஒன்று மட்டுமே எழுச்சி கொண்டிருந்த இடைக்காலத்தில் சிலப்பதிகாரம் போற்றப்படவில்லை. சமயப் புலவர்களால் புறக்கணிக்கப்பட்டும் வந்தது.

இடைக்காலத்தில், ''தணிகையுலா'' என்ற இலக்கியமொன்றில் மட்டுமே சிலப்பதிகாரத்தைப் பற்றிக் குறிப்பிடக் காண்கிறோம். உரையாசிரியருள்ளும் நச்சினார்க்கினியர் ஒருவர் மட்டுமே தொல்காப்பியத்திற்குத் தாம் எழுதிய உரையுள் இரண்டிடங்களில் சிலம்பினைச் சான்று காட்டியுள்ளார்.

இருபதாம் நூற்றாண்டில், நாட்டில் புதிதாகத் தோன்றிய தேசிய உணர்ச்சி காரணமாக, பாரதியார் சிலம்பின் சிறப்பினை உணர்ந்தார். அது, தேசியச் சொத்து'' என அறிந்தார். நாட்டு மக்களுக்கும் அறிவிக்க முயன்றார். அதனால், இன்று சிலம்பு தேசியக் காப்பியமாகி விட்டது.

காலத்தை வென்ற கவி!

"மகாகவி பாரதியார் பாடிய தெய்வ பக்திப் பாடல்களே நிலைக்கும்; அவை காலத்தை வென்று எக்காலத்திலும் இருக்கும். அவருடைய தேச பக்திப் பாடல்கள், காலத்தை வெல்லா என்பதோடு காலத்தால் விழுங்கப்பட்டு விடும் என்று சொல்லப்படுகிறது.

இப்படிச் சொல்வோர், புலவர் பெருமக்களாகத்தான் இருக்கின்றனர். அவர்கள் நிற்கும் கோணத்திலே—அவர்களுக்கு அமைந்துள்ள பார்வையிலே—அவர்கள் கூற்று சரியாகவுமிருக்கலாம். ஆனால், அதனை ஏற்பதற்கில்லை. பாரதியாரின் கண்ணன் பாட்டு இல்லையானால் — விநாயகர் அகவல் இல்லையானால் — பக்திப் பாடல்களாக உள்ள தனிப் பாடல்கள் இல்லாதிருந்தால், தமிழுக்கு ஒன்றும் வறுமை வந்து விடாது. பாரதிக்கு முன்பே ஆழ்வாராதியரும் — சைவ சமயக் குரவர்களும் — தாயுமானவர், வள்ளலார் போன்ற அருளாளர்களும் தோன்றி பக்திப் பாடல்களை ஆயிரம் ஆயிரமாகப் பாடிக் குவித்து வைத்துள்ளனர். ஆகவே, பக்திப் பாடல்கள் பாடியதிலே பாரதியாருக்கு தனிப்பெருமையில்லை.

பாரதியாரின் தனிப் பெருமை அவர் பாடி வைத்துள்ள நாட்டுப் பாடல்கள்—சமுதாயப் பாடல்களில்தான் இருக்கின்றது. "எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்ததும்

இந்நாடே'' என்ற நாட்டுப் பாடல் ஒன்றே அவரை இலக்கிய உலகத்தில் நிலைக்கச் செய்யும். தேசபக்தி செத்தாலன்றி, பாரதியாரின் தேசியப் பாடல்கள் மறையா. தேச பக்தி செத்தாலும் அதற்குத் திரும்பவும் புத்துயிர் கொடுக்கும் ஆற்றல் பாரதியாரின் தேசியப் பாடல்களுக்கு உண்டு.

இந்திய விடுதலைப் போர் சுமார் ஒன்றரை நூற்றுண்டு காலம் நடந்தது. அவ்வளவு நீண்ட காலத்திலே "தேசிய மகாகவி'' என்னும் தகுதியோடு இந்திய உபகண்டத்திலே ஒரே ஒரு கவிதான் தோன்றினர். அவர்தான் சுப்பிரமணிய பாரதி. கவி தாகூரை நான் மறந்துவிடவில்லை. அவர் அப்பழுக்கற்ற தேசியவாதி. ஆனல் விடுதலைப் போர்க் களத்தில் நின்று பாடிய தேசியக் கவிஞரல்ல. இதில் எனக்கு ஐயப்பாடே கிடையாது. ஆகவே பாரதியாருக்குள்ள இடம் தனி இடமாகும்.

பாரதி பாடல்களிலே, இது தேச பக்திப் பாடல்; அது தெய்வ பக்திப் பாடல் என்று தனிமைப் படுத்திப் பார்ப்பது கஷ்டம். தேச பக்திப் பாடலிலேயும் தெய்வபக்தி மணக்கும்; தெய்வ பக்திப் பாடலிலேயும் தேசபக்தி மணக்கும். இப்படி தெய்வ பக்தியையும் தேச பக்தியையும் பிணைத்துப் பாடிய மகாகவி—அதையும் விடுதலைப் போர்க்களத்தில் நின்று பாடிய வீரக்கவி வேறு நாடு எதிலேனும் பிறந்திருப்பான என்பது ஐயப்பாடே! அது தமிழ் மண்ணுக்குள்ள தனிச் சிறப்பு.

"அச்சமில்லை, அச்சமில்லை அச்சமென்பதில்லையே'' எனத் தொடங்கும் ஒரு பாடலுக்கு 'பண்டாரப் பாட்டு' என்பதாக பாரதியாரே பெயர் வைத்துள்ளார். இன்னொரு வகையில் சொன்னல், அது, ஆனமீகப் பாடல்—வேதாந்தப் பாடல்—தத்துவப் பாடல் என்றெல்லாம் பெயர் பெறும். ஆனல், விடுதலைப் போர் நடந்த காலத்திலே அதுகூட

ஏகாதிபத்திய எதிர்ப்புப் பாடலாகப் பயன்படுத்தப் பட்டது. 'அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே' என்று பாடி, ஏகாதிபத்தியத்தைத் துச்சமாக மதித்து போலீஸ் படை சூழ்ந்துவரும் நிலையிலே தெருத் தெருவாக நடைபோட்ட தேசபக்த வீரர்கள் ஆயிரமாயிரமாவர்.

பாரதியாரின் தேசபக்திப் பாடல்கள்கூட ஒருபுற மிருக்கட்டும். நாட்டின் நடப்புகளையொட்டி அவன் படைத்துள்ள செய்திப் பாடல்களேனும் மறைந்துவிடுமா? அவைகூட மறையா.

"புதிய ருஷ்யா" என்னும் தலைப்பில் புரட்சியிலே பூத்த பொதுவுடமை ரஷ்யாவை பாரதி பாடியிருக்கிறரே, அது பழம் பாடல்தான். நடந்து முடிந்து அரை நூற்றுண்டாகி விட்ட புரட்சியைப் பற்றிய பாடல்தான். அதனுலேயே அது காலத்தால் விழுங்கப்பட்டு விட்டதா? இல்லையென் பதே என் கருத்து.

வீழ்ந்துவிட்ட பெல்ஜியத்தைப் பற்றி பாரதி பாடினுரே அதுவேனும் காலத்தால் மறைந்துவிட்டதா? இல்லை. "முறத்தினுல் புலியை ஓட்டும் மொய்வரைக் குறப்பெண்" ஒருத்தியையல்லவா உவமை காட்டியிருக்கிறுர். அந்த ஒரு உவமை அந்தப் பாட்டின் உயிராகிவிட்டது.

'கரும்புத் தோட்டத்திலே' என்று தொடங்கும் பாடலும் முன் எப்போதோ பிஜித் தீவிலே தமிழ்ப் பெண்கள் பட்ட துன்பங்களைக் கேட்டு மகாகவி பாடிய 'ஒப்பாரி'ப் பாட்டுத்தான். அதனை, காலம் விழுங்கிவிட்ட தென்று சொல்ல முடியுமா? உருவப் பொருளைத் தூதனுப் பினுல் ஏகாதிபத்தியத்தால் சிறைப்படுத்தப்படுமென்று நினைத்து மகாகவி பாரதி அருவப் பொருளான காற்றை யல்லவா தூதனுப்புகிறுர்? இந்த ஒரு நயம் அந்தப் பாட்டுக்கு அமரத்வம் தந்துவிட்டதே.

மகாகவி பாரதி ஒரு புதிய புரட்சியைச் செய்திருக்கிறார். அதுதான் தமிழுக்கு அவர் தந்த புது வாழ்வு.

அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கும் புருஷார்த்தங்கள் என்பர் புலவோர். வள்ளுவன் வீட்டைத் தவிர்த்து மற்ற மூன்றையும் பாடினான். பின்னால் வந்த பண்டாரப் புலவர்கள், வீட்டைப் பாடி மற்ற மூன்றையும் மறந்தார்கள். இடைக்காலத்தில் வந்தவர்கள்கூட அறம் பாடினார்கள்; அடுத்துள்ள பொருளை விட்டு இன்பம் பாடினார்கள்; இருக்கிறதோ இல்லையோ என்று எண்ணக்கூடிய வீட்டையும் பாடினார்கள். ஆனால், பொருள் பாடவில்லை. பாடக்கூடாதென்பதல்ல; பாடத் தெரியாதவர்களுமல்ல; பாட முடியாத சூழ்நிலை. ஆயிரமாண்டு காலம் தமிழகம் அன்னிய ஆதிக்கங்களுக்கு அடிமைப்பட்டிருந்தது. அந்த நிலையிலே பொருளைப் பாடுவது அன்னிய ஆதிக்கத்தோடு மோதுவதாக முடியும். அதனால் பொருள் பாடும் புலவன் தோன்றவில்லை. இடைக்கால—கடைக்காலப் புலவர்கள் பெரும்பாலும் ஆன்ம ஞானியர்களாக அமைந்தவர்களாதலால் அரசியலுக்குப் புறம்பாகவே அவர்கள் வாழ்ந்தார்கள். அதனாலும் அவர்கள் பொருள் பாட மறந்தார்கள். பொருள் பாடும் புலவர் பரம்பரை கம்பனோடு முடிந்து போய்விட்டது. அவன் கூட, "இல்லாரும் இல்லை; உடையாரும் இல்லை", "கள்வரிலாமையால் பொருள் காவலுமில்லை" என்ற சோசலிச கருத்துக்களை கதையாகத்தான் சொன்னார். அயோத்தியின் மேலேற்றிக் கற்பனையாகத்தான் சொல்லி வைத்தார். நாட்டின் நடப்போடு பிணைத்து ஆதிக்கவாதிகளுக்கு எதிராகப் பாடியிருந்தால் அவரும் என்ன ஆகியிருப்பாரோ?

வருணாசிரம நெறிப்படி, க்ஷத்திரியனை இராமபிரான் தலைமீது அந்தணனான வசிட்டன் மணிமுடியை எடுத்து வைத்தான் என்று சொல்லப் புகுந்தவன் — வருணாசிரமத்தை ஏற்றுக் கொள்ளப் புகுந்தவன் அதிலே

கொஞ்சம் சமத்துவம் காட்ட விரும்பி "சடையன் மரபுளோர் கொடுக்க, வாங்கி, வசிட்டனே புனைந்தான் மௌலி" என்பதாகச் சுற்றி வளைத்துப் பாடியிருக்கிறார். நாட்டின் நடப்பிலிருந்த வருணாசிரமக் கொடுமையை நேராக இழுத்து அதனை சாடிப் பாடவில்லை. பாடியிருந்தால், அவர் கதி என்ன ஆகியிருக்குமோ?

இப்படி, கம்பருக்குப் பின்னுள்ள ஆயிரமாண்டு காலத்திலே நடைமுறை அரசியலோடு தொடர்புடைய பொருளிலக்கியம் தோன்றாததால், தாய் மொழியானது அத்துறையிலே 'வறுமை' அடைந்தது. புலவர்களுக்கும் மக்களுக்கும் நடுவே மிகப் பெரிய இடைவெளி ஏற்பட்டது. ஆளுவோருக்கு அறிவுரை கூறும் அரசியல் தகுதியை புலவர்கள் இழந்தார்கள். ஆளுவோரைப் பார்த்து மக்கள் சார்பில் பேசும் ஔவையார்கள் தோன்றாதொழிந்தார்கள்.

இந்த அவலச் சூழ்நிலையிலேதான் பாரதியார் தோன்றி பொருளிலக்கியம் படைத்தார். செங்கோலை விரும்பி கொடுங்கோலைத் தாக்கிப் பாடினார். விடுதலையை விரும்பி அடிமைத்தனத்தை வெறுத்துப் பாடினார். அந்நிய ஆதிக்கத்தை மட்டுமின்றி, ஆயிரமாயிரமாண்டுகளாக உள் நாட்டில் நிலவி வந்த சாதிக் கொடுமைகளையும் சாடினார். வருணாசிரமத் தீமைகளையும் எதிர்த்தார். புராணப் பொய்மைகளையும் கண்டித்தார்.

பாரதியார் பாடி வைத்துள்ள சுமார் 1000 பாடல்களிலே 'பொருளிலக்கியம்' என்று சொல்லத் தக்க பாடல்கள் மிக மிகச் சொற்பம்தான். ஆனால், அந்தப் பாடல்களிலேதான் 'பாரதீயம்' இருக்கிறது. அந்தப் பாடல்கள் இல்லையானால் புதிய தமிழகத்தை விரும்பும் தமிழனுக்கு—

னவ பாரதத்தை விரும்பும் தேசபக்த இந்தியனுக்கு பாரதி தேவையற்றவராகி விடுவார். அப்போது அவர் மக்கள் கவிஞனல்ல. மதக் கவிஞர். அவரை பண்டார சன்னதி களின் பட்டியலிலேதான் சேர்த்து விடுவர்.

பாரதியார், 'யாமறிந்த புலவரிலே கம்பரைப்போல் வள்ளுவர்போல் இளங்கோவைப்போல் பூமிதனில் யாங் கணுமே பிறந்ததில்லை'' என்று பாடினர். தமிழகத்திலே வாழையடி வாழையென வந்த புலவர்கள் பல்லாயிரவர் களிலே இந்த மூவரை மட்டும் தேர்ந்தெடுத்து சிறப் பித்துப் பாடக் காரணமுண்டு. இந்த மூவரும் சமய வேலிக்குள் சிறைப்பட்ட மதக் கவிஞர்களல்லர். அந்த வேலியைக் கடந்து சமுதாயம் முழுவதற்கும் பயன்படும் வகையில் பாடிய மக்கள் கவிஞர்கள். அதனுற்றுன், 20-ம் நூற்றுண்டின் மக்கள் கவியான பாரதி, அந்த மூவருக்கு மட்டுமே முதன்மை கொடுத்தார்.

இளங்கோவடிகள் 'தமிழன்' என்னும் இனவுணர்வை ஏற்படுத்தி 'இந்தியன்' என்னும் தேசிய உணர்வோடு அதனை உறவுபடுத்த விரும்பினர். அதற்காக, கற்புத் தெய் வத்தைப் படைத்து அந்தத் தெய்வத்தின் பெயரால் தேசிய ஒருமைப்பாட்டை உபதேசித்தார். கண்ணகியின் சிலைக் குப் பொதிகையில் கல்லெடுக்க விரும்பாமல் இமயத்தில் கல்லெடுக்கச் செய்தார் இளங்கோ.

வடக்கு—தெற்கு உறவை வலியுறுத்தும் இளங்கோ, ஒன்றுபட்ட ஒரே இனமாகத்தான் வடவரோடு தமிழர் உறவு கொள்ள வேண்டுமென்கிருர். இரண்டாயிரமாண்டு களுக்கு முன்பு இளங்கோவடிகள் வலியுறுத்திய இதனையே இரண்டாயிரமாண்டுகளுக்குப் பின்பு தோன்றிய பாரதி யாரும் பாடினர். மொழிப்பற்ருேடு இனப்பற்ருேடு நாட்டுப் பற்றும் இணைய வேண்டும். நாட்டுப் பற்றுக்காக மொழிப்

பற்றையும் இனப்பற்றையும் துறந்துவிடக் கூடாது. இந்த உண்மையைப் போதித்தவர் அந்நாளில் இளங்கோ. பின்னாளில் பாரதி. இந்நாளில் அதுவே என் கொள்கை. நம்மீது ஆதிக்கம் செலுத்த விரும்புவோருக்கு அடங்கி நடப்பது ஒருமைப்பாடு ஆகாது. அது அப்பட்டமான அடிமைப்பாடு.

பாரதியார் பொருளிலக்கியம் படைத்தார் என்றாலும், அவரும் பொருளாதாரப் புரட்சிப் பாடல்களை தம் வாழ்வின் இறுதிக் காலத்தில்தான் பாடினார். ஆரம்ப காலப் பாடல்களிலே தேசபக்தியும் தெய்வபக்தியும் பின்னிக் கிடந்தாலும் வர்க்க வேற்றுமையைச் சாடும் புரட்சிக் குரலை அந்தப் பாடல்கள் பிரதிபலிக்கவில்லை.

1917-ல் ருஷ்யாவிலே—வர்க்கப் புரட்சி வெற்றி பெற்று சோசலிச ஆட்சி அமைந்த பின்னர்தான் இங்கிருந்த பாரதி "முப்பது கோடி ஜனங்களின் சங்கம் முழுமைக்கும் பொதுவுடமை" என்று முழங்கினார். "தனியொருவனுக்குணவில்லையெனில் ஜெகத்தினை அழித்திடுவோம்" என்பதாகப் பறை கொட்டினார். "எல்லோரும் ஓர் நிலை எல்லோரும் ஓர் விலை எல்லோரும் இந்நாட்டு மன்னர்" என்றும் பாடினார்.

ருஷ்யப் புரட்சியிலே அவர் தம் உள்ளத்தைக் கொள்ளை கொடுத்துவிட்டார். அந்தப் புரட்சியின் நடைமுறையை—அதிலே கலந்திருந்த கொலை, கொள்ளை, தீ வைத்தல் போன்ற கொடுமைகளை தம் உரைநடைக் கட்டுரைகளிலே வெறுத்து எழுதினார் என்றாலும், முதாலளித்துவத்தின் வீழ்ச்சியை அவர் வரவேற்றார். பாட்டாளி வர்க்கத்தின் எழுச்சியை அவர் பாராட்டினார். சாத்வீக முறையில் தம் தாய்த்திரு நாட்டிலும் சோசலிச சமுதாயம் நாளடைவில் அமையுமென்று நம்பினார்—அமைய வேண்டுமென்றும் விரும்பினார்.

பாரதி பாடல்களிலே ஒவ்வொன்றுக்கும்—அந்தப் பாடல் இயற்றப்பட்ட ஆண்டு, அதனை இயற்றுவதற்குத் தூண்டுதலாக இருந்த சந்தர்ப்பம், அந்தப் பாடலின் கருத்தை ஒட்டியோ, முரண்பட்டோ உரைநடைக் கட்டுரைகளிலே அவர் தந்த கருத்துக்கள் ஆகியவற்றைத் தொகுத்து அடிக் குறிப்புகளாகத் தர வேண்டும். அப்போதுதான் பாரதியத்தை முழுமையாகப் புரிந்து கொள்ள முடியும்.

பாரதி படைத்த பாரதீயம்!

செப்டம்பர் 11, கவிஞன் பாரதியின் நினைவு நாள்! அது, அந்த மகாகவி பிறந்த நாளன்று; இறந்த நாள்!—இல்லை, பாரதி—இறந்து, 'பாரதீயம்' பிறந்த நன்னாள்! ஆம்; பாரதி, தனி நபரல்லர். அவர் ஒரு தத்துவம். அதன் பெயர் 'பாரதீயம்'.

பாரதி பிறந்திலையேல், புதுமைத் தமிழ் பிறந்திருக்காது; புராணத் தமிழே தொடர்ந்திருக்கும். அந்த மகாகவி, விடுதலைப் போர்க்களத்திலே பிறந்தார்; அங்கேயே வளர்ந்தார்—வாழ்ந்தார்; போர்க்களத்திலேயே மறைந்தார்!

போர்க்களத்தே மாண்டால் வீரசொர்க்கம் கிடைக்கும் என்பது தமிழர் நம்பிக்கை. விடுதலை வீரரான பாரதியார், போர்க்களத்தில் இருந்த நிலையிலேயே மாண்டாராதலால், அவர் வீர சொர்க்கம் புகுந்தார்! ஆம்; அவர், சமரர்—அமரர்!

பாரதி ஒரு வகையில் காலந் தந்த கவிஞர்; இன்னொரு வகையில், காலத்தை வென்ற கவிஞர்! விடுதலைப் போரின் சூழ்நிலையால் கவிஞர் ஆனவராதலால் அவர் காலந்தந்த கவிஞர்! வாழையடி வாழையெனத் தெய்வ பக்திக் கவிஞர்களே தோன்றி வந்த தமிழ் நாட்டிலே—அதுவே காலத்தின் கட்டளை என்று ஆகிவிட்ட நம் தாய் நாட்டிலே

பாரதி, தன்னை ஒரு தேசபக்தக் கவிஞராக ஆக்கிக் கொண்டு, தன்னிலிருந்து தேசியக் கவிஞர்கள் வழிவழி தோன்ற ஒரு புது வழி வகுத்தார். !அதனால், அந்த மாமனிதர் காலத்தை வென்ற கவிஞராகிறார். அவர் தோன்றியில்லையேல், தமிழிலே தேசபக்திக்கு இலக்கிய மேது?

பாரதியார், வாழ்வாங்கு வாழ நினையாமல், தன்னை யழித்துக் கொண்டார். ஆனால்,' அழிவை நோக்கிச் சென்று கொண்டிருந்த தன் தாய் மொழிக்கு என்றும் அழியாப் புது வாழ்வு—புகழ் வாழ்வு தேடிவிட்டார்! அந்த வகையில் அவருக்கு இணை அவரேதான்!

அவர், சாதிகளை மறுத்தவர்; தன்னளவில் சாதியை மறந்தவர்! அக்ராகரத்தில் பிறந்தவர்; ஆனால், அக்ரகார வாழ்க்கையைத் துறந்தவர்! அந்தண வருணத்திலே பிறந்தவர்; ஆனால், வருண வேற்றுமையைப் பகைத்தவர்!

அந்த மகாகவி, எட்ட்யபுரம் மன்னராட்சியில் பிறந்தவர். ஆனால், மன்னராட்சிகளை யொழித்து மக்களாட்சியைப் படைக்கப் பாடியவர். மக்களைப் பார்த்து 'நாம் எல்லோரும்-இந்நாட்டு மன்னர்' என்று பாடியவர்.

பாரதியார், தமிழ்ப் புலவர் பரம்பரையின் வழித் தோன்றலாகத்தான் வந்தார். ஆனால், புலவர்களின் கடின நடையை வெறுத்து, தமிழிலே புது நடை யொன்றைப் படைத்தார்; அது பண்டைத் தமிழ் நடையோ, பண்டிதர் தமிழ் நடையோ அல்ல!—அது, பழகுதமிழ் நடை! அதனால், பாமரர்களைப் பண்டிதர்களாக்கினார் பாரதி!

பண்டைப் புலவர்கள், தெய்வங்களை மானுடர்களாக்கிப் புராணங்கள் படைத்தனர். பாரதியோ, தேச

பக்த மானுடர்களையே தெய்வங்களாகப் பாவித்து, காந்தியை—திலகரை—சிதம்பரனாரை லஜபதியை—தாதா பாயைப் புகழ்ந்து புகழ்ந்து பாடினார். அதனால்—அவரால் 'தேசபக்தி' என்ற புது மதம் பிறந்தது. அந்தப் புது மதத்தின் முதற் கவிஞர் பாரதி!

எட்டயபுரம் தந்த ஏந்தல், 'தமிழ்ச் சாதி' மீது தனிக் கவிதை பாடினார். அவருக்குமுன் வேறு எந்தக் கவிஞனும் பாடாத புதுப் பாடல்! இனப்பாடல்!

பாரதி, நாடகக் கவிஞர். அதனால், குடுகுடுப்பைக் காரன் வேடம் புனைந்து கொண்டு, தமிழினத்தின் எதிரே நின்று வருங்காலம்பற்றி நல்ல குறி சொன்னார்! வேடம் புனைந்து வேடிக்கை செய்வதிலே அவருக்கிருந்த விருப் பத்தை என்னென்பது!

தமிழிலே 'சுயசரிதை' பாடிய முதற்கவி, நம் சுப்பிர மணிய பாரதிதான்! அது, அவர் படைத்த புதுமை இலக் கியம்!

பாரதிக்குமுன் வாழ்ந்த புலவர்களெல்லாம், இல்லாத— கற்பனையான சொர்க்கத்தை வருணித்து, அதிலே நமக்கு ஆசையூட்டினார்கள். நரகத்தை வருணித்து நமக்குப் பய மூட்டினார்கள். வைகுந்தத்தையும் கயிலாசத்தையும் வருணிக்கவும் அவர்கள் மறந்துவிட வில்லை. ஆனால், ஏனோ எதனாலோ, அவர்களெலாம் மக்கள் வாழும் உலகத்தை— இந்தியாவுக்கு வெளியேயுள்ள நாடுகளை, அங்கெல்லாம் வாழும் மக்கள் அடையும் இன்பதுன்பங்களை வருணித்துப் பாடி, நமக்கு உலக அறிவைப் புகட்டத் தவறிவிட்டார்கள். ஆம் ; பாரதி வாழ்ந்த காலத்து 'மகா வித்வான்' களும் இந்த 'விதி' க்கு விலக்கல்லர்.

பாரதிதான் இந்தியாவுக்கு வேளியேயுள்ள பிஜித் தீவை, ருஷ்ய நாட்டை, இத்தாலி தேசத்தை பிரிட்டனை.

பெல்ஜியத்தை அறிந்து வைத்து, அங்கெல்லாம் வாழும் மக்களின் இன்ப துன்பங்களில் நாமெல்லாம் பங்கு கொள்ளும் வகையில் பாட்டியற்றினர் ; அந்த வகையில், அவர் உலக மகாகவியானர்! தன் தாய்மொழியான தமிழையும் உலக மொழியாக்கினர் ! இது, தமிழ் மொழிக்கு அவர் தேடிவைத்த தனிச் சிறப்பு !

பாரதி வழியிலே ஒரு புதிய கவிஞர் பரம்பரை தோன்றிவிட்டது ! ஆம் ; பாரதிதாசன், கவிமணி, நாமக்கல் கவிஞர், ச. து. சு. யோகி ஆகியோர் பாரதியாரைத் தங்கள் முன்னேடியாக—மூதாதையாகக் கொண்டனர்.

பாரதி, பேராசைக்காரர் ! கவி எழுதத் தொடங்கிய பின், 15-ஆண்டுகளே வாழ்ந்தார். அதிலேயும் 12 ஆண்டுகள் புதுவையிலே தன்னைத் தானே 'சிறை' வைத்துக் கொண்டார். இந்த அவலச் சூழ்நிலையிலே, ஆயிரத்துக்கு மேற்பட்ட கவிதைகளைப் படைத்தார் !

பாரதி, அரசியல் விடுதலை கோரியதற்காகச் சிறைப்பட்டார். ஆனல், பண்டிதர்கள் வீடுகளிலே, சைவ மடங்களிலே சிறைபட்டுக் கிடந்த தமிழுக்கு விடுதலை தேடி, அதனை, பாமர மக்களின் சொத்தாக்கினர் ! ஆம் ; தான் சிறைப்பட்டு, தமிழுக்கு விடுதலை தேடினர் !

பாரதி, ஒரு தனி மனிதரல்லர், அவர் ஒரு மாபெரும் ஸ்தாபனத்துக்கு நிகரானவர் ! தனி ஒருவராக இருந்து அம்மகாகவி தமிழ் மொழிக்கு ஆற்றியுள்ள தொண்டு, ஒரு மாபெரும் ஸ்தாபனத்தாலும் செய்ய முடியாததாகும் !

பாரதியார் வாழ்ந்த காலத்திலே, அவரை யாரும் 'வாழ்க, வாழ்க' என வாழ்த்தவில்லை ; அவருக்குப் பூமாலை சூட்டிப் பொன்னடை போர்த்தவில்லை. ஆனல், அவரோ வாழ்த்த வேண்டியவர்களை யெல்லாம் வாழ்த்த வேண்டியவற்றை யெல்லாம் வாழ்த்தினர் !

வ. உ. சி. யின் வீரத்தை, உ. வே. சாமிநாதய்யரின் தமிழ்த் தொண்டை, லஜபதியின் தியாகத்தை, திலகரின் தீரத்தை வாயார வாழ்த்தினர்.

வரவேற்க வேண்டியவற்றையெல்லாம் அவர் வரவேற்றூர். ஆம்; இந்தியாவில் அப்போதுதான் தோன்றிக் கொண்டிருந்த காந்தியடிகளின் தலைமையையும் ருஷ்யாவில் தோன்றிக் கொண்டிருந்த பொதுவுடைமை அரசையும் வரவேற்று வாழ்த்தினர்.

பாரதி, தனக்காக அழுதறியாதவர். ஆனல், நல்லவர்களுக்காக அழ வேண்டிய அவசியமேற்பட்ட போதெல்லாம் அழத் தவருதவர்!

ஆம்; லாலா லஜபதி நாடு கடத்தப்பட்டு, அவர் அமெரிக்காவில் அழுதபோது, அந்த அழுகையை எதிரொலித்து பாரதியும் இங்கு அழுதார்! அந்த அழுகைப் பாட்டு, 'லஜபதியின் பிரலாபம்!'

ஓவியர்மணி ரவிவர்மாவும் இசைமணி சுப்பராம தீட்சதரும் மாண்ட காலங்களிலே, அவர்களுக்காக கண்ணீரால் கவிதை தீட்டினர்! அது சாமகவி மட்டுமல்ல; அமரகவி!

பெல்ஜியம் வீழ்ச்சியுற்றபோது, அதனை நினைந்து நினைந்து அழுதார். பிஜித் தீவில் அல்லலுறும் தமிழ்ப் பெண்களுக்காக அழுதார்!

பாரதி, பஞ்சாங்கச் சோதிடர்களிடம் நம்பிக்கையற்றவர்! ஆனல் தன் அறிவால்—அனுபவ ஞானத்தால்—காலத்தைக் கணிக்கும் திறத்தால், தமிழ் மொழியின்—தமிழினத்தின்—பாரதப் பெருநாட்டின் வருங்காலம்பற்றிச் சோதிடங் கூறினர்:

“இந்த நிமிஷம் தமிழ் ஜாதியின் அறிவு, கீர்த்தி வெளி யுலகத்திலே பரவாமல் இருப்பதை நான் அறிவேன். போன நிமிஷம் தமிழ் ஜாதியின் அறிவொளி சற்றே மங்கி யிருப்பதையும் நான் அறிவேன். ஆனால்......மிக விரைவில் தமிழின் ஒளி உலகம் முழுவதும் பரவாவிட்டால் என் பெயரை மாற்றி அமையுங்கள்.’’

பாரதியின் சோதிடம் பலித்தது; உலகத் தமிழ் மாநாடு மூன்று நடந்ததே இதற்குச் சான்று!

பாரதி, வயிற்றுச் சோற்றுக்கும் வழியின்றி வருந் தினார். ஆனால், அவர் தன் பசிக்கு அழாமல், நாட்டிலுள்ள ஏழை எளியவர்களின் பசி கண்டு அழுதார்; “சொல்லக் கொதிக்குதடா நெஞ்சம்; வெறும் சோற்றுக்கோ வந்த திந்தப் பஞ்சம்’ என்று கொதித்தார்! தனி யொருவனுக் குணவில்லை யெனில், செகத்தினை அழித்திடுவோம்’’ என்றும் ஆவேசங் கொண்டார்! அவரன்றோ கவிஞர்!

பாரதியார், இன்று நம்மிடையே இல்லை. ஆம்; பூதவுட லோடு! ஆனால், “பாரதீயம்’ என்ற தத்துவம் நம்மிடையே வாழ்கின்றது. நாமும் அதன் வழி வாழ்ந்தால், பாரதி காண விரும்பிய நவ பாரதம்—புதிய தமிழகம் பிறக்கும். அவர் விரும்பியது போல இளைய பாரதம் எழுச்சி கொண்டு புரட்சி செய்யுமானால், நல்லவை வளரும்; அல்லவை அழியும்!

பாரதியாரும் விநாயகரும்

இந்தியப் பெரு நாட்டிலுள்ள இந்துக்களெலாம் அண்மையிலே "விநாயகர்" எனப்படும் "பிள்ளையார்" பெரு விழாவை இல்லந்தோறும் கொண்டாடினர். தமிழர்களிலேயும் இந்துக்காணேர் இவ்விழாவைக் கொண்டாடத் தவற வில்லை. விநாயகர் வழிபாடு சங்க இலக்கியங்களில் சொல்ல படவில்லை. அங்கு, பிள்ளையார்" எனும் பெயர் முருகப் பெருமானுக்குத்தான் சொல்லப்படுகிறது. இந்தப் பெயர் பிற்காலத்தில் விநாயகப் பெருமானுக்கே உரியதாகி விட்டது. விநாயகர் வழிபாடு தமிழகத்தில் புகுந்தது, தமிழர் அல்லாதார் எனப்படும் பல்லவர் ஆதிக்கத்தின் போதுதான்.

பிள்ளையார், பின்னல் வந்த புதுத் தெய்வமாயினும், அவர் அகச் சமயத்தார் அனைவருக்கும் பொதுத் தெய்தம் ஆகிவிட்டார். சந்திதோறும் ஏழை எளியவர்களெலாம் சந்தித்து வழிபடுகின்ற 'முச்சந்திப் பிள்ளையார்" கோயில்கள் தமிழகத்திலே ஏராளமாக இருக்கின்றன. பிளாட்பாரம் பிள்ளையார்களுக்கும் கணக்கில்லை. சுருங்கச் சொன்னல் "மக்கள் தெய்வம்" என்னும் அளவுக்கு பிள்ளையாரப்பன் தமிழகத்திலே செல்வாக்குப் பெற்றிருக்கிறார்.

இதனல், மக்கள் கவியான சி. சுப்பிரமணிய பாரதியார், 'விநாயகர் நான்மணிமாலை' என்னும் பெயரில்—

காப்புச்செய்யுள் உள்பட 41 செய்யுட்களால்—தனியாகப் பனுவல் ஒன்றையே படைத்து விட்டார். அதிலே, "ஏழையர் தெய்வம்" என்னும் பெயர் தந்தே பிள்ளை யாரைப் போற்றுகின்றார் பாரதியார். ஆம்; 16 ஆவது செய்யுளிலே 'ஏழையர்க் கெல்லாம் இரங்கும் பிள்ளை" என்று பிள்ளையார் பெருமானை வருணித்திருக்கிறார்.

பாரதியார் சக்தி வழிபாட்டைக் கடைப்பிடித்த "சாக்தர்'' எனப்படுகிறார். அப்படியிருந்தும் பராசக்தி மீது தனிப் பாடல்கள் சில பாடியதன்றி, தனி நூல் படைக்க வில்லை.

கண்ணன் பாட்டு என்னும் பெயரிலே திருமால் பற்றித் தனி நூல் என்று சொல்லத்தக்க வகையில் இலக்கியம் ஒன்றைப் படைத்திருக்கிறார். அதுகூட, தமிழ் ஐந்திணை இலக்கணப்படி அகத்துறை பற்றிப் பாடவேண்டுமென்ற ஆர்வத்தால் படைக்கப்பட்ட தென்றே சொல்ல வேண்டும். கண்ணன் பாட்டுக்கு வ. வெ. சு. ஐயர் தந்துள்ள மதிப் புரையிலே, அப்பட்டமான பக்தி நூலாக அதனை ஏற்பதற்கு அவர் சங்கடப்படுகிறார். சிவபெருமான், முருகன், லட்சுமி, சரஸ்வதி ஆகிய இந்து சமயத் தெயவங் கள் பலவற்றின் மீதும் பாரதியார் பக்திப் பாடல்கள் புனைந்துள்ளார். அவையனைத்தும் தனிப் பாடல்களே!

பாரதியார் படைத்த பக்தி நூல் ''விநாயகர் நான்மணி மாலை'' ஒன்றுதான். ஒவ்வொரு செய்யுளிலேயும் பக்திப் பரவசத்துடன் பிள்ளையாரை வழிபடுகிறார் பாரதியார்.

கலித்துறை, விருத்தம், அகவல் வெண்பா ஆகிய நால் வேறு பாவினங்களால் பிள்ளையாரைப் பாடுகிறாராதலால், நால் வேறு பாவினங்களைக்கொண்டு, பத்துத் தொகுதியாக நாற்பது பாடல்களைப் புனைந்துள்ளாராதலால் 'நான்மணி மாலை'' என்று பெயர் தந்துள்ளார். அதையும் அந்தாதி

இலக்கணப்படிப் பாடியுள்ளார். ஒரு செய்யுளின் இறுதியிலே வரும் சொல் அடுத்துள்ள செய்யுளின் முதலிலே வருவதனை 'அந்தாதி' என்னும் தமிழிலக்கணம். ஆம்; அந்தமும் ஆதியு மற்ற பரம்பொருளை அந்தாதி இலக்கணப் படிப் பாடியுள்ளார் நம் தேசிய மகாகவி.

புதுவையிலே மணக்குள விநாயகர் கோயில் ஒன்றிருக்கிறது. அந்தக் கோயிலுக்கு அடிக்கடி சென்று மணக்குள விநாயகரை பாரதியார் மனங் கனிந்து பாடி வழிபடுவது வழக்கமாம். அந்த மணக்குள விநாயகருக்குத்தான் தாம் புனைந்த நான்மணி மாலையை அணிவித்துள்ளார்.

கோடானு கோடி மக்கள் தங்கள் இதயங்களிலே வைத்துப் போற்றும் தேசியக் கவிஞரிடம் நான்மணி மாலை பெறப் புதுவை மணக்குள விநாயகர் என்ன தவம் செய்தாரோ! ஆம்; ஏழையர் தெய்வமாக இருப்பதால்தான் பாரதியார் பிற தெய்வங்களுக்குத் தராத பெருமையைப் பிள்ளையாருக்குத் தந்து அவர்மீது தனியாக பக்திப் பனுவல் படைத்தார் போலும்.

தமிழ் மக்களிடையில் மிகுந்த செல்வாக்குடன் விளங்குவது ஔவையார் பெயரால் உள்ள 'விநாயகரகவல்தான். வேறு சில புலவர்கள் விநாயகருக்குப் பக்தி நூல் படைத்துள்ளன ரென்றாலும், அவை மக்கள் மத்தியிலே அதிக செல்வாக்குப் பெறவில்லை. ஔவையார் பெயரில் உலவ விட்டதனாலோ என்னவோ, விநாயகர் அகவல் தமிழகத்தில் உள்ள இந்துக்களின் இல்லந்தோறும் ஏற்றம் பெற்று விட்டது. கணபதி விழாவிலே, அந்த விழாவைக் கொண்டாடும் வீடுதோறும் விநாயகர் அகவல் பாடிடக் கேட்கிறோம்.

ஔவையாரின் விநாயகர் அகவலுக்கு அடுத்தபடியாக, தமிழிலே சாதாரணமாக எழுதப் படிக்கத் தெரிந்தவர்களும்

படித்துப் பக்தி செலுத்தக் கூடிய வகையில் அமைந்திருக்கிறது பாரதியாரின் விநாயகர் நான்மணி மாலை.

ஔவையாருடன் போட்டி யிடுவதிலே பாரதியாருக்குத் தனி ஆர்வம் போலும்! புதிய ஆத்திசூடி படைத்து ஔவையார் படைத்த ஆத்திசூடிக்கு வழிநூல் தந்த பெருமையைத் தேடிக் கொண்டார் பாரதியார். விநாயகர் பக்தர்களிடையேயும் ஔவையாருக்குரிய பெருமையிலே பங்கு பெற விரும்பியதுபோல, விநாயகர் அகவலுக்குப் போட்டியாக 'விநாயகர் நான்மணி மாலை' யைப் படைத்திருக்கிறார்.

பாரதிக்குத் தமிழில் இலக்கணப் புலமை கிடையாது என்று தமிழ்ப்புலவர்களிலே சிலர் அவரைக் குறை சொன்ன காலமுண்டு. இந்தக் கூற்று முற்றிலும் பொய் என்பதைக் காட்ட எத்தனையோ சான்றுகள் உண்டு, பாரதியாரின் கவிதைத் தொகுப்பிலே! அந்தச் சான்றுகளில் ஒன்று, நால்வேறு பாவினங்களைக் கொண்டு அந்தாதி முறையில் பாரதியார் பாடியுள்ள 'விநாயகர் நான்மணி மாலை.

இந்த நூலை மவுனத்தைக் கடைப்பிடித்து இயற்றியதாக பாரதியார் கூறுகின்றார். ஆம்; ஓரிடத்தில் அமர்ந்து, —வாய் மூடி மவுனியாகி, புறக்கண்களை மூடி, அகக் கண்களைத் திறந்து, விநாயகர் மீது தம் மனத்துள்ளேயே பாடி, நால்வர் நால்மணிமாலையைப் படைத்தார் போலும்! இதனை,

"நீயே சரணம் நினதருளே
சரணஞ் சரணம்
நாயேன் பலபிழை செய்து
களைத்துனை நாடி வந்தேன்;

வாயே திறவாத மவுனத்து
இருந்துஉன் மலரடிக்குத்
தீயே நிகர்த்தொளி வீசும்
தமிழ்க் கவி செய்குவனே.''

என்று முதல் செய்யுளிலேயே பாரதியார் அறிவிக்கின்ருர். ஆம்; 'வாயே திறவாத மவுனத்தில் இருந்து தமிழ்க் கவி செய்வேன்'—என்று விரதங் கொண்டு, விநாயகர் நான் மணி மாலையில் உள்ள செய்யுட்கள் அனைத்தையும் முதலில் தன் இதயத்தே எழுதிக்கொண்டு, பின்னர் ஏட்டிலே எழுதிஞராம். பாரதியாரிடம் நாம் காணும் புதுத் திறமை இது; இப்படி, மவுனத்திலிருந்து அவர் பாடிய ஒளி வீசும் தமிழ்க் கவிகள் எத்தனை எத்தனையோ !

தனி நூலுக்குக் காப்புச் செய்யுள் இயற்றுவது மரபு. அதையும் விநாயகர் துதியாகத்தான் படைப்பது வழக்கம். பல தெய்வங்களுக்குத் தனித் தனியே காப்புச் செய்யுள் படைக்குங்கால், முதற் செய்யுள் விநாயகருக்குத்தான் படைப்பதுண்டு. பாரதியாரும் தாம் இயற்றிய விநாயகர் நான்மணி மாலைக்குக் காப்புச் செய்யுள் படைத்துள்ளார்.

(சக்திபெறும்) பாவாணர் சாற்று
பொருள் யாதெனினும்
சித்(திபெறச் செய்வாக்கு
வல்லமைக்கா)—அத்தனே !
(நின்)றனக்குக் காப்புரைப்பார்;
நின்மீது செய்யும் நூல்
இன்றிதற்கும் காப்பு நீயே.

இது, விநாயகர் மீது பாரதியார் இயற்றியுள்ள காப்புச் செய்யுள். நூல் இயற்றுவோர் விநாயகருக்குக் காப்புச்

செய்யுள் படைப்பது வழக்கமென்று பாரதியார் இங்கு கூறினாலும், விநாயகர் நான்மணி மாலையைத் தவிர தாம் இயற்றிய வேறு எந்த நூலிலேயும் அவர் காப்புச் செய்யுளை விநாயகருக்குரியதாகச் செய்யவில்லை. புதிய ஆத்தி சூடியிலே,

"ஆத்தி சூடி
இளம் பிறை யணிந்து
மோனத் திருக்கும்
முழு வெண் மேனியான்"

என்று எல்லாம் வல்ல பரம்பொருளான சிவபெருமான் பெயரால் தொடங்கி, நாம ரூபபேதங்களுக்கு அப்பாற்பட்டு விளங்கும் எல்லையற்ற இயற்கைச் சக்திக்குக் காப்புச் செய்யுள் படைத்திருக்கிறார்.

"பாஞ்சாலி சபதத்தி"லே, பிரம்மன்—கலைவாணி—பராசக்தி ஆகியோருக்குத் தனித்தனியே காப்புச் செய்யுள் பாடியுள்ளார். 'பாரதி அறுபத்தாறு" என்னும் நூலிலே பராசக்திக்கு மட்டுமே காப்புச் செய்யுள் படைத்துள்ளார். ஆம்; புரட்சி உள்ளம் படைத்த புதுமைக் கவியான பாரதியார் விநாயகருக்குக் காப்புச் செய்யுள் பாடுவதனைத் தவிர்க்க முடியாத மதக் கொள்கையாக கொண்டிருக்கவில்லை.

பாரதியார், புராணக் கற்பனைகளை எதிர்த்துப் போராடவில்லை என்றாலும், கலையுரைத்த கற்பனையே நிலை எனக் கொண்டாடும் கண்மூடி வழக்கத்தைக் கடைப்பிடித்து புராணக் கற்பனைகளை மெய்யென்று நம்பி அவற்றுக்கு அடிமைபட்டவரும் மல்லர். இதனை விநாயகர் நான்மணி மாலையிலே தெளிவாகக் காண்கிறோம். புராணவாதிகளைப் போல பாரதியாரும் விநாயகப் பெருமானை,

சந்திர மௌலித் தலைவன் மைந்தன்,

வல்லபைக் கோன்,

சக்தி தலைப் பிள்ளை,

கரிமுகன்,

யானை முகன்,

அங்குச பாசமும் கொம்பும் தரித்தோன்,

என்றெல்லாம் பிள்ளையாரின் பிறப்பையும் தோற்றத்தையும் பற்றி மதவாதிகள் சொன்ன கற்பனைகளை எல்லாம் தாமும் கூறுகின்றார்.

தேசியவாதியான பாரதியார், ஏனைய மதவாதிகள் போல விநாயகப் பெருமானை, 'ஓம்' என்னும் பிரணவப் பொருளாக—தனித் தெய்வமாகப் பார்த்தார். இதனை, 'விநாயகர் நான்மணி மாலை'யுள்,

"ஓமெனும் நிலையில்
ஒளியாத் திகழ்வான்"
"ஓமெனும் பொருளை
உளத்திலே நிறுத்தி"

என்று பாடியுள்ள வரிகளால் அறிகின்றோம். இத்துடன் நில்லாமல், "யாதுமாய் விளங்கும் இயற்கைத் தெய்வமே" என்றும் வழிபடுகின்றார்.

சர்வ சமய சமரசவாதியான பாரதியார் உலகத்து மதங்களெலாம் கற்பித்துள்ள அனைத்துக் கடவுளர்களுமாக விநாயக தேவனைப் பார்க்கிறார். இதற்கான சான்றுகளை அவரியற்றிய 'விநாயகர் நான்மணி மாலை'யுள் பார்ப்போம்.

"ஐயா! நான்முகப் பிரமா!
யானை முகனே! வாணித்னைக்
கையாலணைத்துக் காப்பவனே!
கமலாசனத்துக் கற்பகமே!"

"வேத முனிவர்
விரிவாப் புகழ்ந்த
பிருகஸ் பதியும்
பிரமனும் யாவும்
தானே யாகிய
தனிமுதற் கடவுள்"

"விநாயக தேவனாய்,
வேலுடைக் குமரனாய்,
நாராயணனாய்,
நதிச்சடை முடியனாய்,
தேவருந் தானாய்,
திருமகள், பாரதி,
உமையெனுந் தேவியர்
உகந்தவான் பொருளாய்,
உலகெலாங் காக்கும்
ஒருவன்...."

"இறைவி இறையவன்
இரண்டும் ஒன்றாகித்
தாயாய்த் தந்தையாய்ச்
சக்தியும் சிவனுமாய்
உள்ளொளி யாகி
உலகெலாந் திகழும்

"பரம்பொரு ளேயோ!
பரம்பொரு ளேயோ!
ஆதி மூலமே!
அனைத்தையும் காக்கும்
தேவத் தேவா!
சிவனே! கண்ணு!
வேலா! சாத்தா!
விநாயகா! மாடா!
இருளா! சூரியா!
இந்துவே! சக்தியே!"

"வாணீ! காளீ!
மாமக ளோயோ!
ஆணாய்ப் பெண்ணாய்
அலியாய் உள்ளது
யாதுமாய் விளங்கும்
இயற்கைத் தெய்வமே!
வேதச் சுடரே!
மெய்யாங் கடவுளே!"

இப்படி, இந்து மதம் பரம்பொருளுக்கு எத்தனை வடிவம் கற்பித்துள்ளதோ—எத்தனை பெயர் தந்துள்ளதோ அத்தனையையும் பயன்படுத்தி விநாயகரை வழிபடுகின்றார். இனி, புறச் சமயங்கள் கற்பித்துள்ள பெயர்களாலும் விநாயகரை வழிபட விரும்பி,

"பிறநாட் டிருப்போர்
பெயர் பல கூறி,
அல்லா யெஹோவா!
எனத்தொழு தன்புறும்
உலகெலாங் காக்கும்
ஒருவனே........"

என்றும் பாடிப் பரவுகிருர் பாரதியார்.

பாரதியார், அரசியல்வாதி மட்டுமல்ல; ஆன்மிக வாதியுமாவார். பிறரை ஆள விரும்புவோன் அரசியல் வாதி, தன்னைத்தான் ஆள விரும்புவோன் ஆன்மிகவாதி. பாரதியும் தன்னை ஆளுந் தகுதியைத் தருமாறு விநாயக ரிடம் வேண்டினுர்.

"தன்னைத்தான் ஆளுந்
தன்மை நான் பெற்றிடில்,
எல்லாப் பயன்களும்
தாமே எய்தும்"

என்பது பாரதி வாக்கு. இதற்குத் தேவைப்படும் "அசையா நெஞ்சம் அருள்வாய்" என்றும் விநாயகரை வேண்டினுர்.

"உள்ளமெனும் நாட்டை
ஒருபிழை யின்றி
ஆள்வதும் பேரொளி
ஞாயிறே யனைய
சுடர்தரு மதியொடு
துயரின்றி வாழ்தலும்
நோக்க மாக்கொண்டு
நின்பதம் நோக்கினேன்"

என்கிருர். ஆம்; அரசியல்வாதியாக மட்டும் இருப்பவன் ஊராள வரம் வேண்டுவான். அரசியல்வாதியும் ஆன்மிக வாதியுமான பாரதியார், "உளமாள வரம் வேண்டும்" என் கிருர். அதையும் சுடர் தரும் மதியொடு, பிழையின்றி ஆள அருளல் வேண்டும்" என்கின்ருர். ஆம்; ஊராள்வோர்

போல, உளமாள்வோனும் பிழை செய்துவிடக் கூடா தல்லவா! இன்றும்,

"வேலைத் தவறு நிகழாது
நல்ல வினைகள் செய்துன்
கோலை மனமெனும் நாட்டின்
நிறுத்தல் குறியெனக்கே"

என்ற வரிகளிலும், தவறேதும் செய்யாமல் மனமெனும் நாட்டை மதி கொண்டு ஆளுவதே தனது குறிக்கோள் என்கின்றார்.

பாரதியார், விநாயகரை வழிபடுவதால் வரும் பயன் களைக் கூறுகின்றார்.

"உட்செவி திறக்கும்
அகக்கண் ஒளிதரும்;
அக்கினி தோன்றும்;
ஆண்மை வலியுறும்;
திக்கெலாம் வென்று
ஜெயக் கொடி நாட்டலாம்
விடத்தையும் நோவையும்
வெம்பகை யதனையும்
துச்சமென் றெண்ணித்
துயரிலா திங்கு
நிச்சலும் வாழ்ந்து
நிலைபெற் றோங்கலாம்;
அச்சந் தீரும்
அமுதம் விளையும்;

வித்தை வளரும்;
    வேள்வி ஓங்கும்;
அமரத் தன்மை
    எய்தவும்
இங்கு நாம் பெறலாம்''

நம் தேசிய மகாகவி, ஒவ்வொரு மனிதனுக்கும் நான்கு கடமைகள் உண்டென்கிறார். அவற்றைக் கடைப்பிடித்து வாழ்வோனுக்கு நான்கு பயன்களும் உண்டென்று உறுதி கூறுகின்றார்.

பாரதி கூறும் கடமைகளையும் பயன்களையும் உணர்த்தும் செய்யுள் வருமாறு:

கடமை யாவன
    தன்னைக் கட்டுதல்,
பிறர் துயர்தீர்த்தல்,
    பிறர்நலம் வேண்டுதல்,
உலகெலாம் காக்கும்
    ஒருவனைப் போற்றுதல்,
இந்நான் கேயிப்
    பூமியில் எவர்க்கும்
கடமை யெனப்படும்;
    பயனிதில் நான்காம்;
அறம், பொருள், இன்பம்,
    வீடுஎனும் முறையே.

பாரதி, தனக்கும் தனது தாய் நாட்டுக்கும் வரங்கள் வேண்டுகின்றான். ஆம்; தனி மனிதன், தனக்கு மட்டுமே வரங்கள் வேண்டுவான்; தேசத் தலைவனான—தேசியக் கவி

யான பாரதி தனக்குமட்டுமன்றி, தனது நாட்டுக்கும் வரம் வேண்டுகின்ருர். அவர் தனக்கு வேண்டும் வரங்களாவன:

"எனக்கு வேண்டும் வரங்களை
இசைப்பேன் கேளாய் கணபதி!
மனத்திற் சலன மில்லாமல்,
மதியில் இருளே தோன்ருமல்,
நினைக்கும் பொழுது நின்மவுன
நிலைவந்திட நீ செயல்வேண்டும்,
கனக்கும் செல்வம் நூறு வயது,
இவையும் தர நீ கடவாயே!"

"நோவு வேண்டேன்;
நூருண்டு வேண்டினேன்!
அச்சம் வேண்டேன்,
அமைதி வேண்டினேன்;
வேண்டா தனைத்தையும் நீக்கி
வேண்டிய தனைத்தும்
அருள்வதுன் கடனே."

"உனக்கே என் ஆவியும்
உள்ளமும் தந்தேன்;
மனக்கேதம் யாவினையும்
மாற்றி—(எனக்கே)
நீண்டபுகழ் வாழ்நாள்
நிறை செல்வம் பேரழகு
வேண்டு மட்டும் ஈவாய்
விரைந்து"

இனி, நாட்டின் நலன் கருதி பாரதியார் வேண்டும் வரங்களைப் பார்ப்போம்:

''பேசாப் பொருளைப்
பேச நான் துணிந்தேன்;
கேட்கா வரத்தைக்
கேட்க நான் துணிந்தேன்;
''மண் மீதுள்ள
மக்கள், பறவைகள்,
விலங்குகள், பூச்சிகள்,
புற்பூண்டு, மரங்கள்;
யாவுமென் வினையால்
இடும்பை தீர்ந்தே,
இன்பமுற் றன்புடன்
இணங்கி வாழ்ந்திடவே
செய்தல் வேண்டும்
தேவ தேவா!
ஞான காசத்து
நடுவே நின்றுநான்
'பூமண்ட லத்தில்
அன்பும் பொறையும்
விளங்குக; துன்பமும்,
மிடிமையும், நோவும்,
சாவும் நீங்கிச்
சார்ந்த பல்லுயிரெலாம்
இன்புற்று வாழ்க!'
என்பேன்! இதனை நீ
திருச் செவி கொண்டு

திருவுளம் இரங்கி,
'அங்ஙனே ஆகுக'
என்பாய் ஐயனே!
இந்நாள் இப்பொழுது
எனக்கிவ் வரத்திணை
அருள்வாய்; ....''

பாரதியார், தமிழ்த் தொண்டு புரியவும் பிரணவப் பொருளாம் பிள்ளையாரிடம் வரம் வேண்டுவார். இதனை,

''பண்டைச் சிறுமைகள் போக்கி,
என்நாவிற் பழுத்த சுவைத்
தெண்டதமிழ்ப் பாடல் ஒருகோடி
மேவிடச் செய்குவையே.''

என்ற வரிகளில் பார்க்கிறோம். ஆம்; தமிழ் மொழிக்குப் பண்டைப் பெருமைகள் பல இருத்தல் போல, பண்டைச் சிறுமைகளும் பல உளவாம். அவற்றைப் போக்கி, புதிய பெருமைகளைச் சேர்க்கும் பாடல்கள் புனைய வரம் வேண்டுகிறார். அவையும் நூறு, ஆயிரம், லட்சம் பாடல்கள் அல்லவாம்; ஒரு கோடி பாக்கள் புனைய வரம் வேண்டுமாம். என்ன பேராசை!

பாரதியார் தம் கவிதைகளிலும் கட்டுரைகளிலும் கலி யுகம் அழிந்து கிருதயுகம் தோன்ற வேண்டும் என்கிறார். அந்த யுகப் புரட்சியையும் தானே செய்து முடிக்கப் போவதாகவும் கூறுவார். ஆம்; அவ்வளவு தன்னம்பிக்கை!

''வீழ்க கலியின்
வலி யெல்லாம்
கிருத யுகந்தான் மேவுகவே''

"கிருத யுகத்தினைக்
கேடின்றி நிறுத்த
விரதம் நான்
கொண்டனன்; வெற்றி
தருஞ்சுடர் விநாயகன்

"மொய்க்குங் கவலைப் பகைபோக்கி,
முன்னோன் அருளைத் துணையாக்கி,
எய்க்கும் நெஞ்சை வலியுறுத்தி,
உடலை இரும்புக் கிணையாக்கிப்
பொய்க்குங் கலியை நான்கொன்று
பூலோகத்தார் கண் முன்னே,
மெய்க்குங் கிருத யுகத்தினையே
கொணர்வேன், தெய்வ விதியிஃதே!"

இந்த வரிகளிலே, கலியுகத்தைக் கொல்வேன்; கிருத யுகத்தைப் படைப்பேன்; இதற்கான விரதம் யான் கொண்டனன்; தெய்வ விதி இஃதே—என்று கூறுகின்றார். ஆம்; பிற மதவாதிகளைப்போல, பாரதியார் விநாயக பக்தர். ஆனால், அவர் பார்வையிலுள்ள விநாயகர், தெய்வம் பல பேசும் சழக்கர் காணும் கணபதியல்ல. இவர் சமரச விநாயகர்! சர்வ மத விநாயகர்! தேசிய விநாயகர்! ஆன்ம விடுதலைக்கேயன்றி, அரசியல் விடுதலைக்கும் வரங் கொடுக்கும் விநாயகர்! அதனால்,

"கணபதி ராயன்—அவனிரு
காலைப் பிடித்திடுவோம்;
குண முயர்ந்திடவே—விடுதலை
கூடி மகிழ்ந்திடவே"

என்ற பாடலிலே, "நாட்டின் விடுதலையைக் கோரி விநாயகரை வழிபடுவோம் வாரீர்?" என்று தேச பக்தியுடைய இந்தியர்களையெலாம் அன்போடு அழைத்தார் பாரதியார்.

'அர்ச்சனை' என்பதன் பொருள், இறைவனைப் புகழ்ந்து, போற்றி வழிபட்டு வரங் கேட்பதாம். பாரதியார், அர்ச்சனை முறையில் 'போற்றி அகவல்' பாடி வைத்துப் போயுள்ளார். தமிழ் அர்ச்சனை முறை தமிழகத்துக் கோயில்களிலே தொடங்கப்பட்டு வரும் அர்ச்சனைப் பாடலையும் தமிழ் மக்களுக்கு அறிமுகப்படுத்துகிறோம்.

தமிழிலோ, சமஸ்கிருதத்திலோ பயன்படுத்தப்பட்டு வரும் அர்ச்சனை மந்திரம் மிகவும் நீளமாக இருக்கிறது. அதனால், நேரம் அதிகமாகின்றது. இதனால், கோயிலுக்கு வரும் பக்தர் ஒவ்வொருவரும் அர்ச்சனையை விரும்புவது சாத்தியமில்லாமற் போகிறது. பாரதியார் பாடியுள்ள போற்றி அகவல் 28 வரிகளைக் கொண்டு, சுருங்கிய அளவில் அமைந்துள்ளது. அது வருமாறு:

போற்றி உலகொரு மூன்றையும் புணர்ப்பாய்!
மாற்றுவாய், துடைப்பாய், வளர்ப்பாய், காப்பாய்!
கனியிலே சுவையும், காற்றிலே இயக்கமும்
கலந்தாற்போல நீ அனைத்திலும் கலந்தாய்.
உலகெலாந் தானாய் ஒளிர்வாய், போற்றி!
அன்னை போற்றி! அமுதே போற்றி!
புதியதிற் புதுமையாய், முதியதில் முதுமையாய்;
உயிரிலே உயிராய், இறப்பிலும் உயிராய்
உண்டெனும் பொருளில் உண்மையாய் என்னுளே
நானெனும் பொருளாய், நானையே பெருக்கித்
தானென மாற்றுஞ் சாகாச் சுடராய்,
கவலை நோய் தீர்க்கும் மருந்தின் சுடராய்,

பிணியிருள் கெடுக்கும் பேரொளி ஞாயிறாய் !
யானெனது இன்றி யிருக்குநல் யோகியர்
ஞானமா மகுட நடுத்திகழ் மணியாய்
செய்கையாய், ஊக்கமாய், சித்தமாய், அறிவாய்
நின்றிடுந் தாயே, நித்தமும் போற்றி !
இன்பம் கேட்டேன், ஈவாய் போற்றி !
துன்பம் வேண்டேன், துடைப்பாய் போற்றி !
அமுதங் கேட்டேன், அளிப்பாய் போற்றி !
சக்தி போற்றி ! தாயே போற்றி !
முக்தி போற்றி ! மோனமே போற்றி !
சாவினை வேண்டேன், தவிர்ப்பாய் போற்றி !

இந்தப் பாடலில், 17ஆவது வரியில் வரும் 'தாயே' என்பதனைத் 'தேவே' என்றும்; 21ஆவது வரியில் வரும் தாயே என்பதனை 'சாமி' என்றும் மாற்றிக் கொண்டால், சைவக் கோயில்களில் மட்டுமன்றி, வைணவக் கோயில்களிலும் பயன்படுத்தலாம்.

பாரதியார் போற்றி அகவல் பாடியதால், அர்ச்சனை தமிழில் நடப்பதையே அவரும் விரும்பினர் என்பது புலனாகும்.

நவராத்திரி பற்றி பாரதியின் விளக்கம்

மகாகவி பாரதியார் விஞ்ஞான சகாப்தத்தில் வாழ்ந்த மெஞ்ஞானியாவார். புராண கற்பனைகளை அவர் வெறுக்க வில்லை என்றாலும், அவற்றை எல்லாம் உண்மை என்று நம்பியவருமல்லர்.

சமயவாதிகள் கற்பித்த — பௌராணிக முறையில் கொண்டாடப் பட்டு வருகின்ற நவராத்திரி விழாவை பாரதியார் மதித்தார். அவர் சக்தியை தெய்வமாகக் கொண்ட சாக்தராதலால், நவராத்திரி விழாவை சக்தி வழி பாடாகக் கருதினார். 'நவராத்திரி' என்னும் தலைப்பில் தாம் எழுதிய கட்டுரை ஒன்றிலே,

"ஒன்பதிரவு பராசக்தியைப் பூஜைசெய்கிறோம். லக்ஷ்மி என்றும், ஸரஸ்வதி என்றும், பார்வதி என்றும் மூன்று மூர்த்தியாக நிற்பது பராசக்தி, இவ்வுலகத்தை ஆக்கல் — அழித்தல் — காத்தல் என மூன்று தொழில் நடத்துவது.

"ஒவ்வொருவனுக்கும் மூன்று வித சக்தி வேண்டும். (1) அறிவு (2) செல்வம் (3) தைர்யம். இந்த மூன்றும் நமக்கு இகலோகத்திலே கிடைக்கும்படியாகவும் இதனால் பரலோக இன்பம் சாத்தியமாகும்படியும் நாம் தெய்வத்தை வழிபடுகிறோம்.

என்று விளக்கம் தருகிறார் பாரதியார். பாரதியாரின் நவ ராத்திரிக் கட்டுரை விரிவானதாகும். அதன் இரண்டு பகுதி களை மட்டுமே மேலே தந்திருக்கிறோம்.

பாரதியார் பௌராணிகர் கற்பித்த வழி நவராத்திரி விழாவிற்கு விளக்கம் தந்தாரென்றாலும் தாம் வாழ்ந்த விஞ்ஞான யுகத்தின் அறிவையும் அவர் புறக்கணித்து விட வில்லை. பௌராணிகத்தையும் பகுத்தறிவையும் பொருத்த முயற்சிக்கிறார். தமிழ் நாட்டு இந்துக்கள் அலைமகள் (லட்சுமி), மலைமகள் (பார்வதி), கலைமகள் (சரஸ்வதி) ஆகிய முப்பெருந் தெய்வங்களின் தனிப்பெரும் விழாவாக நவராத்திரியைக் கொண்டாடினாலும் கலைமகள் விழாவாக வே அதனைக் கருதுகின்றனர்.

தமிழக இந்துக்களிலே ஒரு சாரார் மட்டுமே நவராத் திரி என்பதற்கேற்ப ஒன்பது இரவுகளிலேயும் விழாக் கொண்டாடுகின்றனர். ஆனால் ஏழை எளிய மக்கள் நவ ராத்திரி விழாவின் இறுதியிலே வரும் கலைமகள் விழாவை மட்டுமே சிறப்பாகக் கொண்டாடுகின்றனர். ஆம்; அறிவைத் தெய்வமாகக் கொண்டாடும் மரபைத் தமிழ் மக்கள் போற்றி வருகின்றனர். உழைப்பாளிகள் ஆயுத பூஜை என்னும் பெயரிலே கலைமகள் விழாவைக் கொண் டாடுகின்றனர்.

பாரதியார் நவராத்திரி விழாவின்போது—அதாவது, கலைமகள் விழாவின்போது, தாய்மொழிப் பற்றையும் வளர்ப்பதற்கு வழிவகுத்துக் காட்டுகிறார்.

"தமிழ் நாட்டில் ஒரு புதிய உயிர்' தோன்றியிருப்ப தால்...கம்பன், இளங்கோ, திருவள்ளுவர் முதலிய மகாகவி களுக்கு ஞாபகச் சிலைகளும், வருஷோற்சவங்களும் ஏற் பாடு செய்யவேண்டும்........ஜன்ம தினங்கள் நிச்சயப்பட வழி இல்லை. ஆதலால் சரஸ்வதி பூஜைக்கு முன்பு, அல்

லது குறிப்பிட்டதொரு தினத்தில் இந்த மகான்களின் ஞாபகத்தைக் கொண்டாடுதல் பொருத்தமுடைய கொள்கையாகும். நவராத்திரி உற்சவங்கள் நமக்கு வழக்கமாக உள்ளதால் அந்த சமயத்தை யொட்டி நமது மகாகவிகளுக்கு திருவிழாக் கொண்டாடுதல் சுலபமாக இருக்கும்.''

பாரதியார் இந்து சமயத்தாரின் தனி விழாவாகிய நவராத்திரியிலே சர்வ சமயத்தாரும் போற்றத்தக்க மகா கவிகளுக்கும் விழாக் கொண்டாடுவதால் சமய ஒற்றுமையும் தாய் மொழிப்பற்றும் ஏற்பட முடியுமென்று நம்பினர். நவராத்திரி கொண்டாடும் பௌராணிகப் புலவர்களுககுத் தோன்ருத இந்தக் கருத்து தேசிய மகா கவியான பாரதியாருக்குத் தோன்றியிருப்பது விஞ்ஞான சகாப்தத்தின் விளைவாகும்.

கலைமகளைக் கொண்டாடுவதற்கான காரணங்களையும் அறிவியலுக்கு ஏற்றவகையில் கற்பித்துக் கூறினர் பாரதியார். ''நவராத்திரிப் பாட்டு என்னும் தலைப்பிலே தான் பாடியுள்ள பாடலில், பராசக்திதான் வாணியாகவும் ஸ்ரீதேவியாகவும், பார்வதியாகவும் கற்பிக்கப்பட்டு, நவராத்திரி விழாவில் நாயகியர்களாக்கப்பட்டுள்ளனர்'' என்பதனைப் புலப்படுத்துகின்ருர்.

பராசக்தி, இலட்சுமி, சரஸ்வதி ஆகிய மூவேறு தெய்வங்கள் மீது பல்வேறு பாக்களைத் தனித் தனியாக பாடி வைத்துள்ளார். ஆனல் கலைமகளைப் பற்றிய பாடல்களிலே இந்து சமய வேலியைக் கடந்து, இந்திய சமுதாயம் முழுவதற்குமான கருத்துக்களை வெளிப்படுத்துகின்ருர். கலைமகளை அறிவாளிகளின் தெய்வமாக மட்டுமின்றி, உழைப்பாளிகளின் தெய்வமாகவும் வருணிக்கின்ருர்.

வஞ்ச மற்ற தொழில் புரிந் துண்டு
வாழும் மாந்தர் குலதெய்வ மாவாள்;

வெஞ்சமர்க்குயி ராகிய கொல்லர்
விந்தை யோர்ந்திடு சிற்பியர், தச்சர்
மிஞ்ச நற்பொருள் வாணிகம் செய்வோர்
வீர மன்னர் பின் வேதியர் யாரும்
தஞ்சமென்று வணங்கிடுந் தெய்வம்
தரணி மீது அறிவு ஆகிய தெய்வம்
கை வருந்தி உழைப்பவர் தெய்வம்
கவிஞர் தெய்வம் கடவுளர் தெய்வம்

இந்த வரிகளிலே கலைமகளின் கருணைக்குப் பாத்திரமாகக் கூடிய தொழிலறிஞர்களைப் பட்டியல் தொகுத்துத் தருகிறார் பாரதியார். 'கைவருந்தி உழைப்பவர் தெய்வம்' என்னுமிடத்திலே எழுத்து வாசனையற்ற ஏழைத் தொழிலாளர்கட்கும் கலைமகள் கருணை காட்டுவாள் என்று கூறுகின்றார். மற்றும் சிற்பியர், கொல்லர், தச்சர், வணிகர் ஆகிய பல்வேறு துறைகளில் தொழில் புரிபவருக்கும் கலைமகளே தெய்வம் என்று கூறுகின்றார்.

இனி, கலைமகளின் வழிபாடு பற்றியும் பாரதியார் விளக்கம் தருகிறார். தற்போது பௌராணிக முறையில் நடைபெறும் கலைமகள் வழிபாட்டை ஏற்க மறுக்கிறார்; எதிர்த்தும் கூறுகிறார்.

மந்திரத்தை முணுமுணுத்து ஏட்டை
வரிசையாக அடுக்கி அதன்மேல்
சந்தனத்தை மலரை யிடுவோர்
சாத்திரம் இவள் பூசனை யன்றாம்

இந்த வரிகளிலே மதச் சடங்கு போலாகிவிட்ட கலைமகள் வழிபாட்டை அடியோடு விலக்கி வைக்க வேண்டுமென்கின்றார். மாறாக, இந்து மதத்தவருக்கேயன்றி, அனைத்து

மதங்களைச் சார்ந்த மக்களுக்கும் நன்மை தருமாறு கோரி, கலைமகளை வழிபடும் முறையையும் கூறுகின்றார்.

வீடுதோறும் கலையின் விளக்கம்
வீதிதோறும் இரண்டொரு பள்ளி
நாடு முற்றிலும் உள்ளன ஊர்கள்
நகர்கள் எங்கும் பலபல பள்ளி;
....
கேடு தீர்க்கும் அமுதமென் அன்னை
கேண்மை கொள்ள வழியிவை கண்டீர்!

ஆம்; வீடுதோறும் பொம்மைக் கொலு வைத்து நவ ராத்திரி விழாவைக் கொண்டாடுவதனை அவர் வெறுக்க வில்லை. அதனால், "வீடு தோறும் கலையின் விளக்கம்" வேண்டுமென்றார். ஆனால், அத்துடன் நின்றுவிடாமல், நாடு முற்றிலும் உள்ள ஊர்களெங்கணும், நகர்களெங்க ணும் பள்ளிகளைத் தோற்றுவித்து கலைமகள் விழாவைக் கொண்டாட வேண்டுமென்கிறார். வீதிதோறும் இரண் டொரு பள்ளியேனும் படைக்க வேண்டுமென்கிறார். இது சாத்தியமில்லை என்றால்,

"தேடு கல்வியில்லாததோர் ஊரைத்
தீயினுக் கிரை யாக மடுத்தல்"

நல்லதென்கிறார். "கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண் டாம்" என்றார் ஔவையார். பாரதியாரோ, கல்விக்கூட மில்லாத ஊரே நாட்டில் இருக்கக்கூடாதென்கிறார். இருந் தால் அதனைத் தீயிட்டுக் கொளுத்தி விடுவது பாவமில்லை என்கிறார்.

உலக நாடுகளிலேயே இந்தப் பாரதப் பெருநாட்டில் தான் கல்வி தரும் சக்தியைக் 'கலைமகள்' என்னும் பெய

ரில் தெய்வமாகக் கொண்டாடி வருகின்றனர். ஆனால் இந்த நாட்டிலேதான் கல்வியின்மை கோரத்தாண்டவமாடுகின்றது. கல்வித் தெய்வத்தைப் பெண் வடிவில் கற்பித்த இந்த நாட்டில்தான் "அடுப்பூதும் மங்கைக்குப் படிப் பெதற்கு?" என்று கேட்கும் அறியாமை ஆயிரமாண்டு களுக்கு மேலாக நிலைத்து வந்திருக்கிறது.

கல்வியைத் தெய்வமாகக் கற்பித்துக் கொண்டாடாத நாடுகளைப் பட்டியல் தொகுத்துத் தந்து, அங்கெல்லாம் கல்வி ஒளி மிகுந்து வருவதைக் காட்டி, நம்முடைய மூடத் தனத்தைச் சாடுகிறார் பாரதியார்.

ஊணர் தேசம், யவனர்தந் தேசம்,
உதய ஞாயிற் றொளிபெறு நாடு,
சேணகன்ற தோர் சிற்றடிச் சீனம்,
செல்வப் பார சிகப் பழந்தேசம்
தோணலத்த துருக்கம், மிசிரம்,
சூழ் கடற்கப் புறத்தினி லின்னும்
காணும் பற்பல நாட்டிடை எல்லாம்
கல்வித் தேவின் ஒளிமிகுந் தோங்க
ஞானம் என்பதோர் சொல்லின் பொருளாம்
நல்ல பாரத நாட்டிடை வந்தீர்!
ஊனமின்று பெரிதிழைக் கின்றீர்!
ஓங்கு கல்வி உழைப்பை மறந்தீர்
மானமற்று விலங்குக ளொப்ப
மண்ணில் வாழ்வதை வாழ்வென லாமோ?
போனதற்கு வருந்துதல் வேண்டா
புன்மை தீர்ப்ப முயலுவம் வாரீர்!

பாரதியாரின் விளக்கம் மதத்துறையில் மூடநம்பிக் கையை வளர்த்து வருபவர்களுக்கு ஒளியூட்டுவதாகும்.

கல்வியைப் பெண் தெய்வமாகப் போற்றும் இந்த நாட்டிலா, பெண்கள் கல்வி கற்பதை வெறுப்பது? கையுழைத்துப் பிழைக்கும் தொழிலையும் கலைமகளாகக் கருதி ஆயுத பூஜைக் கொண்டாடும் இந்து மதத்திலா படித்த வர்க்கம் பாட்டாளி வர்க்கத்தை அவமதிப்பது?

சீனம், பாரசிகம், துருக்கி, ஜப்பான் ஆகிய நாடுகளிலே கல்வி கற்றோர் தொகை ஆண்டாண்டு தோறும் மிகுதியாகிக் கொண்டே வர, கல்வியைக் கலைமகளாகக் கற்பித்து, சரஸ்வதி பூசை நடத்தும் இந்திய நாட்டிலா, எழுதப் படிக்கத் தெரிந்தோரின் எண்ணிக்கை அருகியிருப்பது?— என்றெல்லாம் கேட்கிறார் பாரதியார்.

செந்தமிழ் மணி நாட்டிடை உள்ளீர்!
சேர்ந்தித் தேவைய வணங்குவம் வாரீர்!
வந்தனம் இவட்கே செய்வ தென்றால்
வாழி யஃதிங் கெளிதன்று கண்டீர்!

என்று கூறி, நவராத்திரிக் காலத்திலே கலைமகள் விழாவில் நாம் செய்ய வேண்டியவற்றையும் சுருக்கமாகக் கூறுகிறார்.

இன்னறுங் கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்;
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம்பதி னாயிரம் நாட்டல்;
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி யொளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக் கெழுத் தறிவித்தல்.

பாரதியார் விரும்புகின்றபடி இன்றைய தமிழ் நாட்டில் கலைமகள் விழா நடைபெறவில்லை. அப்படி நடைபெறும் நாள் இனியேனும் வருமென்று நம்புவோமாக.

ருஷ்யப் புரட்சியைப் பாடியது எழுச்சியாலா, இளைந்தெரிந்தா?

மகாகவி பாரதியார், ஜார் ருஷ்யாவானது சோவியத் ருஷ்யாவாக மாறியபோது—அந்தப் பெரு நாட்டிலே வர்க்கப் புரட்சி வெற்றி பெற்ற போது, அதனை வரவேற்று 'புதிய ருஷ்யா' என்னும் தலைப்பிட்டுப் பாட்டெழுதி வாழ்த்துக் கூறினர். ஆம்; ருஷ்யப் புரட்சியின்போது இந்தியா சுதந்திர நாடாக இல்லை. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் காலனி நாடாக இருந்தது. இந்திய மக்கள் விடுதலை கோரிப் போராடிக்கொண்டிருந்தனர். அதனால், விடுதலைப் பாசறையின் சார்பில் சோவியத் ருஷ்யாவுக்கு வாழ்த்துக் கூறினர் பாரதியார்.

ருஷ்யாவிலே, 1917 பிப்ரவரியில் ஒரு புரட்சியும் அக்டோபரில் ஒரு புரட்சியுமாக இரு வேறு புரட்சிகள் நிகழ்ந்தன. முதல் புரட்சியின் முடிவிலே "மென்ஷ்விக்குகள்" என்போரின் தலைமையிலே ஆட்சி அமைந்தது. இரண்டாவது புரட்சியின் முடிவிலே மென்ஷ்விக் ஆட்சியும் அழிக்கப் பட்டு மாவீரன் லெனின் தலைமையிலே "போல்ஷ்விக் ஆட்சி" நிறுவப் பெற்றது.

இந்த இரண்டு புரட்சிகளும் ஒரே ஆண்டில் அடுத்தடுத்து நடைபெற்றமையால், "பாரதி பாடியது எந்தப் புரட்சியை?" என்னும் வினு எழுப்பப்படுகிறது. மென்ஷ்

விக்குகள் ஆட்சியும் இடதுசாரித் தன்மையுடையதாத லால்— வர்க்கப் புரட்சியிலிருந்துதான் பூத்த தாதலால் பாரதியார் முதல் புரட்சியான பிப்ரவரிப் புரட்சியைப் பாடி யிருக்கக் கூடுமோ என்ற ஐயம் எழுவது இயற்கை.

நான் சோவியத் ருஷ்யாவில் இருந்தபோது என்னிடமே இந்தக் கேள்வி கேட்கப்பட்டது. சோவியத்திலிருந்து திரும்பிய பின்னர் இதுபற்றி நான் ஆழ்ந்து ஆராய்ந்து பார்த்தேன். பிப்ரவரிப் புரட்சியையும் அக்டோபர் புரட் சியையும் விளக்கும் வரலாற்று நூல்களைப் படித்து, அவற்றோடு பாரதி பாடிய 'புதிய ருஷ்யாவை'யும் ஒப்பிட்டுப் பார்த்து உண்மை காண முயன்றேன். அதன் விளைவாக நான் கண்ட முடிவு என்னவென்றால், பாரதி பாடியது அக்டோபர் புரட்சியில் பூத்த— லெனின் தலைமை யில் அமைந்த சோவியத் ருஷ்யாவைத்தான் என்பதாகும்.

பாரதியார் 'புதிய ருஷ்யா' என்ற பாடலில், "மாகாளி பராசக்தி உருசிய நாட்டினில் கடைக்கண் வைத்தாள்— அங்கே, ஆகாவென் றெழுந்தது பார் யுகப் புரட்சி" என்று பாடுகிறார். ஆகாவென்று ஆங்கார ஓங்காரமிட்டு எழுந்தது என்று வருணிக்கத்தக்க அளவில் நடந்தது பிப்ரவரிப் புரட்சியன்று; அக்டோபர் புரட்சிதான். அத்துடன் 'யுகப் புரட்சி' என்று சொல்லுமளவுக்கு சோசலிசப் புதுவுலகத் தைப் படைத்ததும் அக்டோபர் புரட்சிதான். இதில் ஐய மெழுவதற்கிடமில்லை.

பாரதியார், 'ருஷ்யப் புரட்சியை இனந்தெரிந்து பாடி னாரா, வெறும் எழுச்சியால் பாடினாரா?" என்றொரு வினாவும் எழுப்பப்படுகின்றது. இது பற்றியும் நான் ஓரளவு ஆராய்ந்து பார்த்தேன். பாரதி போன்ற ஆவேசக் கவி தீயது அழிந்து நல்லது தோன்றுகின்றபோது வெறும் எழுச்சியால் மட்டுமே அதனை வரவேற்றுப் பாடுவதும் உண்டு. அதுகூட சிறப்புக்குரியதுதான். ஆனால், பாரதி

யின் "புதிய ருஷ்யா"ப் பாடலை அப்படி மதிப்பிடுவதற்கில்லை. இந்தியாவிலே பாரதியாருக்கிருந்த சூழ்நிலை ருஷ்யப் புரட்சியை இனந் தெரிந்து பாட அவருக்குத் துணை புரிந்திருக்கிறது.

1917ல் இந்திய தேசிய காங்கிரஸ் மிதவாதிகளிடமிருந்து விடுபட்டு ஏகாதிபத்தியத்தின் முதல் நம்பர் எதிரிகளுடைய செல்வாக்கின் கீழ் வந்து கொண்டிருந்தது; விடுதலைக்கான ஒரு மகத்தான புரட்சியை நோக்கியும் சென்று கொண்டிருந்தது. 'பஞ்சாப் படுகொலை' போன்ற மாபெரும் கொடுமையைச் செய்தேனும் தேசிய எழுச்சியை அடக்கி ஒடுக்கி விட வேண்டுமென்ற ஆத்திரத்தில் பிரிட்டிஷ் ஆட்சி இருந்த காலம் அது. பாரதியார் ஏகாதிபத்திய எதிர்ப்புப்பாசறையிலே விடுதலை விரும்பிய வீரர்களோடு வீரராகக் கலந்திருந்தார். ஆங்கிலமும் அறிந்தவராதலால், உலக நிகழ்ச்சிகளை செய்தி இதழ்கள் மூலம் அறிந்து கொள்வதற்கான முழு வாய்ப்பினை அவர் பெற்றிருந்தார். அப்படி அறிந்து கொள்வதனையும் வழக்கமாகக் கொண்டிருந்தார். அவரே மிகச் சிறந்த பத்திராதிபராகவும் இருந்து வந்தார். ருஷ்யப் புரட்சி நடந்த காலத்திலே பிரெஞ்சிந்தியப் பிரதேசமான புதுவையில் அவர் வசித்து வந்தார். அதனால், ருஷ்யப் புரட்சி பற்றிய செய்திகளை பிரிட்டிஷ் இந்தியாவில் வாழ்ந்தவர்களை விடவும் அதிக அளவில் தெரிந்துகொள்ள அவருக்கு வாய்ப்பு இருந்தது. ஆகவே, ருஷ்யப் புரட்சியை இனந்தெரிந்து பாட அவரால் முடிந்திருக்கிறது.

பாரதியார், தன் தாய் நாட்டை அடிமைப் படுத்தியிருந்த பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் தேசியவாதியாக மட்டுமன்றி, உலகிலுள்ள ஏகாதிபத்தியங்கள் அனைத்தையுமே வெறுக்கும் சர்வ தேசிய வாதியாகவும் விளங்கினர். இதனுற்றான், இத்தலி நாட்டின் சுதந்திரத்திற்குப் போராடிய 'மாஜினியின் சபதத்தைப் பாடினர்.

ஜெர்மன் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடிய பெல்ஜியத்தின் வீழ்ச்சியைப் பாடினுர். உலகிலுள்ள ஒவ்வொரு நாடும் சுதந்திரத்துடன் வாழ வேண்டும் என்பது அவரது விருப்பமாக இருந்தது. உலகில் எந்த ஒரு நாடு ஏகாதிபத்தியத்திற்கு அடிமைப் பட்டிருப்பினும், அந்த நாட்டிடம் அனுதாபம் காட்டுவது பாரதியாரின் உயர்ந்த கொள்கையாக இருந்திருக்கிறது. இந்த சர்வதேச உணர்ச்சியாலும் ருஷ்யப் புரட்சியை இனந் தெரிந்து பாட அவரால் முடிந்திருக்கிறது.

பாரதியார், முடியாட்சியை அடியோடு வெறுக்கும் குடியரசு வாதியாகத் திகழ்ந்தார். இதனை, "பாஞ்சாலி சபதத்திலே, "காட்டுமுண்மை நீதி பலதாங் காட்டுவார்களேனும் நாட்டு ராஜநீதி மனிதர் நன்கு செய்யவில்லை" என்று அவர் பாடியுள்ள வரிகளால் அறிகிறோம். ஆம்; முடியரசை வெறுக்கும் அப்பட்டமான குடியரசுவாதியாக அவர் திகழ்ந்ததால், ருஷ்யாவில் ஜார் ஆட்சி வீழ்ச்சியுற்றதனை, இனந்தெரிந்து வரவேற்றிருக்கிறார். அத்துடன் எழுச்சியோடு புரட்சியாளர்களை வாழ்த்தியு மிருக்கிறார். 'கொடுங்கோலன் ஜார் அலறி வீழ்ந்தான்' என்றும், 'இமயமலை வீழ்ந்ததுபோல் விழ்ந்து விட்டான் ஜாரரசன்' என்றும் பாடியிருப்பதால் அறிந்து கொள்ளுகிறோம்.

பாரதியார், சுரண்டப்படும் வர்க்கமென்றும், சுரண்டுகின்ற வர்க்கமென்றும் இரு வேறு வர்க்கங்கள் மனித சமுதாயத்தில் உண்டென்பதனை தெள்ளத்தெளிய உணர்ந்தவர். சுரண்டுகின்ற வர்க்கத்துக்கு எதிராக ஆத்திரமும், சுரண்டப்படுகின்ற வர்க்கத்துக்கு ஆதரவாக அன்புணர்ச்சியும் கொண்டிருந்தார். இதனுலும், ருஷ்யப் புரட்சியை இனந் தெரிந்து பாட அவரால் முடிந்திருக்கிறது.

"தனி ஒருவனுக்குணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம்" என்று பாடினர். "மனிதருணவை மனிதர் பறிக்கும் வழக்கமினியுண்டோ? மனிதர் நோக மனிதர் பார்க்கும் வாழ்க்கையினி யுண்டோ?" என்று அவர் பாடி வைத்துள்ள வரிகளால், வர்க்க பேதத்தை அவர் தெள்ளத் தெளிய உணர்ந்திருந்தார் என்பதும், அந்த வர்க்கங்களிடையே சாத்விக முறையிலேனும் ஒரு போராட்டம் அவசியப்படுகிறதென்பதனை அவர் அறிந்து வைத்திருந்தார் என்பதும் புலனாகின்றன.

ருஷ்யாவில் சோவியத் ஆட்சி அமைந்த ஒன்றிரு மாதங்களுக்குள்ளாகவே கீழ்வரும் பிரகடனத்தை அரசியல் நிர்ணய மன்றம் வெளியிட்டது.

"........உண்மையாகவே ஒரு சுதந்திரமான, இஷ்ட பூர்வமான, அதனாலேயே, அதிக உறுதியான, நிலையான, ருஷ்யாவின் எல்லாத் தேசிய இனங்களின், உழைப்பாளி வர்க்கங்களின் ஒன்றியத்தைப் படைக்கும் முயற்சியில் ருஷ்யாவின் சோவியத் குடியரசுகளின் சமஷ்டியின் ஜீவாதாரமான கோட்பாடுகளை நிலை நாட்டுவதோடு தன்னுடைய கடமையை அரசியல் நிர்ணய சபை கட்டுப்படுத்திக் கொள்கிறது. அதே பொழுதில், சமஷ்டி சர்க்காரிலும் இதர சமஷ்டி சோவியத் அமைப்புகளிலும் பங்கெடுத்துக் கொள்ள விரும்புகின்றனவா என்பதையும், அப்படி எனில் எந்த நிபந்தனைகளின் பேரில் என்பதனையும் ஒவ்வொரு தேசிய இனமும் தங்களுடைய அதிகார பூர்வமான சோவியத்துக்களின் காங்கிரசில் சுதந்தரமாக முடிவு செய்து கொள்ள விட்டு விடுகிறது."

[வி. ஐ. லெனின் —தொகுப்பு நூல்; தொகுதி 26].

இது, 17—1—1918ல் வெளியிடப்பட்டது.

சோவியத் அரசியல் நிர்ணய சபையின் பிரகடன மானது ருஷ்யாவின் மொழிவழித் தேசிய இனங்களின் சுதந்திரத்தையும், சுயநிர்ணய உரிமையையும் ஏற்றுக் கொள்வதைப் பார்க்கிறோம். மற்றும், மொழிவாரி தேசிய இனங்களின் தாயகங்கள் விரும்பிக் கலந்து கொள்வதற் கான வாய்ப்பையும், விரும்பாத நிலையில் தனித்திருப்பதற் கான வாய்ப்பையும் அளித்திருக்கின்றன என்பதையும் பார்க்கிறோம்.

பாரதியார், இந்தியாவையும் மொழிவாரி நாடுகள் கொண்ட ஒரு பெருநாடாகவும் பாரத சமுதாயத்தை மொழி வாரித் தேசிய இனங்கள் கொண்ட ஒரு கூட்டுக் குடும்ப மாகவும் பார்த்திருக்கிறார் என்பதனை 'செந்தமிழ் நாடு'— "தாயின் மணிக்கொடி பாரீர்!' என்ற பாடல்களிலே பார்க்க முடிகின்றது.

விடுதலை பெற்ற இந்தியாவில்—சுதந்திரக் கொடியின் கீழே மொழிவாரித் தேசிய இனங்களின் இராணுவ வீரர்கள் இனவாரி அணி வகுத்து நிற்கும் காட்சியைக் கற்பித்துக் காட்டுகிறார் பாரதியார். இந்த உணர்வு காரண மாகவும் சோவியத் ருஷ்யாவை இனந்தெரிந்து பாட அவ ரால் முடிந்திருக்கிறதென்று சொல்லலாம்.

'புதிய ருஷ்யா' என்னும் பாடலிலே, 'அடிமைக்குத் தளையில்லை, யாருமிப்போது அடிமையில்லை' என்று சோவி யத் அரசு பிரகடனம் செய்ததாக அறிவிக்கின்றார். 'குடி மக்கள் சொன்னபடி குடிவாழ்வு மேன்மையுறக் குடிமை நீதி கடியொன்றில் எழுந்தது பார்' என்றும் எழுச்சி கொண்டு பாடுகின்றார்.

இதனைப் படிக்கும்போது சோவியத் ருஷ்யாவில் செய் யப்பட்ட கீழ்வரும் பிரகடனம் நமது நினைவுக்கு வரு கின்றது.

"உழைப்பாளித் தோழர்களே! தற்பொழுது நீங்கள், நீங்களேதான் அரசாங்கத்தின் தலைமையில் இருக்கின்றீர்கள் என்பதனை நினைவில் கொள்ளுங்கள். நீங்கள் ஐக்கியப்பட்டு, அரசாங்கத்தின் எல்லா விவகாரங்களையும் உங்கள் கைகளில் எடுத்துக் கொள்ளாவிட்டால் யாரும் உங்களுக்கு உதவி செய்யமாட்டார்கள். தற்பொழுதிலிருந்து உங்களுடைய சோவியத்துகள் அரசாங்க அதிகாரத்தின் கருவிகளாகும். முழு அதிகாரங்களையும் கொண்டு செயல்படும் அமைப்புகளாகும்.

"எல்லா அதிகாரங்களையும் உங்கள் சோவியத்துக்களின் கரங்களிலேயே, எடுத்துக் கொள்ளுங்கள். உங்களுடைய நிலம், தானியம், தொழிற்சாலைகள், சாதனங்கள், உற்பத்திப் பொருள்கள், போக்குவரத்து—ஆகிய எல்லாம் இனிமேல் பூரணமாக உங்களுடைய சொத்துக்களாகும். படிப்படியாக, பெரும்பான்மையான விவசாயிகளின் சம்மதத்துடனும், உடன்பாட்டுடனும் அவர்களுடையவும், தொழிலாளர்களுடையவும் நடைமுறை அனுபவத்திற்கேற்பவும் நாம் சோசலிசத்தின் வெற்றியை நோக்கி உறுதியாகவும், தளராமலும் முன்னேறுவோம்."

[வி. ஐ. லெனின் தொகுப்பு நூல்; தொகுதி 26]
இது, 20—11—1918ல் வெளியிடப்பட்டது.

பாரதியார், தமது புதிய ருஷ்யா என்னும் பாடலின் இறுதியிலே "இடி விழுந்த சுவர் போலே கலிவிழுந்தான் கிருத யுகம் எழுக மாதோ!" என்று முழங்கியிருக்கிறார். கலியுகம் கொடுமைகளுக்கு இருப்பிட மென்றும், கிருத யுகம் புதிய நன்மைகளின் பிறப்பிட மென்றும் பாரத மக்கள் நம்புகின்றனர். இதனை, புதிய பொருளிலே பயன்படுத்துகின்றார் பாரதியார். ஆம்; கலியுகத்தை முதலாளித்துவ சகாப்தமாகவும் கிருத்யுகத்தை சோசலிச சகாப்தமாகவும் கொண்டு மேலே சொன்ன வரிகளைப் பாடியுள்ளார்.

பாரதியார், சோவியத் ருஷ்யாவை எல்லா வகையிலும் இனந்தெரிந்து பாடியுள்ளாரென்று நான் கூறவில்லை. அது போல, வெறும் எழுச்சியால் மட்டுமே புதிய ருஷ்யாவைப் பாடி வைத்தார் என்று சொல்லவும் எனது நெஞ்சம் துணியவில்லை. ஏகாதிபத்திய ஆதிக்கத்தின் கீழ் வாழ்ந்த நிலையிலே, அதன் அடக்குமுறைக் கொடுமைகளுக்குத் தப்பி பிரெஞ்சிந்தியாவில் தம்மைத்தாமே சிறைப்படுத்திக் கொண்ட நேரத்திலே, அவருக்கிருந்த சந்தர்ப்ப சூழ்நிலைக் கேற்ப புதிய ருஷ்யாவை அவர் போதுமான அளவில் புரிந்து கொண்டு பாடியிருக்கிறார்.

இந்தியாவிலுள்ள மொழி வேறுபாடுடைய மக்களை-தனித் தனித் தேசிய இனங்களை ஏற்றுக்கொண்டு, அந்த வகையிலே தமிழ் மொழிக்கு ஏற்றங்கூறி தமிழுக்கும் தமிழ் நாட்டுக்கும் தனியாக வாழ்த்து வழங்கி அவர் பாடல்கள் புனையத் தொடங்கியது ருஷ்யப் புரட்சிக்குப் பின்னர்தான்!

கடைசியாக அவர் பாடிய பாடல் 'பாரத சமுதாயம் வாழ்கவே' என்பதாகும். அதிலே, இந்திய தேசியமேயன்றி, சர்வ தேசிய உணர்வும், சோசலிசத் தெளிவும் மணக்கின்றன. பாரதியார், காளியையும், கணபதியையும், இந்திரனையும், சந்திரனையும் வாழ்த்தியும், வழிபட்டும பாடல்கள் புனைந்தது ருஷ்யப் புரட்சியைப் பாடுவதற்கு முன்னர்தான்.

பாரதியாரும் சிதம்பரனாரும்

சிதம்பரனாரும் சுப்பிரமணிய பாரதியாரும் சம காலத்தவராகவும், சகாக்களாகவும் விளங்கினர். முன்னவர், கோயில்பட்டி தாலுக்காவிலுள்ள ஒட்டப்பிடாரம் கிராமத்தில் பிறந்தார். பின்னவர், அதே தாலுக்காவிலுள்ள எட்டயபுரத்தில் பிறந்தார். வ. உ. சி. யின் தந்தையார் வ. உலகநாதப் பிள்ளை, எட்டையபுரம் சமஸ்தானத்தில் வக்கீலாகப் பணிபுரிந்தார். பாரதியாரின் தகப்பனார் சின்னசாமி ஐயரும் அதே சமஸ்தானத்தில் உத்தியோகம் செய்து வந்தார். அவர்கள் மனமொத்த நண்பர்களாகவும் வாழ்ந்தனர்.

பாரதியார், "இந்தியா" என்னும் பெயர் பெற்ற தமிழ்ப் பத்திரிகையின் ஆசரியராக இருந்தார். இந்தப் பத்திரிகையின் அலுவலகத்தில்தான் சிதம்பரனார் பாரதியாரை முதன் முதலாகச் சந்தித்தார். அந்தச் சந்திப்பு குறித்து வ. உ. சி. கூறுவதாவது:

"இந்த முதல் சந்திப்பும் பேச்சுமே என்னைச் சோழனாகவும், அவரைக் கம்பனாகவும் நான் நினைக்கும்படிச் செய்தது. பாரதியார் என்னைக் கடற்கரைக்கு அழைத்தார். நாங்கள் திருவல்லிக்கேணிக் கடற்கரைக்குச் சென்று வெகு நேரம் அரசியல் விஷயங்களைப் பற்றிப் பரஸ்பரம் பேசிக் கொண்டிருந்தோம்.

"என் உள்ளத்தில் மின்மினிப்பூச்சி போன்று மின்னிக் கொண்டிருந்த தேசாபிமான நெருப்பு விளக்கு போல ஒளி

விட்டுப் பிரகாசித்தது. உணர்ச்சிப் பெருக்கால் இங்கு எழுதியுள்ள இதே வாக்கியத்தை நான் பாரதியாரிடம் சொன்னேன். இதே சமயத்தில் கடற்கரை மின்சார விளக்குகளும் 'பளிச்'சென ஒளிவிட்டு எரிய ஆரம்பித்தன. பாரதி, "பிள்ளைவாள், சக்தி துணை செய்வாள்". நம் உள்ள ஒளி பிரகாசிக்கும்போது மின்னொளியையும் பிரகாசிக்கச் செய்தது நம் அன்னை பராசக்தியே! அவள் வாழ்க! இனி நம் முயற்சி வெற்றி, எடுத்ததெல்லாம் வெற்றி என்பதற்கான சுப சகுனம் இதுதான். வாழி அன்னை! வாழி அம்மை! சக்தி வாழி!" என ஆவேசம் வந்தவர் போலப் பேசினர்."

[வி. ஓ. சி. கண்டபாரதி; பக். 7-8]

"சென்னை ஜன சங்கம்" என்னும் தேசிய நிறுவனம் ஒன்றை பாரதியாரும் வ. உ. சி.யும் சென்னை நகரிலே அமைத்தனர்.

இவ்விருவரும் சூரத் காங்கிரசுக்கு ஒன்ருகச் சென்றவர்கள். அங்கு மிதவாதிகளுக்கும் தீவிரவாதிகளுக்குமிடையே நடைப்பெற்ற போராட்டத்தில் தீவிரவாதிகள் குழுவிலே இவர்கள் முன்னணியில் இருந்தனர். திலகரும் அரவிந்தரும் வ. உ. சி.யும் கூடிப் பேசி, மிதவாதிகள் ஆக்கிரமித்துக் கொண்ட காங்கிரசுக்கு வெளியே "தேசியவாதிகள் மாநாடு" என்ற புதிய கட்சியைத் தொடங்கினர். பிற்காலத்தில் காங்கிரசுக்குள்ளிருந்து எத்தனையோ அரசியல் கட்சிகள் கிளைத்தன. அவற்றில் தமிழரசுக் கழகமும் ஒன்று. ஆனல், காங்கிரசிலிருந்து முதன் முதலாகக் கிளைத்த கட்சி, "தேசியவாதிகள் மாநாடு" தான். அந்த புதிய கட்சிக்குப் பிரசாரம் செய்ய சென்னை நகரின் பல பகுதிகளிலும் கூட்டங்கள் நடத்தப்பட்டன. அந்தக் கூட்டங்களில் வ.உ.சி.யும் பாரதியும் பேசினர். "நாங்கள் 'இரட்டையர்' என அழைக்கப் பெற்ருேம்" என்கிருர் வ. உ. சி.

சிதம்பரனார் மீது அரசு தொடுத்த இராசத் துவேஷ வழக்கிலே சி. சு. பாரதியார் சாட்சியம் கூறினார். ஆம்; தமது அரிய நண்பர் சிதம்பரனாருக்கு ஆதரவாக! அந்த வழக்கு நடவடிக்கைகளைத் தமது "இந்தியா" பத்திரிகையில் அடிக்கடி விமர்சித்து வந்தார்.

விசாரணை கைதிகளாகப் பாளையங்கோட்டைச் சிறையில் சிதம்பரனாரும் சிவாவும் அடைப்பட்டிருந்தபோது, அதிகாரிகளின் அனுமதியோடு பாரதியார் அவர்களைப் பேட்டி கண்டு பேசினார். சிதம்பரனாரைக் கைதி கோலத்தில் கண்டதுமே, அவரைக் கட்டியணைத்துக் கொண்டு "பிள்ளைவாள், என்ன காரியம் செய்துவிட்டார்கள், பார்த்தீர்களா?" என்று பாரதியார் அங்கலாய்த்தார். கண்கலங்கி விம்மினார். அவரைத் தேற்றுவதற்கு வ. உ. சி. அரும்பாடுபட்டார். இந்தச் சந்திப்பின்போது நெல்லையில் கலெக்டர் விஞ்ச் துரைக்கும் வ. உ. சி.க்கும் நடந்த வாக்குவாதத்தை விவரமாய் அறிந்தார் பாரதியார். அறிந்ததும், அங்கேயே அந்த வாக்குவாதத்தை இருவேறு பாடல்களாகப் படைத்தார். இது, வ. உ. சி. தரும் தகவல்.

"மாஜினி சபதம்" என்ற தமது பாடலை வ. உ. சி. கேட்டுத்தான் இயற்றினார் பாரதியார். அதுபற்றி வ. உ. சி. தரும் தகவல் வருமாறு:

"ஒரு நாள் இத்தாலி நாட்டுத் தேசாபிமானி மாஜினியின் தேச ஊழிய யௌவன இத்தாலி சங்கத்தின் அங்கத்தினராகச் சேர்ந்தவர். செய்துவந்த விசுவாசப் பிரமாணச் செய்யுளை ஆங்கில பாஷையில் பாரதியார் எனக்குப் படித்துக் காட்டினார். அதனை கேட்டதும் நான் சொக்கிப் போனேன்! அச் செய்யுளைத் தமிழ்ப் பாட்டாக மொழி பெயர்த்துத் தருமாறு பாரதியாரை வேண்டினேன். அவர் அன்றே அந்த இடத்திலேயே அதைத் தமிழில் கவிதையாக

மொழி பெயர்த்துத் தந்தார், அதுதான் "பேரருட் கடவுள் திருவடியாணை" எனத் தொடங்கும் பாட்டு."

'[வி. ஒ. சி. கண்ட பாரதி', பக். 10-11·]

வ. உ. சி. கூறிய ஆலோசனையை யொட்டித் தான் மகா கவி பாரதியார் புதுவையில் அடைக்கலம் புகுந்தாராம். இதனை வ. உ. சி.யே சொல்லக் கேட்போம்:

"சிறையில் கிடந்து சேவை செய்யாதிருப்பினும், வேறு தேசம் சென்று தேச சேவை செய்து கொண்டிருப்பதே மேல் என நாங்கள் (சிதம்பரனாரும் சிவாவும்) பாரதியாருக்குத் தகவல் அனுப்பினோம்.

"பாரதியாரின் தேசிய கீதங்களில் மயங்கிக் கிடந்த கவர்மெண்டு எக்ஸிக்யூட்டிவ் ஆபீசர் ஒருவர் பாரதியாரிடம் தகவல் தெரிவித்துவிட்டார். சில காரணங்களால் அவர் பெயரை நான் இங்கு சொல்ல விரும்பவில்லை.

"முதலில் பாரதியார் இதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. பின்னர் புதுச்சேரி செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதனால் சென்றுவிட்டார் போலும்'"

['வி. ஒ. சி. கண்ட பாரதி,' பக். 45—43.]

சிதம்பரனாரை பாளையங்கோட்டைச் சிறையில் தாம் பார்த்தபோது அவர் அளித்த தோற்றத்தைப் பாரதியாரே வருணிக்கக் கேட்போம்.

"திங்கட்கிழமை காலை பாளையங்கோட்டை ஜெயிலுக்குப் போய்ச் சேர்ந்தேன். அங்குள்ள அதிகாரிகளின் அனுமதியின் பேரில் உள்ளே சென்று ஸ்ரீ. சிதம்பரம் பிள்ளை, ஸ்ரீ. சுப்பிரமணிய சிவன் இருவரையும் கண்டு பேசினேன். ஸ்ரீ. சிதம்பரம்பிள்ளையை முன்பு நான் தூத்துக்குடியிலே அவருடைய அரிய பிரசங்கங்களை ஆயிரக்கணக்கான ஜனங்கள் கேட்டுப் புகழ்ச்சி கூறிக் கொண்டிருந்த காலத்

தில் பார்த்தபோது அவருடைய முகம் எவ்வளவு பிரசன்ன மாகவும் தேஜஸுடனும் விளங்கியதோ அதே மாதிரியி லேயே இப்பொழுதும் இருக்கக் கண்டேன். உடனே எனக்கு,

"மெய்த்தி ருப்பம் மேவுஎன்ற போதினும்
இத்திருத் துறந்து ஏகுஎன்ற போதினும்
சித்தி ரத்தின் அலந்த செந்தாமரை
ஒத் திருக்கும் முகத்தினை உன்னுவாள்"

என்ற கம்பராமாயணப் பாடல் ஞாபகத்திற்கு வந்தது.

"அதிகாரிகள் இவர் தலை மீது செக்ஷன் கணக்கான கேசுகளைக் கொண்டு சுமத்தியிருக்க ஜெயிலிலே அதிபாதக மான குற்றவாளிகளுடன் சேர்ந்து அடையுண்டவராக இருக்கவும், இவருக்கு விரோதமாக இதுவரை சொல்லப் பட்டிருக்கும் சாட்சியம் வெகு பலமாகவும் இவருக்கு பயத்தை விளைவிக்கக் கூடியனவாகவும் இருக்கவும், இவர் சிறிதேனும் முகவாட்டமில்லாமலும் சோர்வில்லாமலும் வீர மூர்த்தியாக விளங்கிய அற்புதத்தை என்னால் வருணிக்க முடியாது."

["இந்தியா," 2-5-1908]

சிதம்பரனார் நாட்டின் விடுதலைக்காக ஈடுபட்ட ஒவ் வொரு பணியிலேயும் பாரதியாரும் பங்கு கொண்டார். வ. உ .சி. சுதேசிக் கப்பல் கம்பெனியைத் தொடங்கிய போது, அதற்குப் பங்குதாரர்களாகச் சேருமாறு தமிழ் மக்களுக்குத் தமது "இந்தியா" பத்திரிகை மூலம் வேண்டு கோள் விடுத்தார். வ. உ. சி. பம்பாய் சென்று இரண்டு கப்பல்களை வாங்கிக் கொண்டு தமிழகம் அடைந்தபோது, அவரை வரவேற்றுத் தலையங்கம் எழுதியதோடு, கப்பல் களைக் காட்சிப்படுத்தும் வகையில் 'கார்ட்டூன்' ஒன்றை யும் பிரசுரித்தார்.

சிதம்பரனுர் சிறையில் அடைப்பட்ட பின்னர் கப்பல் கம்பெனி ஆட்டம் கண்டது அப்போது அதனை உறுதிப் படுத்த முன் வருமாறு தமிழ் மக்களுக்கு பாரதியார் உருக்க மாக வேண்டுகோள் விடுத்தார். அது வருமாறு :

"தூத்துக்குடியிலுள்ள ஸ்டீமர் கம்பெனிக்குப் பிதா ஸ்தானம் வகித்தவராகிய ஸ்ரீமான் சிதம்பரம் பிள்ளை நமதிடையிலிருந்து அவருடைய பரோபகாரமாகிய முயற்சி கள் செய்வதற்கிடமில்லாமல் விலக்கப் பெற்று விட்டனர். அவருடைய ஆசை மகளாகிய ஷை கம்பெனியை இக்காலத் தில் வைத்து சம்ரக்ஷணை செய்ய வேண்டியது பாரத வாசி யாகிய ஒவ்வொருவனுக்கும் விடுதலைப் பொறுப்பாகும்.

"அவர் இல்லாத சமயத்தில் நமது கவனக் குறைவால் அந்தக் கம்பெனிக்கு ஏதேனும் சஞ்சலம் ஏற்பட்டுவிடும் பட்சத்தில் நமது ஜாதீய கௌரவத்துக்கு அதைப் போன்ற குறைவு வேறே கிடையாது."

['இந்தியா', 13-7-1908]

சுதேசிக் கப்பல் கம்பெனியின் கப்பல்கள் ஆங்கிலே யர் கம்பெனிக்கு விற்கப்பட்டபோது, பாரதியார் வேதனை யுற்ருர். அதுபற்றி அவர் கூறியதாவது :—

"மானம் பெரிது. ஒரு சில ஓட்டைக் காசுகளுக்காக எதிரியிடமே அக் கப்பல்களை விற்றுவிட்டார்களே, பாவி கள்! அதைவிட அதைச் சுக்கல் சுக்கலாக நொருக்கி வங்காளக் குடாக்கடலில் மிதக்க விட்டாலாவது என் மனம் ஆறுமே! இந்தச் சில காசுகள் போய்விட் டாலா தமிழ்நாடு அழிந்து விடும்? பேடிகள்!"

['வி ஓ சி. கண்ட பாரதி', பக். 48.]

பாரதியார் காலத்தில், தமிழ் நாட்டில் வாழ்ந்த அரசி யல் பெருந் தலைவர்கள் பலராவர். அவர்களில் வ. உ. சி.

ஒருவர்தான் பாரதியாரால் பாடப் பெற்றார். அந்த மகா கவியிடம் பாடல் பெறுவதே பாக்கியம் அல்லவா!

சிதம்பரனார் பாரதியாரின் தேசியப் பாடல்களைக் கேட்பதிலே ஆர்வ முடையவராக இருந்தார். அவர் பரம சைவர்; வைதிகருங்கூட. ஆயினும், உயிர் நீக்குங்கால், தெய்வபக்திப் பாடல்களைப் பாடச்சொல்லிக் கேட்காமல் தேசபக்திப் பாடல்களையே பாடச் சொல்லிக் கேட்டார். ஆம்; "என்று தணியுமிந்த சுதந்திர தாகம்" என்று தொடங்கும் பாரதியார் பாடலைப் பாடச் சொல்லிக் கேட்டுக் கொண்டே உயிர் நீத்தார்.

பாரதி கண்ட புதிய பாரதம்

பாரதியார், அப்பட்டமான தேசியக் கவி. ''பாருக்குள்ளே நல்ல நாடு, எங்கள் பாரத நாடு'' என்று பாடியவர். ஆனால், இந்தியாவிலுள்ள மொழி வேறுபாடுகளை, மொழி வழிப்பட்ட இனப் பாகுபாடுகளை அவர் மறந்துவிடவில்லை. கேவலம் உத்தியோகத்திற்காக 'ஒரே இந்தியா' பேசுவோரும் உண்டு. பாரதியாரும் 'ஒரே இந்தியா'வை விரும்பினர். உத்தியோகத்திற்காக அல்ல; மக்களுடைய உரிமைகளுக்காக! தேச ஒருமைப்பாட்டுக்காக!

தமிழ், தனி மொழி ;
தமிழர், தனி தேசிய இனத்தவர் ;
தமிழகம், தனி நாடு.

இந்த மூன்று உண்மைகளைப் பாரதியார் தெள்ளத் தெளிய உணர்ந்திருந்தார். இந்தத் தனித் தன்மைகள் அழிக்கப்படாமல் காக்கப்பட வேண்டுமென்பதிலேயும் அவர் உறுதி கொண்டிருந்தார்.

பாரதியார், தமிழ் தனி மொழி; இன்னொரு மொழியின் கிளை மொழியோ, சேய் மொழியோ, சார்பு மொழியோ அல்ல என்பதனை வற்புறுத்தும் வகையிலே, ''என்னை, ஆதிசிவன் பெற்றுவிட்டான்'' என்பதாக தமிழ்த் தாயே கூறுவது போலப் பாடியுள்ளார். ஆரியத்தின் கிளை மொழி

அல்ல என்பதோடு, அதற்கு இணையான மொழி என்பதை யும் எடுத்துக் காட்ட விரும்பி, "உயர் ஆரியத்திற்கு நிக ரென வாழ்ந்தேன்" என்று தமிழ்த் தாய் கூறுவது போலப் பாடி வைத்துள்ளார்.

தமிழ் மொழி, தனக்கெனத் தனி இலக்கணத்தைப் பெற்றுள்ளது என்பதையும் நமக்கு நினைப்பூட்ட பாரதி மறந்துவிடவில்லை. "அகத்திய னென்பான், மேவும் இலக் கணம் செய்து கொடுத்தான்" என்று பறை யறைந்து பாடுகின்றார்.

நம் அன்னை மொழியான கன்னித் தமிழ் தனக்கெனத் தனியாக இலக்கணத்தை மட்டுமல்லாமல், பழமை மிக்க இலக்கியங்களையும் பெற்றுள்ளது என்பதையும் எடுத்துக் காட்டியுள்ளார்.

இப்படி, தமிழ் மொழியானது தனக்கெனத் தனியாக இலக்கண—இலக்கியங்களைப் பெற்றுள்ள காரணத்தாலே, "இந்தக் கணமட்டும் காலன், என்னை ஏறிட்டுப் பார்க்க வும் அஞ்சி யிருந்தான்" என்று தமிழ்த் தாய் கூறுவது போலப் பாடி வைத்துள்ளார்.

தமிழ் வாழ்த்துப் பாடலிலே, "வானம் அளந்தது அனைத்தும் அளந்திடும் வண்மொழி" என்று பாடியவர், "வானம் அறிந்தது அனைத்தும் அறிந்திடும் வளர்மொழி" என்றும் கூறுகின்றார். 'அளந்தது' என்பதன் பொருள் வேறு. 'அறிந்தது' என்பதன் பொருள் வேறு. இதனைப் புரிந்தே சொல்லி வைத்துள்ளார் பாரதியார்.

இன்னும் ஒருபடி மேலே போய், 'யாமறிந்த மொழி களிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்' என்றும் பாடியுள்ளார். இன்னும் ஒருபடி மேலே போய், 'யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல், வள்ளுவர்போல்,

இளங்கோவைப் போல், பூமிதனில் யாங்கணுமே பிறந்த திலே''என்றும் பாடுகின்றார்.

இன்று சிலர், "இது வெறும் புகழ்ச்சியாகப் பாடப் பட்டதே யன்றி, உண்மை என்று நம்பிப் பாடப்பட்ட தன்று" என்று கூறுகின்றனர். இப்படிக் கூறுவோரும் தோன்றக்கூடும் என்று எதிர்பார்த்து, "உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை" என்று அடித்துக் கூறுகின்றார்.

தமிழின் தனித் தன்மையைக் கூறிய பாரதியார் தமிழ் மக்களின் தனித் தன்மையைக் கூறவும் மறந்துவிடவில்லை. தமிழர்களைத் தலைதலையாக எண்ணும் சந்தைக் கூட்ட மாகவோ, மந்தைக் கூட்டமாகவோ அந்த மகாகவி மதிப் பிடவில்லை. ஒரு தனி இனமாகவே எண்ணினார். அதனால், "தமிழச் சாதி" என்னும் தலைப்பிட்டு, ஒரு தனிப் பாடல் பாடியிருக்கிறார். 'இனம்' என்பதனையே 'சாதி' என்னும் சொல்லால் குறிப்பிடுகிறார்.

தமிழ் இனத்துக்கெனத் தனியாக ஒரு மொழி இருப்பதுபோல, தனியாக ஒரு தாயகமும் இருக்கின்ற தென்பதனை பாரதி உணர்ந்திருந்தார். அதனாற்றான்,

"செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே"

என்று பாடினார். 'தமிழகம், தமிழரின் தாய்நாடு' என்று சொல்லவும் தேசியக்கவி பாரதி வெட்கப்படவில்லை. பெரு மைப்படவும் செய்கிறார். செந்தமிழ்நாடு தமிழ் இனத்த வரின் தந்தையர் நாடு என்பதனை நினைத்தாலே தமக்குப் புதிய சக்தி பிறப்பதாகவும் பறை சாற்றுகிறார்.

செந்தமிழ் நாடெனும்
போதினிலே—இன்பத்
தேன்வந்து பாயுது
காதினிலே—எங்கள்
தந்தையர் நாடென்ற
பேச்சி னிலே—ஒரு
சக்தி பிறக்குது
மூச்சினிலே !

இந்த வரிகளை உணர்ச்சிப் பெருமிதத்தோடு, உள்ளங் களிக்கப் பாடியுள்ளார் பாரதி. ஆம்; ஒப்புக்குப் பாடிய தன்று; வோட்டுக்குப் பாடியதுமன்று. தமிழினத்தின் உரிமையை நினைவில் கொண்டு பாடியது. தமிழ்நாடு, அரசியலில் தனிததியங்கவும் வல்லது; தனித்தியங்கிய வரலாற்றையும் படைத்திருப்பது. இனியும் தனித் தியங்கக்கூடிய உரிமையைக் கோரவும் தகுதியுடையது. இந்த உண்மைகளை, 'செந்தமிழ் நாடு' என்னும் தலைப்பில் பாடிய பாடலிலே, வரிக்கு வரி—ஏன், வார்த்தைக்கு வார்த்தை வலியுறுத்துகின்றார்.

தமிழகம், இயற்கை எல்லைகளைக் கொண்டது. வள்ளுவர், 'நீரரணும் மலையரணும் கொண்டதே நாடு' என்கிறார். தமிழகம் இந்த இரண்டு அரண்களைப் பெற்றுள்ள தனிநாடு என்பதனை வலியுறுத்த விரும்பி,

''நீலத் திரைக்கடல்
ஓரத்திலே—நின்று
நித்தந் தவம் செய்
குமரி யெல்லை—வட
மாலவன் குன்றம்
இவற்றிடையே புகழ்
மண்டிக் கிடக்கும்
தமிழ் நாடு''

என்று பாடுகின்றார். இயற்கை அரண்கள் மட்டுமல்ல; நீர்வளத்தையும் பெற்ற திருநாடு தமிழர்தம் தாய்நாடு என்பதனையும் எடுத்துச் சொல்லுகின்றார்.

வட பாரதத்திலே பஞ்ச நதிகள் பாய்கின்றன. அதுபோல, தென் பாரதமாம் தமிழகத்திலும் பஞ்ச நதிகள் பாய்கின்றன என்கிறார் பாரதியார். இதோ அந்தப் பாடல்:

காவிரி தென்பெண்ணை
பாலாறு—தமிழ்
கண்டதோர் வையை
பொருனை நதி—யென
மேவிய யாறு பல
வோடத்— திரு
மேனி செழித்த
தமிழ்நாடு.

இன்னும், "செல்வம் எத்தனையுண்டு புவிமீதே அவை யாவும் படைத்த தமிழ்நாடு" என்றும் பாடுகின்றார். வீரஞ் செறிந்த, வேதம் நிறைந்த, கன்னியர் சூழ்ந்த, கல்வி சிறந்த தமிழ்நாடு என்றெல்லாம் வருணித்து வருணித்து மகிழ்கின்றார். பலவிதமான சாத்திரத்தின் மணம் பாரெங்கும் வீசும் தமிழ்நாடு என்றும் பாடுகின்றார்.

தமிழருக்கு தனித்த தாயகம் உண்டு; தனித்த மொழியுண்டு—என்று பாடும் பாரதியார் லட்சாதி லட்சம் ஆண்டு பழமையுடைய தனித்த வரலாறும் உண்டு என்பதனைச் சொல்ல மறந்துவிடவில்லை. தமிழினத்தின் போர்த்திறனைக் கூறுமிடத்து, கலிங்கத்தை வென்ற சோழ மன்னனின் தளபதி கருணாகரத் தொண்டமானின் ஆற்றலைப் பாடுகின்றார். இதனை, "சமர் பண்ணிக்

கலிங்கத் திருள்கெடுத்தார் தமிழ்ப் பார்த்திபர் நின்ற தமிழ்நாடு'' என்ற வரிகளில் பார்க்கிறோம்.

தமிழ்நாட்டார், தங்கள் நாட்டைக் காத்துக் கொண்டதோடன்றி, தேவர் தலைவன் எனப்படும் இந்திரனுக்கும் வெற்றி தேடித்தந்ததுண்டு. இதனை, தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பிய மன்னனின் சாதனையாக வரும் சங்க இலக்கியச் செய்திகளால் அறிகிறோம். பாரதியும் அந்தப் பழம் பெருமையைப் புதிய விறுவிறுப்போடு பாடுகின்றார். இதோ பாட்டு :

விண்ணை யிடிக்கும் தலையிமயம்—எனும்

வெற்பை யடிக்கும் திறனுடையார்

சாம்ராஜ்ய வெறி வெறுக்கத் தக்கதுதான். ஆனால், அத்துறையிலேயும் தமிழர் திறன் பெற்றிருந்தனர் என்பதனையும் இன உணர்ச்சியோடு பாரதியார் எடுத்துக் காட்டுகிறார்.

"சிங்களம், புட்பகம்,
சாவக—மாதிய
தீவு பலவினுஞ்
சென்றேறி—அங்கு
தங்கள் புலிக் கொடி
மீன் கொடியும் நின்று
சால்புறக் கண்டவர்
தாய் நாடு.''

என்ற வரிகள் தமிழர் படை கடல் கடந்து தூரக் கிழக்கு நாடுகளில் அரசோச்சிய பெருமையைக் கூறுகின்றன.

பொதுவாக, கலை—தொழில் — வாணிபம் — ஞானம் ஆகிய துறைகளில் எல்லாம் தமிழகத்தை வாழ வைக்கவும் வளப்படுத்தவும் உலக நாடுகளைப் பயன்படுத்தினராம் பண்டைத் தமிழினத்தார். அதனை,

“ சீன மிசிரம் யவன
ரகம்—இன்னும்
தேசம் பலவும்
புகழ்வீசிக்—கலை
ஞானம் படைத் தொழில்
வாணிபமும் மிக
நன்று வளர்த்த
தமிழ் நாடு.”

என்னும் வரிகளில் கூறுகின்றார்.

தமிழினம், தனித்த வரலாற்றையும், தனித்த மொழியையும், தனித்த பழக்க வழக்கங்களையும், தனக்கெனத் தனியாக ஒரு தாயகத்தையும் பெற்றிருக்கிறதென்பதனை மகாகவி பாரதியார் தெள்ளத் தெளிய உணர்த்திவிட்டார். இதுபோல, ஆந்திரர், கேரளர், கன்னடர், மராத்தியர், வங்காளியர், இந்துஸ்தானியர், பஞ்சாபியர் ஆகிய பல்வேறு இனத்தவரும் தத்தமக்கென மொழியையும், வரலாற்றையும், பழக்க வழக்கங்களையும், தாயகத்தையும் தனித் தனியே பெற்றிருக்கின்றனர் என்றும் பாரதியார் நம்பினார்.

இப்படி, மொழிவழித் தேசிய இனங்கள் பெற்றுள்ள தனித் தன்மைகளை அழித்து விடாமல், அவற்றையும் போற்றிக் காக்கும் வகையில் சுதந்திர பாரதம் அமைய வேண்டும் என்றும் பாரதியார் விரும்பினார்.

பாரத சமுதாயத்தை ஒரே மந்தைக் கூட்டமாக பாரதியார் மதிக்கவில்லை. மொழி வேறுபாடுடைய பல்வேறு இனங்களின் கூட்டுக் குடும்பம் என்றே எண்ணினர். அதனல், சுதந்திர பாரத அரசு சுயாட்சியுடைய மொழிவாரி அரசுகள் விரும்பிக் கலந்த சமஷ்டி அரசாக அமையவேண்டும்—என்று ஆணையிட்டார்.

'தாயின் மணிக்கொடி' என்னும் பாடலிலே சுதந்திர இந்தியாவைப் படைத்துக் காட்டுகின்றார். தேசக் கொடியின் கீழே அணி அணியாக பாரத வீரர்களைப் பிரித்துப் பிரித்து நிறுத்தி வைத்துக்காட்டுகிறார். இந்துக்களை ஒரு அணியாகவும், இஸ்லாமியரை ஒரு அணியாகவும், கிறித்துவரை இன்னொரு அணியாகவும், சீக்கியரை மற்றொரு அணியாகவும் பிரித்துக் காட்டவில்லை. மதங் கலவாத அரசியலே அந்த மகாகவியின் கொள்கை. அதனல், மதங்களை அங்கங்களாகக் கொண்டு பாரத சமஷ்டியை அவர் படைத்துக் காட்டவில்லை. தமிழர், ஆந்திரர், கேரளர், கன்னடர், மராத்தியர், வங்காளியர், இந்துஸ்தானத்தர், பஞ்சாபியர் ஆகிய மொழிவாரி இன அடிப்படையில் இந்திய சமஷ்டியைப் படைக்கிறார்.

வியப்பென்ன வென்றால், இந்திய இராணுவத்தைக் கூட பாரதியார் மொழிவழிப்பட்ட இனவாரி அணிகளாகப் பிரித்திருப்பதுதான். இந்திய தேசியக்கொடி சுதந்திரக் காற்றால் அசைக்கப்பட்டு ஆடிப் பறப்பது போலக் கற்பனை செய்து கண்டு, நமக்கும் காட்டுகின்றார்.

கம்பத்தின் கீழ் நிற்றல்
காணீர்!—எங்கும்
காணரும் வீரர்
பெருந்திருக் கூட்டம்
அணியணி யாயவர் நிற்கும்—இந்த
ஆரியக் காட்சியோர் ஆனந்த மன்றோ ?

என்ற வரிகளிலே தேசியக்கொடியின் கீழே நிற்கும் அணி வகுப்புகளைக் காட்டுகின்றார். இதோ, அவர் காட்டும் இன வாரி அணி வகுப்புகள் :—

செந்தமிழ் நாட்டுப்
பொருநர்,—கொடுந்
தீக்கண் மறவர்கள்,
சேரன்றன் வீரர்,
சிந்தை துணிந்த
தெலுங்கர்,—தாயின்
சேவடிக் கேபணி
செய்திடு துளுவர்,

கன்னட ரெட்டிய
ரோடு,—போரில்
காலனு மஞ்சக்
கலக்கும் மராட்டர்
பொன்னகர்த் தேவர்க
ளொப்ப—நிற்கும்
பொற்புடையார் இந்து
ஸ்தானத்து மல்லர்.

பூதல முற்றிடும்
வரையும்—அறப்
போர்விறல் யாவும்
மறப்புறும் வரையும்
மாதர்கள் கற்புள்ள
வரையும்—பாரில்
மறைவருங் கீர்த்திகொள்
ரசபுத்ர வீரர்

பஞ்ச நதத்துப்
பிறந்தோர்,—முன்னைப்
பார்த்தன் முதற் பலர்
வாழ்ந்த நன்னாட்டார்,
துஞ்சும் பொழுதினும்
தாயின்—பதத்
தொண்டு நினைந்திடும்
வங்கத்தி னோரும்

சேர்ந்ததைக் காப்பது
காணீர்—அவர்
சிந்தையின் வீரம்
நிரந்தரம் வாழ்க !

இந்த வரிகளிலே மொழிவாரித் தேசிய இனங்களின் இராணுவ அணி வகுப்பைத்தான் நமக்குக் காட்டுகின்றார் பாரதியார். பொருநர், வீரர், சிந்தை துணிந்த தெலுங்கர், காலனுமஞ்சக் கலக்கும் மராட்டர், ரசபுத்திர வீரர் என்றெல்லாம் பாரதியார் குறிப்பிடுவதால், மொழிவாரி இராணுவ அணி வகுப்புகளையே காட்டுகின்றார் என்று கொள்ளவேண்டி யிருக்கின்றது. இராணுவ வீரர்கள், போரில் திறன் காட்டிப் பெற்ற வீர அணிகலன்களைத் தத்தம் மார்பகங்களிலே பொறித்துக் கொள்வது வழக்கமல்லவா! பாரதி காட்டும் இனவாரி இராணுவ வீரர்களும் வீர விருதுகளான பணிகளைத் தங்கள் மார்பகங் களிலே கொண்டிருப்பதனை,

''பணிகள் பொருந்திய
மார்பும்—விறற்
பைந்திரு வோங்கும்
வடிவமும் காணீர்!''

என்ற வரிகளிலே படம் பிடித்துக் காட்டுகின்றார்.

இன்றைய அரைகுறை, 'தேசியங்கள்' 'இனவாரி ராணுவ அணி வகுப்புகள் அமைந்து விட்டால் தேசியம் அழிந்து விடாதா—?' என்று கேட்கலாம். இந்தக் கேள்வியை எதிர்பார்த்தவர் போல,

'நம்பற் குரியர் அவ்வீரர்—தங்கள்
நல்லுயி ரீந்தும் கொடியினைக் காப்பர்'

என்றார்.

பாரதியின் பாட்டு பகைவனுக்கு வேட்டு!

பாரதியார், வருவதறிந்துரைக்கும் அருட்கவி. நேர்ந்திருக்கும் இந்திய-சின எல்லைப் போர் பற்றியும் அவர் பாடி வைத்துப் போயுள்ளார். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உயர்சாதி இந்துக்கள் இழைத்துவரும் கொடுமைகள் கொஞ்சமல்ல. பல நூறு ஆண்டுகளாக, அவர்களை மலத்தினும் இழிந்தவர்களாக மதித்து, தீண்டவும் மறுத்து வருகிறோம். இந்த அநீதியைக் கடிந்துரைக்கும் பாரதியார்,

> ''ஈனப் பறையர்க
>
> ளேனும்—அவர்
>
> எம்முடன் வாழ்ந்திங்
>
> கிருப்பவர் அன்றோ''?

என்று பாடியவர், ''அவர்கள் அன்னியர் ஆகிவிடுவார்களா?'' என்று கூறவந்த கவிஞர், அந்த அன்னியருக்குச் சீனரை உவமையாகக் குறிப்பிட்டு,

> ''சீனத்த ராய்விடு
>
> வாரோ ?—பிற
>
> தேசத்தர் போற்பல
>
> தீங்கிழைப் பாரோ ?''

என்று பாடியுள்ளார். பாரதியார் ஏகதேசமாகத்தான் சீனரைச் சொல்லிவைத்தார். ஆனால், இப்போது அது எவ்வளவு உண்மையாகப் போய்விட்டது. 'பிறதேசத்தர்' என்பதற்கு அவர் சீனரையே குறிப்பிட்டதால், "சீனத்தார் போலத் தீங்கிழைப்பாரோ?" என்று சொன்னதாகவே கொள்ளவேண்டும்.

இமயத்திற்கும் தமிழினத்திற்கும் ஆதிகாலந் தொட்டே தொடர்பிருந்து வருகின்றது. தமிழ் வேந்தரிலே, சேரலாதன் என்ற சேர மன்னன் 'இமய வரம்பன்' என்றே சிறப்புப்பெயர் பெற்றிருந்தான். இது போன்ற பெயர் வடக்கிலிருந்த வேந்தரெவரும் பெற்றிருந்ததாகச் செய்தியில்லை. இமயம் வரம்பானது, சேரருக்கு மட்டுமன்று; அவர்தம் தாயகத்திற்குமாகும். இதனை உணர்த்தவே,

"மன்னும் இமயமலை
எங்கள் மலையே"

என்றார், பாரதியார். ஆம்; 'எங்கள் மலையே' என்று அவர் பாடியதால், பிற நாட்டவரெவருக்கும் அதன் மீது உரிமையில்லை என்பது உணர்த்தப்பெற்றது.

சேர வேந்தனேயன்றி, சோழ வேந்தனொருவனும் "தூங்கெயிலெறிந்த தொடித்தோட் செம்பியன் (மணி-1:4)" எனப் பெயர் பெற்றிருந்தான். இதுபற்றி டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் தரும் குறிப்பு,

"தேவர்கட்குப் பகைவராகிய அசுரர்களுடைய ஆகாயத்திலே அசைகின்ற மதில்களை அழித்த வீர வளையை அணிந்த தோளுடைய சோழன்"

என்பதாகும். இதனுல், தேவர்களுக்குரிய இமய மலேயில் அசுரர்கள் ஆதிக்கம் பெற்றபோது, அவர்தம் ஆதிக்க மொழித்து தேவர் தலேவனுன இந்திரனுக்கு வெற்றி தேடித் தந்தான் தமிழ் மன்னனுன சோழன் என்று அறி கிருேம். இத்தச் செம்பியனேயே யன்றி இவன் தன் மரபில் வந்தாரையும் வழிவழி வாழ்த்தி வந்துள்ளனர் புலவர் பெருமக்கள். அந்த மரபைப் பின்பற்றி,

"விண்ணே யிடிக்கும்
தலே யிமயம்—எனும்
வெற்பை யடிக்கும்
திறனுடையார்"

என்று பாரதியாரும் பாடியுள்ளார்.

இமயத்திற்கும் பாரதத்திற்குமுள்ள தொடர்பு, தந்தை-மகள் உறவு போன்றதென்பார் பாரதியார்.

"வெண்மை வளரிம
யாசலன் தந்த
விறன்மக ளாம்எங்கள்
தாய்—"

என்ற வரிகள் இதனே வலியுறுத்தும். உறவைக் காத் தோம்பும் பண்பற்ற சீனர், மகளிடமிருந்து தந்தையைப் பிரிப்பது போல, இந்தியாவிலிருந்து இமயத்தைப் பிரித் தெடுக்க முயல்கின்றனர், இந்தியாவின் பாதுகாப்பு இமயத்தைப் பொறுத்ததன்று. இமயமில்லாமலும் இந் தியா வாழும் என்பதனே,

—"அவன்
திண்மை மறையினும்
தான்மறை யாள்நித்தஞ்
சீருறுவாள் எங்கள்
தாய்—"

என்ற வரிகளில் கூறுகிறார். அது உண்மையாயினும், "இமயம், இந்தியாவின் சொத்து" என்று ஆகிவிட்டபிறகு அதனை இழப்பதா?—ஒருபோதுமில்லை. சீனப் படையெடுப் பிற்குப் பின், இமயம், "இந்தியாவின் தன்மானச் சின்னம்" ஆகிவிட்டது! அதனைக் காத்தே ஆகவேண்டும்.

பாரதம் சுதந்தரம் பெற்றதும் நாம் ஆற்ற வேண்டிய ஆக்கப்பணிகளை, 'பாரத தேசமென்று சொல்லுவார்....' என்று துவங்கும் பாடலிலே பட்டியல் தருகிறார். அதிலே,

'வெள்ளிப் பனிமலையின்
மீதுலவு வோம்'

என்று பாடி, இந்தியாவின் வடக்கெல்லையான இமயத்தின் பால் பாரதர்க்குள்ள உரிமையைக் காப்பதற்கே முதலிடந் தந்தார். அடுத்து வரும்,

"அடி
மேலைக் கடல் முழுதும்
கப்பல் விடுவோம்"

என்ற வரிகளிலும், ஏனைய கிழக்கு-மேற்கு-தெற்கு எல்லைப் பகுதிகளைக் கப்பற் படைக்கொண்டு காக்கவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறார். 'அடி' என்ற சொல், 'கீழ்' அல்லது 'கிழக்கு' என்று பொருள் தருவதாகும். 'கடல் முழுவதும்' என்றதால், இந்தியாவின் முப்புறமும் சூழ்ந் துள்ள கடல் முழுவதிலும் நம் போர்க் கப்பல் காவல்செய்ய வேண்டுமென்று கூறியதாகக் கொள்ளலாம். இதே பாட்டில் பிறிதோரிடத்தில், "ஞாலம் நடுங்க வரும் கப்பல் கள் செய்வோம்" என்று கூறினராதலால், அவை போர்க் கப்பல்கள் என்பது புலனாகும்.

இந்தியாவின் பாதுகாப்பை முதலில் வலியுறுத்தி, பிறகே தொழில் வளர்ச்சி—வாணிப வளர்ச்சி கல்வி வளர்ச்சி பற்றக் கூறுகின்றார். அவரது எச்சரிக்கையைப்

புறக்கணித்ததால்தான் பாரதத்தில் சீனன் புகுந்தான், காப்பற்ற வீட்டில் கள்வன் புகுவது போல!

இமயம் இந்தியருடைய தென்றால், அதன் அடிப்பகுதி மட்டுமன்று; முடிப் பகுதியும்தான். இமய முடியை, 'கயிலாயம்' என்றும், 'வெள்ளி மலை' என்றும் சொல்வர் புலவோர். அந்த வெள்ளைப் பொறுப்பும் பாரதத் தாய்க்கே உரிமை என்கிறார் பாரதி. பாரதத் தேவியின் திருத் தசாங் கத்திலே, தேவிக்குரிய 'நாடு' கூறுகையில்,

—"வானாடு
பேரிமய வெற்பு முதல்
பெண்குமரி ஈறாகும்
ஆரியநா டென்றே அறி"

என்று பாடி, 'இமய மலையை வடக்கெல்லையாகக் கொண் டது பாரதம்' என்கிறார். 'வானாடு பேரிமய வெற்பு' என்றதால், கயிலாய முள்ளிட்ட இமயமலையின் உச்சியே இந்தியாவின் எல்லைக்கோடு என்றாகிறது. 'மலை' பற்றிக் கூறுகையில்,

—" ஞாலத்துள்
வெற்பொன்றும் ஈடிலதாய்
விண்ணில் முடிதாக்கும்
பொற்பொன்று வெள்ளைப்
பொருப்பு."

என்கிறார். 'விண்ணில் முடிதாக்கும் வெள்ளைப் பொருப்பு' என்றதால், இமய உச்சியே இந்தியாவின் எல்லைக்கோடு என்பது உறுதியாகிறது.

இமயச் சிகரமான வெள்ளைப் பொருப்பே இந்தியாவின் வடக்கெல்லைக் கோடு என்ற கருத்து இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்தே இந்தியரிடை நிலவி வருகிறது. ஆனால், இமய உச்சியில் தங்கி, சாவடிகள் அமைத்துக்

காவல் காக்க அன்றும் முடியவில்லை; இன்றும் முயன்றதில்லை. அதனால்தான், அந்தக் குறையகல சுதந்தர பாரத மக்களுக்கு "வெள்ளிப் பனி மலையின் மீதுலவுவோம்" என்று பாடி ஆணையிட்டார் பாரதியார்.

பாரதியாருக்கும் வழிகாட்டியாக, இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்த இளங்கோவடிகளும், "வெள்ளிப் பனி மலையின் மீதுலவுவோம்" என்று பாடினர்.

கண்ணகி—கோவலர் திருமணத்தில், மணமக்கள் பள்ளியறை சேர்க்கப்படுங்கால், இளம் பெண்கள் ஆரத்தி எடுத்து, திருஷ்டி கழித்து வாழ்த்துப் பாடுகின்றனர்.

"இப்பால் இமயத்து இருத்திய வாள்வேங்கை
உப்பாலைப் பொற்கோட்டு உழையதா;"

என்பது அப்பாடல். ஆம்; சோழன் கரிகால் வளவன், வெள்ளி மலையில் தன் புலிக்கொடியைப் பொறித்து, அதுவே 'பாரதத்தின் எல்லைச் சின்னம்' என்று முத்திரை போட வடவிமயம் சென்றானும். ஆனால், இயற்கையின் ஆற்றலை வெல்ல இயலாமல் இமய உச்சிக்குக் கீழே பிடரியில் கொடி பொறித்துத் திரும்பினானும். அந்தக் கொடியை "இமயத்தின் உச்சியான வெள்ளி மலைக்கும் கொண்டு செல்லும் வீர மக்களைப் பெற்றெடுங்கள்" என்று கூறி வாழ்த்துகின்றார்கள். "பொற்கோட்டு உழையதா" என்பதற்கு, "இமய உச்சியிலும் நமது கொடி பறக்கட்டும்" என்றே பொருள்.

பண்டைத் தமிழ் வேந்தர், பாரதம் முழுவதையும் தங்கள் தாய் நாடாகக் கருதினராகையால், வடக்கெல்லைக் கோடான வெள்ளி மலையைக் காப்பதைத் தங்களுடைய கடமையாகக் கருதினர். அதனாலன்றோ,

"முடிமன்னர் மூவருங்
காத்தோம்புந் தெய்வ
வடபே ரிமயமலை"

என்ருர் இளங்கோவடிகள். இந்த மரபை யொட்டியே, "மன்னுமிமயமலை எங்கள் மலையே" என்ருர் பாரதி.

சீனப் படையெடுப்பின் எதிரொலியாக சில பிரச்னை கள் தோன்றி யுள்ளன. வல்லரசு மண்டிலங்கள் எதிலும் சேராமல் நடுநிலைமை வகிக்கின்றது பாரதம். இதனை வெறுத்துப் பேசி, "அமெரிக்க—பிரிட்டிஷ் வல்லரசு முகாமுக்கு ஓடு" என்று நேருவை சிலர் விரட்டிக்கொண் டிருக்கின்றனர். இது பற்றிப் பாரதியின் கருத்தென்ன?

"அழிவே வருவதாயினும் நடுவுநிலைமை காக்கப்பட வேண்டும்" என்று சொல்லாமல் சொல்லுகிருர் பாரதி. முதல் உலகப் பெரும் போரில், தன் படைகளை பெல்ஜிய நாட்டின் வழியாகப் பகை நாட்டிற்குள் நுழைக்க விரும்பி யது ஜெர்மனி. அதற்காகத் தன்னுடன் ராணுவ ஒப்பந்தம் செய்துகொள்ளும்படியும் பெல்ஜியத்தை அழைத்தது. பெல்ஜியம் அதற்கு இணங்காததோடு, ஜெர்மானியப் படை கள் செல்ல வழிவிடவும் மறுத்து நடுநிலைமையைக் காப்பாற்றிக்கொள்ள முனைந்தது.

போர்வெறி பிடித்த ஜெர்மன், பெல்ஜியத்தின் மீது போர் தொடுத்தது. அதன் முடிவென்ன? பெல்ஜியம் வீழ்ந்தது. புலவர்கள் வென்ற நாட்டிற்கே வாழ்த்து கூறுவார்கள். பாரதியாரோ, தன் நடுநிலையைக் காக்க முயன்று வீழ்ந்துவிட்ட பெல்ஜியத்தை வாழ்த்துகின்ருர்.

"அறத்தினுல் வீழ்ந்துவிட்டாய்;
அன்னியன் வலியனுகி"

என்று துவங்கும் பாடலுக்கு "பெல்ஜியம் நாட்டிற்கு வாழ்த்து" என்றே பெயரிட்டிருக்கிருர் பாரதியார். ஆம்; வீழ்ந்துவிட்ட நாட்டிற்கு வாழ்த்து!

'யாருக்கே பகை யென்றாலும்
யார்மிசை யிவன்சென் றாலும்
ஊருக்குள் எல்லை தாண்டி
உத்தர வெண்ணிடாமல்,
''போருக்குக் கோலம் பூண்டு
புகுந்தவன் செருக்குக் காட்டை
வேருக்கும் இடமில்லாமல்
வெட்டுவேன்'' என்று நின்றாய்'

என்கிறார். 'வேறு ஒரு நாட்டின்மீது படையெடுத்துச்செல்பவனை நாம் ஏன் தடுத்து நிறுத்தவேண்டும்; வழிவிட்டு ஒதுங்குவோம்' என்று எண்ணவில்லையாம் பெல்ஜியம்.

'வீரத்தால் வீழ்ந்து விட்டாய்;
மேல்வரை யுருளுங் காலை
ஓரத்தே ஒதுங்கித் தன்னை
ஒளித்திட மனமொவ் வாமல்
பாரத்தை எளிதாக் கொண்டாய்;
பாம்பினைப் புழுவே யென்றாய்;
நேரத்தே பகைவன் தன்னை
'நில்'லென முனைந்து நின்றாய்.

'மானத்தால் வீழ்ந்து விட்டாய்;
மதிப்பிலாப் பகைவர் வேந்தன்
வானத்தாற் பெருமை கொண்ட
வலிமைதான் உடைய னேனும்
ஊனத்தால் உள்ள மஞ்சி
ஒதுங்கிட மனமொவ் வாமல்
ஆனத்தைச் செய்வோ மென்றே
அவன்வழி யெதிர்த்து நின்றாய்!

'மருளுறு பகைவர் வேந்தன்
வலிமையாற் புகுந்த வேளை
''உருளுக தலைகள்! மானம்
ஓங்குக!'' என் றெதிர்த்து நின்றாய்.'

என்றெல்லாம் புகழ்ந்து புகழ்ந்து பாடுகின்ருர் பாரதி.

சீனத்தின் படைபலம் பெரிது; அதனுல், பாரதம் பணிந்ததா? இல்லே. "உருளுக தலேகள்; மானம் ஓங்குக" என்று கோஷிக்கிறது பாரதம்.

பெல்ஜியத்தின் நேர்மையை, வீரத்தை, நீதிக்காகப் போராடிய தீரத்தை, தமிழினத்து மறத்தியின் வீரத்தோடு ஒப்பிட விரும்பி,

"முறத்திஞல் புலியைக் காக்கு
மொய்வரைக் குறப்பெண் போலத்
திறத்திஞல் எளியை யாகிச்
செய்கையால் உயர்ந்து நின்ருய்!"

என்று பாடுகின்ருர். 'எல்லேயோரத்தில் சீனர் படை எடுப்பு' என்று கேட்டதுமே, "அவனேக் கூப்பிடு; இவனேக் கூப்பிடு" என்று கூக்குரலிடுகின்றனர் சிலர். "வெற்றி யாயினும், வீழ்ச்சியேயாயினும், நம் வீரர்களேக் கொண்டே போரிடுவோம்; அன்னியப்படைக்கு அழைப்பு விடோம்" என்கிருர் நேரு. அதுதான் பாரதி பாதை!

"சீனத்தோடு எல்லேத் தகராறு பல்லாண்டுகளாக இருந்தும், போருக்கு நாட்டைத் தயாரிக்கத் தவறியதேன்?" என்கின்றனர் பெரியவர்கள் சிலர். "தருமத்தை நம்பி யிருப்பவன், அப்படித்தான் இருப்பான்—இருக்க வேண்டும்" என்கிருர் பாரதி. "கண்ணன் என் அரசன்" என்ற பாட்டிலே,

"பகைமை முற்றி முதிர்ந்திடு மட்டிலும்
பார்த்திருப்ப தல்லால் ஒன்றுஞ் செய்திடான்;
நகைபுரிந்து பொறுத்துப் பொறுத்தையோ
நாட்கள், மாதங்கள், ஆண்டுகள் போக்குவான்.

என்ற வரிகளிலே, சீன ஆக்கிரமிப்பு விஷயத்தில் எல்லையற்ற பொறுமை காட்டிவந்த நேருவையே காட்டுகிறார்.

'நேருவின் தலைமை நீடிக்கும்வரை சீனரை நாம் வெல்ல முடியாது' என்று சிலர் பேசக்கேட்கிறோம். இதோ, அவர்களையும் காட்டுகிறார்:

கண்ணன் வென்று பகைமை யழிந்து நாம்
கண்ணிற் காண்ப தரிதெனத் தோன்றுமே;
எண்ணமிட் டெண்ண மிட்டுச் சலித்துநாம்
இழந்த நாட்கள் யுகமெனப் போகுமே.

"அமெரிக்காவிடம் ஆயுதம் அப்போதே கேட்டு வாங்கியிருக்கக் கூடாதா? பிரிட்டனிலிருந்து பெருஞ் சேனையைக் முன்பே வருவித்திருக்கக் கூடாதா?" என்றெல்லாம் கேட்டு, "நேரு யுத்த காலத்திற்குத் தலைமை தாங்கத் தகுதியற்றவர்" என்று தீர்ப்பளிக்கிறார்கள் சில மேதைகள். அவர்களையும் காட்டுகிறார் :

படைகள் சேர்த்தல்
　　பரிசனம் சேர்த்திடல்
பணமுண் டாக்கல்
　　எதுவும் புரிந்திடான்;
'இடையன், வீரமி
　　லாதவன், அஞ்சினேன்'
என்றவர் சொலும்
　　ஏச்சிற்கு நாணிலான்

இந்தப் பாடல், நேரு எதிர்ப்பாளர் குரலை எவ்வளவு தெளிவாகப் பதிவு செய்கிறது?

முடிவு என்ன? நேர்மையாளர்கள் காலத்தை எதிர் பார்த்துக் காத்திருப்பார்களாம். பொறுமை காட்டியும் போர் மூண்டால், அறத்தை நம்பும் ஆட்சித் தலைவன் என்ன செய்வான் தெரியுமா? இதோ, பாரதியே கூறுகிறார்:

காலம் வந்துகை கூடுமப் போதிலோர்
கணத்திலே புதிதாக விளங்குவான்
ஆல கால விடத்தினைப் போலவே
அகில முற்றும் அசைந்திடச் சீறுவான்
வேரும் வேரடி மண்ணுமிலாமலே
வெந்து போகப் பகைமை பொசுக்குவான்
பாரும் வானமும் ஆயிர மாண்டுகள்
பட்ட துன்பங் கணத்திடை மாற்றுவான்.

இதில், வரிக்கு வரி நேருவின் நெறியையே காண் கிறோம். ஆவேசங் கொண்டார் நேரு; அகிலமே அசையக் காண்கிறோம்!

பாரதியார் பாடல்கள், எதற்கும் எந்தக் காலத்திற்கும் பொருந்தக்கூடிய தீர்க்கதரிசனக் கருத்துக்கள்.

பாரதி பாடல்களை நெஞ்சில் பதியவைத்து, நேருவை ஆதரித்து நிற்போம்!

பாரதியின் பாட்டு, பகைனுக்கு வேட்டு!

வாழ்க, பாரதி!

வெல்க, பாரதம்!

[1962-ஆம் ஆண்டு அக்டோபரில் சீனப் பெரு நாட்டின் படைகள் இயத்தின் மீது உரிமை கொண்டாடி பாரத நாட்டின் எல்லையைத் தாண்டி வந்த போது 'செங்கோல்' (9—12—62) இதழில் எழுதியது].

———

2DA
14-67

பூங்கொடி பதிப்பகம்

மயிலாப்பூர் :: சென்னை-4.